

கிராம நலம்
ஜனவரி 1967

# பஞ்சாயத்துக் கூட்டங்கள்



ஜனநாயகப் பண்பினை வளர்க்கும் நிலைக்களன்கள்

கிராமநலம்

கதிர் 12 ஜனவரி, 1967 நெல் 4

# தேனம்பேட்டை பொருட்காட்சி

கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி என்பது, காந்தியடிகள் நமக்குக் கற்றுத்தந்த அறிவுரையாகும். கிராமங்களின் வளர்ச்சிக்கு முதலிடம் தந்து, மக்களின் நல்வாழ்வுக்கான ஆக்கத் திட்டங்களை நிறைவேற்றும் ஆற்றலை வளர்த்துக்கொள்வதே, சமுதாயத் தொண்டர்களின் முக்கிய குறிக்கோள் என்பதை, அவர் வலியுறுத்தி வந்தார். பாரத நாட்டின் விடுதலை இயக்கத்துக்கு உயிர் மூச்சாக விளங்கியது, அவர் வகுத்துத் தந்த கிராம நிர்மாணத் திட்டங்களேயாகும்.

இந்திய மக்களின் வாழ்வை வளம்படுத்தும் திட்டங்கள் பலவும், படிப்படியே நிறைவேறி வருவதை, அனைவரும் அறிவர். குறிப்பாக, பாரத நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களால், நமது நாட்டின் சூழ்நிலையே மாறிவருவதைக் காண்கிறோம். குறிப்பாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உணவு உற்பத்தித் திட்டங்களுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது. உணவைப் பெருக்கும் முயற்சிகள், பெரும்பாலும் கிராமங்களிலேயே நடைபெறவேண்டும். எனவே, கிராம வளர்ச்சித் துறை, பல்வேறு திட்டங்களை உருவாக்கி நடத்த, சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், கிராம வளர்ச்சித் துறை வகுத்துள்ள திட்டங்கள், ஏற்படுத்தியுள்ள சாதனைகள் முதலியவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில், சென்னை மாநகரில் நடைபெறும் தேனம்பேட்டை பொருட்காட்சியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிலும், உற்பத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் இரண்டரை லட்சம் தொகை பற்றிய விவரங்கள், கிராம மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டங்களைப்பற்றிய குறிப்புகள், நடைமுறை விளக்கம், சத்துணவுத்திட்டம், ஜனநாயக அதிகாரப் பரவல் முறை, காந்தியடிகள் நூற்றாண்டு விழாக் குறிப்புகள் முதலியன, இந்தப் பொருட்காட்சியில் கிராம வளர்ச்சி அரங்கில் இடம் பெற்றுள்ளன. பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள கிராமக் கைத்தொழில் நிலையங்கள், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம் குருந்தங்கோடு யூனியனில் செய்யப்பட்ட அழகான பொம்மைகள் மற்றும் கைவண்ணப் பொருள்களையும் இங்கே காணலாம்.

### கற்பனைக் கிராமம் அல்ல !

காந்தியடிகள் கண்ட இலட்சியக் கிராமத்தைப் பற்றி, பொதுமக்கள் நன்கு அறிவர். அந்த இலட்சியக் கிராமத்தை உருவாக்க முடியுமா என்று ஐயுறுவோர், இத்தகைய பல கிராமங்கள் மக்களின் கூட்டுறவு முயற்சியினால், இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் உருவாகியிருப்பதை காணமுடியும். நமது தமிழ் நாட்டில், கிராம வளர்ச்சிக்கான எல்லா நிறுவனங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு கிராமத்தின் தோற்றம், இந்தப் பொருட்காட்சியில் கிராம வளர்ச்சி அரங்கில் அமைக்கப்பட்டுள்ளது. "கற்பனைக் கிராமம் அல்ல!" என்ற தலைப்பில் களியாம்பூண்டி (செங்கற்பட்டு மாவட்டம், உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியன்) கிராமத்தில் உள்ள பல்வேறு நிறுவனங்கள் (பஞ்சாயத்து, கூட்டுறவுச் சங்கம், விவசாய பாங்கி, பள்ளிக்கூடங்கள்——ஆரம்ப நிலை—உயர்நிலைப் பள்ளி, கிராம மருந்தகம், கால்நடை மருத்துவமனை, தாய் சேய் நல விடுதி, குழந்தைகள் பூங்கா, விளையாட்டரங்கம், மாதர் சங்கம், வானொலி மன்றம், கிராமக் கைத்தொழில் நிலையங்கள் கண்ணாம்புக் காளவாய், பனைஓலையிலிருந்து கைவேலைப் பொருள்கள் செய்தல், பஞ்சாயத்துத் தோட்டங்கள்) ஆகியவற்றை ஒரு சேரக் காணலாம்.

இதைக் கண்ணுறும் ஒவ்வொருவர் உள்ளத்திலும், தம்தம் கிராமங்களை, இதைப் போலவோ, அல்லது இதைவிட மேலான முறையிலோ, வளர்ச்சி அடைய முயலும் உறுதிகொண்டால், கிராம வளர்ச்சி நாடெங்கும் சிறந்து விளங்குவது நிச்சயம்.

# காந்தி நூற்றாண்டு விழா

### பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு நேர்முகக் கடிதம்

*அன்புடையீர்,*

வணக்கம். 1969-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி அன்று காந்தியடிகள் பிறந்து, ஒரு நூற்றாண்டு முடிவடைகிறது. இந்த நிறைவு விழா நூற்றாண்டு விழாவாக, இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாட, ஏற்பாடுகள் நடந்து வருவது, தாங்கள் அறிவீர்கள். அகில இந்திய அடிப்படையில் ஒரு குழு இந்த ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது. தமிழ்நாட்டிலும் நூற்றாண்டு விழாக் குழு ஒன்று, மாநில முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவின் உப குழுவாக 'கிராம நல உட்குழு' இயங்கி வருகிறது. இந்த உட்குழுவின் செயலாளராக நான் பணியாற்றுகிறேன். இந்த உட்குழுவில் பணியாற்றும் அங்கத்தினர்களின் பெயர், மற்ற விவரங்கள் அடங்கிய நகல் ஒன்றும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

இந்த உபகுழுவின் கூட்டம் 1966-ம் வருடம் நவம்பர் மாதம் 19-ம் தேதி அன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தின் முடிவுகளைப் பற்றித் தங்களுக்கு தெரிவித்துத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் கோரும் முறையில் தான், இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன்.

(அ) பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்மூலமாக, பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, இந்த விழாவின் ஏற்பாடுகள், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் செய்யப்பட வேண்டும் என்பது குழுவின் ஒருமனதான கருத்து.

(ஆ) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், பஞ்சாயத்து யூனியன் தலைவர் உட்பட பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர், மற்றும் அந்தப் பகுதியில் உள்ள நிர்மாண ஊழியர்கள், மாநில சட்டசபை உறுப்பினர், பார்லிமெண்டு உறுப்பினர், நூற்றாண்டு விழா குழுவின் உறுப்பினரில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள், ஆகியோர் அடங்கிய ஒரு பொதுக்குழு அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவின் ஆலோசனைப்படி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவும் திறமையுடன் இயங்கி, வேலை செய்யும் குழுவாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அமைக்கப்படும் குழு, டிசம்பர் மாத இறுதிக்குள் அமைக்கப்பட வேண்டும். மாவட்டக் குழு அமைப்பு பற்றிய விவரங்களைப் பின்பு தெரிவிக்கிறேன்.

(இ) ஒவ்வொரு பஞ்சாயத்திலும், மக்கள் தங்கள் ஒன்று சேர்ந்த முயற்சியினால், காந்தியடிகள் நினைவுச் சின்னமாக, கீழ்க்கண்டவற்றில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ, தங்கள் முழு சக்திக்கு ஏற்ற வகையில், கிராமத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும். தங்கள் தேவைகளுக்குத் தகுந்தவாறு இவைகளை கிராமக்குழு நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

1. கிராமக்குடித் தண்ணீர் கிணறு. கிராமக் குடித்தண்ணீர் தொட்டி.
2. பள்ளிக்கட்டிடம்.
3. மருத்துவநிலையக் கட்டிடம். மருத்துவ வசதிகள்.
4. சமுதாய மன்றக் கட்டிடம்.
5. பள்ளிக்கு 5 ஏக்கர் நில நன்கொடை.

இந்த அர்ப்பணிப்பில், சர்க்கார் மற்ற பஞ்சாயத்து நிறுவனங்களின் நிதி உதவிகளுக்கு இடமேயில்லை. இவற்றிற்கான தொடக்க வேலைகள் உடனடியாக துவக்கப்பட

வேண்டும். 1969-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி அன்று காந்தி நூற்றுண்டு விழா என்ற போதிலும், எல்லா வேலைகளையும் 1969-ம் ஆண்டுவரை ஒத்திப் போடுவது உசிதமல்ல. 1967-ம் ஆண்டிலேயே ஒரு சில வேலைகளையும், 1968-ல் சில வேலைகளையும், 1969-ல் எஞ்சியுள்ள வேலைகளையும் முடிக்கும்படி நாம் திட்டம் வகுத்துக்கொள்ளவேண்டும். இந்த வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நுட்ப உதவிகளைப் பஞ்சாயத்து யூனியன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த இடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாக்கள் தேவையில்லை, நடத்துவதும் நல்லதல்ல. அர்ப்பணிப்பு விழா ஒன்று தான் பொருத்தமானது. அது தான் காந்தியடிகள் நினைவுக்கு நாம் செலுத்தும் முறையான அஞ்சலி.

3. பஞ்சாயத்து யூனியன் குழு அமைக்கும் வேலை, டிசம்பர் மாத இறுதிக்குள் முடிவு பெற வேண்டும் என்று தங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். குழுவின் அங்கத்தினர்களின் பெயர், தொழில், முகவரி இவைகள் அடங்கிய பட்டியல்களை அப்போதைக்கப்போது கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மற்ற கடிதங்களையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) கா. திரவியம்,
செயலாளர், காந்தி நூற்றுண்டு விழா,
'கிராம நல உட்குழு.'

முகவரி :—

கா. திரவியம்,
செயலாளர், காந்தி நூற்றுண்டு விழா,
(கிராமநல உட்குழு.)
கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

---

## கிராம மாணவர்களின் கணிதத் திறன்

*கோயம்புத்தூர் நகர உயர்நிலைப்பள்ளிகள் சிலவற்றில் பத்தாவது வகுப்பில் படிக்கும் மாணுக்கர்களின் கணிதத் திறமையைப்பற்றி, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் ஓர் ஆராய்ச்சி செய்தனர். இவ்வாராய்ச்சியில், நகர மாணவர்களின் கணிதத் திறமையையும், பக்கத்து கிராமங்களிலிருந்து வந்து கற்கும் கிராம மாணவர்களின் கணிதத் திறமையையும் ஒப்பிட்டு நோக்கினர். அவ்வாராய்ச்சியின் விளைவாக, கீழ்க்கண்ட சில ருசிகரமான முடிவுகள் கிடைத்தன :—*

* கணிதத் திறமையைப் பொறுத்தவரை, நகரத்து மாணவர்களை விட, கிராமத்து மாணவர்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகத் திறமை வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

* இம்மாணவர்களில், கிராமப் பெண்களைவிட, கிராமப்பையன்கள் கணிதத் திறமை மிக்கவர்களாக உள்ளனர்.

* அதே போன்று நகரத்துப் பையன்கள், பெண்களைக் காட்டிலும், கிராமப் பையன்களே கணிதத்தில் அதிக மதிப்பெண்கள் பெறுகின்றனர்.

* நகர, கிராமப் பெண்களின் கணிதத்திறன் ஒரேயளவாகத்தான் உள்ளது.

* கிராமக் குடும்பங்களின் கல்வி-பொருளாதார நிலை கிராம மாணவர்களின் கல்வித் திறமையை ஊக்குவிப்பதுபோன்று, நகரக் குடும்பங்களின் கல்வி-பொருளாதாரநிலை நகர மாணவர்களை ஊக்குவிப்பதில்லை.

* நகரமாயினும், கிராமமாயினும், குடும்ப அளவுக்கும் மாணவர்களின் கணிதத் திறமைக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை.

* நகரத்து மாணவர்களைவிட, கிராமத்து மாணவர்கள் தனியாகவே கணக்குப் போடும் திறன் பெற்றுள்ளனர்; வீட்டுப்பாடங்களைச் செவ்வனே செய்கின்றனர். நகரக் குடும்பங்களைக்காட்டிலும் கிராம மாணவ இல்லங்களில் படிப்பதற்கெனத் தனியிடம் ஒதுக்கப்படுகின்றது; படிப்பதற்குக் குடும்பத்தாரின் உதவியும் கிடைக்கிறது.

* கிராம நகர மாணவர்களில் பெரும்பான்மையோர் மருத்துவத்துறைக்குச் செல்லவே விரும்புகின்றனர். இத்துறைக்கு அடுத்தபடியாக நகரத்து மாணவர்கள் ஆசிரியர் தொழிலுக்கும், கிராமத்து மாணவர்கள் சட்டத் துறைக்கும் செல்ல விரும்புகின்றனர்.

[*ஆதாரம்* : Journal of Educational Research and Extension Vol III, No. 1, July, 1966, Pages 22-28.]

# பஞ்சாயத்து உணவு உற்பத்தித் திட்டம்

[திரு A. வெங்கட்ராமன், கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (பயிற்சி,) சென்னை-9.]

பொருளாதார வளர்ச்சிக்கு, நாட்டின் நல்வாழ்வுக்கு அடித்தளம், உணவு உற்பத்தி. உணவு உற்பத்தித் திட்டங்கள் திட்டுவோர், நல்ல முறையிலே அவற்றை அமைத்து விடலாம். அவற்றைத் திறம்பட நிறைவேற்ற திறமை மிக்கோரையும், வேண்டிய சாதனங்களும் காலத்தே கிடைப்பதற்கு வழிவகைகளையும் வகுத்துவிடலாம். இவையெல்லாம் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்டாலும், இத்திட்டங்களின் வெற்றி, உழவர் பெருமகனையே பெரிதும் சார்ந்திருக்கிறது. தொன்று தொட்டுவரும் பழமையான வேளாண்மை முறைகளால், எத்துணை பயன்பெற முடியுமோ, அத்தனையும் நாம் பெற்றுவிட்டோம். இனியும், விளைச்சலைப் பெருக்க, பழைய முறைகள் பயன் தராது. ஆராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டறிந்த புதிய விஞ்ஞான முறைகளைப் பின்பற்றுவதே, கண்டு முதலைப் பெருக்குவதற்கு உகந்த வழி என்பதை உணர்ந்து, விவசாயி, புதிய முறைகளைப் பரந்த அளவில் கடைப்பிடிப்பதையே பொறுத்திருக்கிறது, நமது உணவு உற்பத்தித் திட்டங்களின் முழுவெற்றி. இந்த மனமாற்றத்தை உண்டாக்கி, உழவர்களை உற்பத்தித் துறையிலே ஊக்குவித்து, அவர்களுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் காலத்தே செய்து தந்து, நாட்டு மக்கள் நலமுற வாழச் செய்வது, மக்கள் ஆட்சியின் ஆணிவேராக கிராம மத்தியிலே பணியாற்றும் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பாகும்.

பஞ்சரயத்து நிறுவனங்களின் முக்கிய பொறுப்பான உணவு உற்பத்தியை நல்ல முறையிலே நிறைவேற்ற தமிழ்நாட்டில் மூன்றாவது திட்டக் காலத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வேளாண்மை, கால்நடை, மீன் வளம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கென ரூபாய் இரண்டு லட்சம் அரசாங்கம் மானியமாக வழங்கியது. இந்நிதியின் உதவியால் நிறைவேற்றவேண்டிய திட்டங்கள் என்னென்ன என்பதையும் அரசாங்கமே வகுத்து அவற்றை செயலாற்றும் பொறுப்பை யூனியன்களிடம் ஒப்படைத்தது. தங்களிடம் இவ்வாறு கொடுக்கப்பட்ட பொறுப்பை பெரும்பான்மையான யூனியன்கள் மிகவும் திறமையாக நிறைவேற்றின.

### அரிய வாய்ப்புகள்—புதிய பொறுப்புகள்

இந்த அனுபவத்தை அடித்தளமாகக் கொண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு, புதிய கண்ணோட்டத்தோடு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உணவு உற்பத்தித் துறையில் மேலும் அரிய வாய்ப்புகளையும், புதிய பொறுப்புகளையும் அரசாங்கம் அளித்துள்ளது. இதுவரை திட்டம் இடும் பணி, மாநில அரசாங்க அலுவலர்களின் தனிப் பொறுப்பாக இருந்தது. தமிழ்நாடு முழுவதற்குமாக வரையப்பட்ட இத்திட்டங்கள்—அவை குறிப்பிட்ட வட்டாரத்திற்கு முழுவதும் பொருந்துவதாக, தேவையானதாக இருப்பினும் இல்லாவிடினும் — செயலாற்றுவதற்காக யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலை மாறி, வட்டாரத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு தேவைக்கேற்ற திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். திட்டங்களைத் திறம்படச் செயலாற்றுவதில் மட்டுமல்லாமல், அவற்றை வடிவமைக்கும் பொறுப்புகளையும், வட்டாரத்தின்

வசதிகளையும் தேவைகளையும் நேரிடையாக அறிந்த பஞ்சாயத்து பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற புதிய நோக்கோடு, நான்காவது திட்டக் காலத்திற்கு ஒவ்வொரு யூனியனையும் ஓர் உணவு உற்பத்தித் திட்டம் தயாரித்து அனுப்ப, அரசாங்கம் பணித்தது. இதன் பயனாகப் பெற்ற, திட்டங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அவற்றை, அவசியமான திட்டங்கள், விருப்பத் திட்டங்கள், வட்டாரத்திற்கான தனித் திட்டங்கள் என்ற மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரித்து, அவற்றை செயலாற்றும் பொறுப்பை யூனியன்களிடம் அரசாங்கம் ஒப்படைத்துள்ளது.

### போதிய நிதி வசதி

இத் திட்டங்களை நிறைவேற்ற, திட்டக் காலமான ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு யூனியனுக்கும் அரசாங்கம் ரூபாய் இரண்டு இலட்சம் மானியமாக அளிக்கும். இந்த மானியத் தொகையைப் பெற ஒவ்வொரு யூனியனும் தனது பங்காகக் குறைந்தது ரூபாய் 50,000 முன்பணமாகச் செலுத்தவேண்டும். இந்த பங்குத் தொகையில் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் அடங்கும். எனவே, ஐந்தாண்டுக் காலத்திற்கு, உணவு உற்பத்தித் துறைக்காக செலவிடுவதற்கு, ஒவ்வொரு யூனியனிடமும் குறைந்தது இரண்டரை லட்ச ரூபாய் நிதி வசதி இருக்கும். இந்நிதியைக் கொண்டு தன்னுடைய வட்டாரத்தின் தேவைக்கேற்ற உணவு உற்பத்தித் திட்டங்களை செயலாற்ற வேண்டியது யூனியன்களின் பொறுப்பாகும்.

### 'இன்றியமையாத் திட்டங்கள்'

ஒவ்வொரு யூனியனும் தன்னுடைய தலையாய பொறுப்பாகச் செயலாற்ற வேண்டிய திட்டங்கள் "அவசியமான திட்டங்களில்" இடம் பெறுகின்றன.

இவற்றில், கிராமப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களில் புதிய தோட்டங்கள் அமைத்தல், ஏற்கனவே, அமைக்கப்பட்டுள்ள தோட்டங்களைப் பராமரித்தல் ;

அதிக மேனி தரும் தரமான பொறுக்கு விதைகளை கிராம விதைப் பண்ணைகள் மூலம் விருத்திசெய்து எல்லா விவசாயிகளுக்கும் விதை மாற்றும் மூலம் கிடைக்கச் செய்வது ;

நிலத்தின் தன்மையைக் காத்து மேம்படுத்துவதும், நல்ல விளைவுக்கு அவசியமான சத்தை, குறைந்த விலையில் தருவதுமான, பசுந்தழை உரப் பயிர்கள், வயலிலே வளர்க்கும் பழக்கத்தை ஊக்குவிக்க, சகாய விலையில், உரப் பயிர் விதைகளை விநியோகிப்பது;

கால விரயத்தையும், வேலைப் பளுவையும், பொருள் செலவையும் குறைப்பதற்கெனவும், வேளாண்மையைப் புதிய முறைகளில் செய்வதற்கெனவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பார்மிய சட்டுன், வரப்பு கட்டும் கருவி, பார் கலப்பை, இறக்கைக் கலப்பைகள், டஸ்டர்கள் போன்ற கருவிகளைப் பாதி விலையில் விநியோகிப்பது;

பழக் கன்றுகள், தரமான காய்கறி நாற்றுகள் முதலியவற்றை தயாரித்து வீட்டுத் தோட்டங்களுக்கு இலவசமாக வழங்குவது ;

புதிய விவசாய முறைகளை, செயல்முறை விளக்கப் பண்ணைகள் மூலம் விவசாயிகளிடம் பரப்புவது ;

விவசாயக் கிடங்குகள், கால்நடை மருந்தகங்கள் கட்டுவது, போன்ற திட்டங்கள் அடங்கும்.

இத் திட்டங்கள் வட்டாரங்களின் அடிப்படைத் தேவைகளை கருத்தில் கொண்டு தொகுக்கப்பட்டன. எனவே இத் திட்டங்களை, தகுந்த காரணம் இருந்தாலன்றி, அவசியமாக யூனியன்கள் நிறைவேற்ற வேண்டும்.

### விருப்பத் திட்டங்கள்

இரண்டாவது பகுதியான "விருப்பத் திட்டங்களில்" பல திட்டங்கள இடம் பெறுகின்றன. தென்னங் கன்றுகள், ஒட்டுச் செடிகள், காய்கறி விதைகள், சகாய விலையில் விநியோகிப்பது, விவசாயிகளுக்கு வேண்டிய உழவு கருவிகளையும் அவைபோன்ற ஏனைய சாதனங்களையும் பொதுவாக பஞ்சாயத்துக்களிலும், யூனியன் அலுவலகங்களிலும் வாங்கி வைத்து வாடகைக்குத் தருவது, யூனியன் நிலங்களில் தோட்டங்கள் அமைத்தல், விவசாயக் கண்காட்சிகள் போட்டிகள் நடத்துவது போன்றவை விவசாயப் பகுதியில் முக்கியமானவை.

கால்நடை வளர்ச்சிக்காக, பொலி காளைகள் வழங்குவது, மாட்டுக் கொட்டில் அமைத்தல், புல் வளர்ப்பது ஆட்டுக்கிடா, ஜாதிச் சேவல், உயர் ரக பன்றிகள் வழங்குவது, கோழிப் பண்ணைகள் அமைப்பது ஆகிய திட்டங்கள் இந்தப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளன.

### மீன்வளர்ச்சிக்கான திட்டங்கள்

மீன் வளர்ச்சிக்காக, வட்டாரங்கள் ஆங்காங்கே உள்ள வசதிகளுக்கு ஏற்ப, கடலோர வட்டாரங்கள், நீண்ட நாட்கள் தண்ணீர் நிற்கும் நீர் நிலைகள் உள்ள வட்டாரங்கள், குறைந்த காலத்திற்குத் தண்ணீர் வசதியுள்ள வட்டாரங்கள், மீன் அபிவிருத்திக்கு வசதியில்லாத வட்டாரங்கள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவின் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப நைலான் வலை கொடுப்பது, மார்க்கெட்டுகள கட்டுவது, நீர் நிலைகளை மராமத்து செய்தல், மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், விரைவில் பெருகும் மீன் குஞ்சுகள் விநியோகிப்பது போன்ற திட்டங்களை யூனியன்கள் செயலாற்றலாம்.

இந்த "விருப்பத் திட்டங்களி" லிருந்து ஒவ்வொரு யூனியனும் தன்னுடைய வட்டாரத்திற்குப் பொருத்தமான, தேவையான திட்டங்களைப் பொறுக்கி எடுத்துக் கொளளலாம். உதாரணமாக, ஒரு வட்டாரத்தில் கால்நடை வளர்ச்சிக்கு அதிக வசதியும் தேவையும் இருந்தால், அந்த வட்டாரம் கால்நடை அபிவிருத்திக்கான திட்டங்களை அதிகமாக எடுத்துக்கொண்டு, மற்றவற்றைக் குறைத்துகொள்ளலாம்.

## திருநெல்வேலி மாவட்டத்தில் ராமாநதி பாசனத்திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் ராமாநதி பாசனத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ரூ. 87 லட்சம் செலவிட அரசாங்கம் அனுமதித்துள்ளது. நான்காவது திட்ட வேலைகளில் ஒன்றாக இதை எடுத்துக்கொள்ள, மத்திய அரசாங்கமும் இசைவு அளித்துள்ளது. இத் திட்டம் நடப்பாண்டிலேயே எடுத்துக்கொள்ளப்படும். இதன்படி ராமாநதியின் குறுக்கே 150 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள தேக்கமும், புதிய கால்வாயும் அமைக்கப்படும். இதனால் தற்போதுள்ள 4,179 ஏக்கர் ஆயக்கட்டுக்குப் பாசன உறுதியும், அம்பாசமுத்திரம் வட்டத்தில் 500 ஏக்கருக்குப் புதிதாகப் பாசன வசதியும் ஏற்படும். இதனால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10.5 லட்சம் மதிப்புள்ள 1,750 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும்.

## சிறப்புத் திட்டங்கள்

பஞ்சாயத்து உணவு உற்பத்தித் திட்டத்தின் மூன்றாவது முக்கியப் பிரிவு வட்டாரத்திற்கான தனித் திட்டமாகும். வட்டாரத்திற்கு வட்டாரம் தேவைகள் மாறுபடும். அந்த தனித் தேவைகளுக்கேற்ப திட்டமிட்டால்தான், உணவு உற்பத்தித் துறையில் துரிதமாக முன்னேற்றம் காணலாம். இதைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டதுதான், இந்த மூன்றாவது பிரிவு. தன் தனித் தேவைகளுக்கான திட்டங்களுக்கு ஒவ்வொரு யூனியனும் ரூபாய் 40,000 வரை செலவிடலாம். இந்தப் பிரிவில் சேர்க்கப்படவேண்டிய திட்டங்கள் அனைத்தும் அமைக்க வேண்டிய முழுப் பொறுப்பும் யூனியன்களைச் சார்ந்தது. வட்டாரத்தின் தேவைகளை ஆராய்ந்து, அவற்றை நிறைவு செய்ய திட்டங்கள் வரைந்து, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் மூலமாக கிராம வளர்ச்சி நெறியாளரின் சம்மதம்பெற்று இத்தனித் திட்டங்களை யூனியன்கள் நிறைவேற்ற வேண்டும்.

### சிறப்பியல்புகள்.

இவ்வாறு 4-வது திட்டக் காலத்தில் யூனியன்கள் செயலாற்றப் போகும் உணவு உற்பத்தித் திட்டம் ஏனைய திட்டங்களினின்றும் முற்றிலும் மாறுபட்டது. இதன் தனிச் சிறப்புகள் :—

1. திட்டமிடும் பணி, முதன் முறையாக பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. யூனியன்களின் கவனத்திற்கு அரசாங்கம் தொகுத்து அனுப்பியுள்ள திட்டங்கள் ஒவ்வொன்றும், யூனியன்கள் வகுத்தவையே ; அவை அரசாங்கப் பணியாளர்கள் அமைத்தவை அல்ல.

3. இந்தத் தொகுப்பிலிருந்து வட்டாரத்தின் தேவைக்கேற்ற திட்டங்களைத் தெரிந்தெடுத்துச் செயலாற்ற யூனியன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. விவசாயத்திற்கு, கால்நடை வளர்ச்சிக்கு, மீன் அபிவிருத்திக்கு இவ்வளவு, இவ்வளவு செலவழித்தாக வேண்டும் என்று முன்போல் கட்டாயம் இல்லாமல், எந்தத் துறையின் வளர்ச்சிக்கு வசதியும் தேவையும் இருக்கிறதோ, அந்தத் துறைக்கு வேண்டிய திட்டங்களை அமைத்து, வேண்டிய அளவு நிதியையும் ஒதுக்கிக் கொள்ள யூனியன்களுக்கு வாய்ப்பளித்திருக்கிறார்கள்.

5. எல்லா வட்டாரங்களின் பொதுவான அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6. வட்டாரத்தின் தனித் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள வாய்ப்பும் வசதியும் இருக்கின்றது.

அனுபவ அறிவும், ஆற்றலும், உழைப்பும் ஊக்கமும் கொண்டோர் நம் மாநில விவசாயப் பெருமக்கள். கிராமத்தையும் அவைகளின் தேவைகளையும், கிராம மக்களையும் அவர்களின் மன நிலையையும் அறிந்த, மக்கள் நலமே நம் நலம் எனப் பணி புரிய கங்கணம் கட்டிக்கொண்டு கிராம வளர்ச்சித் துறையிலே ஈடுபட்டுள்ள தலைவர்களிடம் உணவு உற்பத்திக்கு வேண்டிய திட்டங்களை அமைத்துச் செயலாற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியிலே இவர்களுக்கு உறுதுணையாக நிற்க, பயிற்சி பெற்ற கிராம நல ஊழியர்களையும், விஸ்தரிப்பு அலுவலர்களையும் தந்து, திட்டங்கள் சீரிய முறையிலே செயல்பட வேண்டிய அனைத்தும் செய்துதர, தமிழ்நாடு அரசாங்கம் காத்து நிற்கிறது. இம் மூன்று சக்திகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற ஆரம்பித்துவிட்டன. இனி உணவு உற்பத்தித் துறையிலே ஒரு திருப்பம் ஏற்பட்டு, தன் நிறைவு காண்கின்ற காலம், வெகு தொலைவில் இல்லை.

(வானொலிப் பேச்சின் சாரம்)
(8—11—1966)


தொடர் கட்டுரை

# மரங்களின் பராமரிப்பு — பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள்

திரு எஸ். சுப்பையன், கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (பணித்துறை), சென்னை-9

கிராமங்களிலே பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, அவை ஊராட்சி மன்றங்களாகத் திகழ்ந்து, தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு அவற்றிற்குத் தேவையான அதிகாரங்களையும், ஆட்சிப் பொறுப்புக்களையும் அளிக்க, மாநில அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது; அதற்கிணங்க, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அநேக அதிகாரங்களும், பொறுப்புக்களும் அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் பலவற்றில், பஞ்சாயத்து யூனியன் வசமுள்ள, அல்லது அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாத்து, நல்ல முறையில் பராமரித்து வருதல் மிக அத்தியாவசியமானது. பஞ்சாயத்துக்களிடம் முழுவதுமாகவே ஒப்படைக்கப்பட்டுள்ள பொது நிலங்களிலும், அவற்றினிடம் பராமரிப்புக்காக, ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களிலும், விறகு, தீவனம், உரம் போன்ற ஆதாரங்களைப் பெருக்கும் வகையில், பஞ்சாயத்துக்கள் அதிக அளவில் மரங்களை நட்டு, அவை மூலம் கிராமத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடுவதினால், கிராம மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதுடன், அச்சொத்துக்களெல்லாம் தங்கள் கிராமத்தைச் சார்ந்தவையே என்ற நல்லெண்ணம் உண்டாகி, அதன் காரணமாக அவை, அழிக்கப்படாமல் பாதுகாக்க ஏதுவாகும்; மரங்களின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பஞ்சாயத்துக்களின் நிதியோடு சேர்த்துக் கொள்வதினால், பஞ்சாயத்துக்களின் வருமானமும் பெருகும்.




## மரங்களின் பாகுபாடு

பல திறப்பட்ட நிலங்களில் வளர்ந்திருக்கும் மரங்களின் பேரில், பஞ்சாயத்துகளுக்குள்ள உரிமைகளும் பொறுப்புக்களும், கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

பட்டா நிலங்களிலுள்ள மரங்களின மீது பஞ்சாயததுக களுக்கோ, பஞ்சாயத்து யூனியன்களுக்கோ எவ்வித உரிமையும், பொறுப்பும் கிடையாது. இவையெல்லாம் பட்டாதாரைச் சார்ந்தவையே.

சில இடங்களில் அரசாங்க நிலங்களில் தனிப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பு செய்து மரங்களை நட்டுப் பயன் பெற்று வரக்கூடும். இவ்வகையில், 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதிக்கு முன்பு, தனிப்பட்ட நபர்கள், அரசாங்க நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து மரங்களை நட்டிருந்தால், ஆக்கிரமிப்பாளர்களை அரசாங்கம் வெளியேற்றும் வரை, பஞ்சாயத்துக்களுக்கோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கோ தலையிட அதிகாரம் கிடையாது. ஆக்கிரமிப்பாளர்களுக்கே அந்நிலங்கள் வழங்கப்பட்டு விட்டால், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனி



யன்கள் அதன் மீது எவ்வித உரிமையும் கொண்டாடுவதற்கு இல்லை ; ஆனால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட நேரின், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு சட்டபூர்வமான எல்லா உரிமைகளும், பொறுப்புகளும் வந்துவிடுகின்றன.

### சாலையோர மரங்கள்

சாலையோரங்களிலுள்ள மரங்களைப் பாதுகாத்து, பராமரித்து வரும் பொறுப்பு, நெடுஞ்சாலை—கிராம வேலைகள் துறையைச் சார்ந்ததாகவும் அம்மரங்கள் எல்லாம், அத்துறைக்கே சொந்தமானதாகவும் இருக்கின்றன. ஆனால், பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றின் மகசூலைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு, அவைகளைக் குத்தகை எடுத்துக்கொள்ளலாம். கடந்த நான்கு ஆண்டுகளாக இம்மரங்களிலிருந்து கிடைத்த மகசூலின் சராசரியைக் கணக்கிட்டு, குத்தகைப்பணத்தை பஞ்சாயத்து யூனியன்கள் செலுத்த வேண்டும்.

சாலையோரங்களிலுள்ள பட்டுப்போன மரங்களையும் காற்றடித்து விழுந்துபோன மரங்களையும் நெடுஞ்சாலை துறையினர் ஏலம் விடுவார்கள். இத்துறையினர் ஏலம் விடுவதற்கு முன்னால் ஏலம் நடக்கும் தேதி, இடம், அதற்குண்டான விதிகள் குறிப்பிட்டு, விரிவான விளம்பரம் செய்வதோடு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கும், பஞ்சாயத்துத் தலைவருக்கும் தெரிவிக்க வேண்டும். ஏலத் தொகையிலிருந்து, அரசினர் உரிமை வரியை (Seigniorage fee) இலாக்காவில் கணக்கில் கட்டி விட்டு, எஞ்சியதை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் கணக்கில் வரவு வைத்து விட வேண்டும்.

### புறம்போக்கு மரங்கள்

பஞ்சாயத்துக்கள் விரும்பினால் சாலையோரங்களில் மரங்களை நடலாம்; ஆனால், இதற்கு உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை–கிராம வேலைகள் துறை) வகுக்கும் வரம்புகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் பஞ்சாயத்துக்கள் உட்பட வேண்டும்.

நெடுஞ்சாலை–கிராமவேலை துறையைச சார்ந்த இதர புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்களின் பேரில், பஞ்சாயத்துக்களுக்கோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

பொதுப் பணித் துறையைச் சார்ந்த புறம்போக்குகளில் கொரம்பு (Korambu) அமைப்பதற்கும், மற்றும் அத்துறை சம்பந்தப்பட்ட இதர வேலைகளுக்குமாக விலக்களிக்கப்பட்ட இடங்கள் தவிர்த்து, ஏனைய நீர்நிலைகள், நீர் ஆதாரங்களின் படுகைகளிலுள்ள மரங்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, மகசூலைப் பயன்படுத்திக் கொள்ளுதல்- பட்டுப்போன மரங்களையும் காற்றடித்து விழுந்த மரங்களையும் விற்பனை செய்தல் ஆகியவையெல்லாம் பஞ்சாயத்தைச் சார்ந்தவையாகும்; இருப்பினும் இவையெல்லாம் அத்துறை பிறப்பிக்கும் விதிகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

பொதுப் பணித் துறையின் விதிகளுக்கும் அறிவுரைகளுக்கும் கட்டுப்பட்டு, மேற்கண்ட இடங்களில் பஞ்சாயத்துக்கள் மரங்களை நடலாம்.

கால்நடை தங்குமிடங்கள், மாட்டு வண்டி நிற்குமிடங்கள், புதைகுழி, இடுகாடு, தோப்புகள், ஒதுக்கப்படாத காடுகள் ஆகியவற்றிலுள்ள மரங்கள் மகசூலைப் பயன்படுத்திக்கொள்ளுதல், பட்டுப்போன, காற்றடித்து விழுந்த மரங்களை ஏலம் விடுதல், அவை மூலம் கிடைத்த தொகையை பஞ்சாயத்துக்களின் நிதியில் சேர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றிற்கு வேண்டிய உரிமைகளெல்லாம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்கள் பேரிலும், மேற்கண்ட உரிமைகளை எல்லாம் அனுபவிக்க அரசாங்கம் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

பஞ்சாயத்துக்களிடம் தரப்படாத அல்லது ஒப்படைக்கப்படாத நிலங்களில், மரங்களை நட்டு, பாதுகாத்து அவற்றின் பலனையடைய பஞ்சாயத்துக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. இப்பொறுப்பு பூராவும், அந்தந்த அரசாங்கத் துறையைச் சார்ந்ததே.

பஞ்சாயத்துக்களுக்குத் தரப்பட்ட, அல்லது அவற்றினிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது வேறு வகையில் பொது நிலங்களில் உள்ள 2-சி பட்டா மரங்களின் பேரில் தனிப்பட்ட பட்டாதாரர்களின் உரிமை இப்போதுள்ள விதிகளுக்குட்பட்டு நீடித்து இருக்கும். ஆனால், இந்த மரப்பட்டாதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட 2-சி வரித் தொகை முழுவதும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தைச் சார்ந்ததாகும். தாலூகா தாசில்தார் அத்தொகையை யூனியன் ஆணையாளர் மூலமாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் கணக்குகளில் வரவு வைக்க வேண்டும். பஞ்சாயத்துக்களைக் கலக்காமல் தாசில்தார்கள் புது 2-சி மரப்பட்டா வழங்கக்கூடாது. 1961-ம் ஆண்டு மே மாதம் 30-ந் தேதிக்குப் பிறகு வழங்கப்படும் பட்டாக்கள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் சிபாரிசுகள் பேரிலும் பஞ்சாயத்துக்களால் விதிக்கப்பட்ட விதிகளுக்குக் குறையாத வரிக்கும் தான் அளிக்கப்பட வேண்டும்.

**பில்முக்தா பட்டா மரங்கள் :** 2-சி பட்டா மரங்களின் மகசூலை எவ்வாறு பஞ்சாயத்துக்கள் அடைய முடியாதோ, அதுபோன்றே பில்முக்தா பட்டா மரங்களின் பயனையும் பஞ்சாயத்துக்கள் பெறுவதற்கில்லை. 2—சி பட்டாதாரர்களை விட, பில்முக்தா பட்டாதாரர்கள் அதிக சலுகை பெற்றவர்களாவார்கள். தகுந்த அனுமதியின் பேரில், மரங்களை வெட்டிக்கொள்வதற்குக்கூட இவர்களுக்கு உரிமையுண்டு.

(தொடரும்)

# தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்-

## சிறப்பியல்புகள்

∴ தமிழகத்தின் 4-வது திட்ட முதலீடு, ரூ. 564 கோடி.

∴ விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் சீராக அபிவிருத்தியடைவதற்கு ஏற்ற வகையில், தமிழகத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

∴ விவசாய உற்பத்திக்கு, இத்திட்டத்தில் முதலிடம் தரப்பட்டுள்ளது.

∴ மூன்றாவது திட்டத்தில் 60 இலட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை, 80 இலட்சம் டன்னாக உயர்த்த இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

∴ கிராமாந்தரங்களுக்கு மின்வசதி, சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் உள்பட, விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு 223 கோடி ரூபாய், அதாவது, ராஜ்ய முதலீட்டில் இது 40 சதவீதமாகும்.

∴ மின்சார அபிவிருத்திக்கு ரூ. 175 கோடி ரூபாய்.

∴ அரசியல் ஸ்திரத்தன்மை—நல்ல அரசு—உழைப்புக்கு அஞ்சாத மக்கள்—இந்த அத்தியாவசிய அடிப்படைகளைக் கொண்டுள்ள தமிழகத்தில், பல்வேறு துறைகளிலும் நல்ல பல சாதனைகளை நிச்சயமாக சாதிக்க முடியும் என்பது உறுதி.

தமிழகத்தின் நான்காவது திட்ட முதலீடு ரூ. 564 கோடி ரூபாய் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியாக ரூ. 250 கோடி ரூபாய் கிடைக்கும். மத்திய அரசாங்கக் கணக்கில் ஆரம்பிக்கப்பட்டு, மாநில அரசினால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் சில இருக்கின்றன. இவற்றின் விவரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை, இவற்றையும் சேர்த்தால், நான்காவது திட்டக் காலத்தின் தமிழகத்திற்கான முதலீடு ரூ. 600 கோடிக்கும் அதிகமாகவே இருக்கும். தமிழகத்தின் 3-வது திட்டச் செலவை விட, இது கணிசமான அளவில் கூடுதலாகும். விவசாயம், தொழில் துறைகளில் தனியார்த் துறையினரும், மத்திய அரசாங்கமும் செய்யும் முதலீடுகள் இதில் சேரவில்லை. திட்ட விவரங்கள் இன்னும் உருப்பெறவில்லை. அகில இந்திய ரீதியில், திட்டம் இறுதியான பிறகுதான், தமிழகத்தின் மத்திய அரசின் திட்ட நிர்ணயச் செலவு நிர்ணயமாகும்.

### தமிழகத் திட்டத்தின் தனிச் சிறப்பு

கடந்த 15 ஆண்டுகளில், தமிழகம் அடைந்துள்ள முன்னேற்றம், மாநிலத்தின் வசதி வாய்ப்புகளைப் பலப் படுத்தி கணிசமான அளவில் முதலீடு செய்யும் ஒரு பெரிய திட்டத்தை வகுப்பதை சாத்தியமாக்கியிருக்கிறது. நான்காவது திட்டத்தில் மாநில அரசு செலவிடும் பணத்தின் பங்கு, மூன்றாவது திட்டத்தில் இருந்ததை விட அதிகமாயிருக்கும். நிதியை விவேகமான முறையில் கையாண்டதாலும், விவசாயம்—தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக வருவாயானது கணிசமான அளவில் பெருகியதினாலும், இவ்வளவு அதிகமாகச் செலவிடுகின்ற நிலை, தமிழகத்தில் சாத்திய மாகிறது.

மிக அதிக அளவில் ஜனநெருக்கம், இயற்கை வசதிகள் குறைவு போன்ற சில பிரதி கூலங்கள் தமிழகத்தில் உள் ளன. ஆயினும் அரசியலில் ஸ்திரத்தன்மை நிலவும் ஒரு நல்ல சூழ்நிலையில், உறுதித் தன்மையும் முற்போக்கு நோக்கும் கொண்டுள்ள ஓர் அரசும், ஒழுங்கும் கடினமாக உழைக்கக்கூடிய மக்களும் ஒன்று சேர்ந்து பாடுபட்டால், பல்வேறு துறைகளிலும் பிரம்மாண்டமான சாதனைகளைச் சாதிக்க முடியும் என்பதற்கு, தமிழகம் மிகச் சிறந்த ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. பொதுவாக, அகில இந்தியத் திட்டத்தின் நோக்கங்களை அனுசரித்தே தமிழக அரசாங்கம் நடந்தபோதிலும், மாநிலத்தின் தேவைகளையும் சூழ் நிலையையும் கருத்தில்கொண்டே, மாநில அரசு தனது திட்டங்களை உருவாக்கி வந்துள்ளது. பொருளாதார திட்டம் வகுக்கும் துறையில் தமிழக அரசு பின் பற்றி வந்துள்ள இந்த சுதந்திரமும், நீக்குப் போக்கான தன்மையும் தான், மாநில மக்களின் இதயக்கிடக்கைகளைப் பூர்த்தி செய்வதற் கும், பல முக்கியமான துறைகளில் தமிழகம், மற்றவர் களைவிட முன்னணியில் இருப்பதற்கும் காரணமாகும். இப்பொழுது தமிழக அரசு தயாரித்துள்ள தமிழ்நாட்டின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், விவசாயம், தொழில் ஆகிய இரு துறைகளிலும் சீரான அபிவிருத்தி அடை வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

### விவசாய வளர்ச்சி—முக்கிய இலட்சியம்

நாட்டின் இன்றைய முக்கிய இலட்சியமான விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்பதை, மாநிலத்திட்டம் முழுக்க பிரதிபலிக்கிறது. கிராமாந்திரங்களுக்கு மின்சார வசதி, நடுத்தர சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்பட, விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த துறைகளில் மாநிலத் திட்டத்தின் முதலீடு, 223 கோடி ரூபாயாக இருக்கும். அதாவது ராஜ்ய மொத்த முதலீட்டில் இது சுமார் 40 சதவீதமாகும்.

நமது மாநில உணவு தான்ய உற்பத்தித் திறனை 60 லட்சம் டன்னிலிருந்து 80 லட்சம் டன்களாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இரசாயன உரங்களை மிக அளவில் உபயோகிப்பது, ஏ.டி.டி. 27 போன்ற அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பிரபலப் படுத்துவது (ஏற்கனவே இந்த வருடம் இது நல்ல பலனை யளித்திருக்கிறது) ஏராளமான கிணறுகளை வெட்டுவது, வடிமுனைக் குழாய்க் கிணறுகள், குழாய்க் கிணறுகள்

## கவிதை

# சமதர்மப் பொங்கல்

(தேவிதாசன்)

கடும் வெயிலில் என்னுடலம்
கருகிடினும் பொறுத்திருந்து
நடும்பயிரை என்னுயிர் போல்
நலம்பெறவே காத்திட்டேன்!

நீரின்றி யானுலர்ந்தும்
நெற்பயிரோ சாவியெனும்
பேரின்றிக் கதிர் குலுங்கப்
பெருமுயற்சி எடுத்துழைத்தேன்

கனவொன்று பலித்ததுபோல்
களிப்படைந்தேன் ; விளைச்சலிலே
எனதென்று பதுக்கிடவோ
எள்ளளவும் நினைப்பில்லை !

விதிப்படி நான் அரசுக்கு
விற்றிடவும், என்னுழைப்பில்
மதிப்புதவி புரிந்தோர்க்கு
மனமாரப் பகிர்ந்தளிப்பேன் !

என்னுடைய தாய்நாட்டின்
எல்லாரும் சுகம் காண
மன்னுபுகழ் சமதர்ம
மனப்பொங்கல் வைத்திடுவேன் !

அமைப்பது. இரண்டரை லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி அளிப்பது போன்ற வேலைத் திட்டங்களின் மூலம், மேற்குறிப்பிட்ட கூடுதலான உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி செய்யப்படும். மாநிலத்தின் கட்டுப் படுத்தப்பட்ட நீர் ஆதாரங்களையும் திறமையாக பயன் படுத்துகின்ற வகையில் நீர்ப்பாசனத் திட்டங்களினால், தற் போதுள்ள காவேரி, டெல்டா, பெரியாறு, வைகை பாசனக் கால்வாய்களை நவீனமாக்கும் வேலைகளைக் குறிப்பிட வேண்டும். இதைத் தவிர, உலக பாங்கியின் உதவியுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏராளமாகவுள்ள பாதாள நீர் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், வடிமுனைக் குழாய்க் கிணறுகள், குழாய்க்கிணறுகளைப் பெருக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அமெரிக்க நிபுணர் குழுவொன்று இந்த நீர் வசதியை இரண்டாண்டுகளுக்கு முன் சுட்டிக் காட்டியுள்ளது.

### மின்சார வளர்ச்சியில் வேகம்

மின்சார அபிவிருத்திக்காக 175 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக் காலத்தில் இத்துறை யில் கண்டுள்ள வளர்ச்சி வேகம் நான்காவது திட்டக்

(28-ம் பக்கம் பார்க்க)

# கேள்வியும் - பதிலும்

**கிராம வேலைகள் திட்டம்—பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகளைப் பூர்த்தி செய்தல்.**

### கேள்வி :

கிராம வேலைகள் திட்டத்தின்கீழ், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகளைப் (Incomplete works) பற்றியும், அவைகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில் (நடப்பாண்டில்) பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படுத்துவது பற்றியும், நடப்பாண்டில் மேற்கொள்ளக் கூடிய புதிய வேலைகள் (New works) பற்றியும், பல சந்தேகங்கள், சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு (குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி பஞ்சாயத்து யூனியன் தலைவர் இதுபற்றி விளக்கம் கோரியுள்ளார்,) ஏற்பட்டுள்ளன.

எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்களாவன:—

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் கடைசி ஆண்டிற்கு, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் கிடைக்கக் கூடிய அரசாங்க மானியத் தொகையை, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டு—நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு (நடப்பாண்டு) ஆகிய இரு ஆண்டுகளுக்குமாக பயன்படுத்த வேண்டுமா? அப்படியென்றுல், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டுக்கான செலவு, அவ்வாண்டுக்கு உள்ள மானியத் தொகையின் பாதியாகத்தானே இருக்க முடியும்?

சில பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலை பலமாக இல்லாததினுலும், தங்கள் பொது நிதியிலிருந்து (General Funds) வேலைகளைச் செய்துவிட்டு, பின்பு வருகின்ற ஆண்டுகளில் அந்தப் பணத்தை திரும்பப்பெற்றுக்கொள்கிற அளவுக்கு அவைகளுடைய நிதி நிலைமை இடம் கொடுக்காததினுலும், சில பஞ்சாயத்து யூனியன்கள் அநேக முக்கியமான வேலைகளை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. அப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் புதிய வேலைகளுக்கு மிச்சமுள்ள தொகையை நடப்பாண்டில் பயன்படுத்தக்கூடாது என்றுல், ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு அதிக நிதி ஒதுக்கீடு, இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்குக் குறைந்த நிதி ஒதுக்கீடு என்ற பாகுபாடு ஏற்படுமே? இந்த வித்தியாசம் இருக்கலாமா?

### பதில் :

**கிராம வேலைகள் திட்டம்–66-67-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விளக்கம்**

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமவேலைகள் மானியத்தின் கீழ், திட்டவாரியான நிதி ஒதுக்கீடானது (Schematic Provision) நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டையும் சேர்த்து, ஆறு ஆண்டு காலத்திற்குமாகச் செய்யப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், இதற்காக, அரசாங்க மானியமாக ரூ. 4 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டது. இந்த நிதி வசதியை ஒட்டி, சில பஞ்சாயத்து யூனியன்கள் கிராம வேலைகளை மேற்கொண்டு செயல்படுத்தின. கிடைக்கக் கூடிய மொத்த நிதி ஒதுக்கீட்டுக்கு அதிகமான அளவிலும், சில பஞ்சாயத்து யூனியன்கள் வேலைத் திட்டங்களை மேற்கொண்டன. ஆகவே, மூன்றுவது திட்டக்கால முடிவில், முடிவு பெருத வேலைகள் மிகப் பெருவாரியான அளவில் இருந்தன. மாநிலத்திற்கே நான்காவது திட்டமானது இன்னும் முடிவு செய்யப்படாமல் இருப்பதினுல், பஞ்சாயத்து யூனியன்களுக்கு நான்காவது திட்டத்திற்கான திட்டவாரியான வரவு செலவுத் திட்டம் முழுமையாக அமைக்கப்படவோ, அல்லது ஒத்துக்கொள்ளப்படவோயில்லை. ஆகையால், 1966-67-ம்ஆண்டிற்கான வேலைகள் திட்டத்திற்காக இதற்கென வகுக்கப்பட்ட தனி முடிவுகளை (Adhoc-decisions) எடுக்க வேண்டி வந்தது. மூன்றுவது திட்டக்கால முடிவில் முடிவு பெறுமல் இருக்கும் வேலைகளைப் (incomplete works) பூர்த்தி செய்வதற்கு, முதலிடம் (First Priority) அளிக்கப்பட வேண்டும் என்றும், புதிய வேலைகளுக்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இணை

பேப்பாதைகள், குடிநீர்வழங்கல் போன்ற வேலை களுக்குமாக, ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல் செலவு செய்யக்கூடாது என்றும், முடிவு செய்யப்பட்டது.

மேலே சொல்லியபடி, பல பஞ்சாயத்து யூனியன் கள், மூன்றுவது திட்டக்காலத்தில் மிக அதிகமான அளவில் வேலைத் திட்டங்களை ஏற்றுக்கொண்டன. பூர்த்தி பெருத வேலைகளின் அளவானது, மூன்று வது திட்டக்காலத்திற்கு செய்யப்பட்ட திட்டவாரியான நிதி ஒதுக்கீட்டுக்கும் அதிகமாக உள்ளது. 1966–67-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு, ஒரு குறிப்பிட்ட அள வுக்கு மேல் போகக் கூடாதென்று வரையறுக்கப் பட்டுள்ளது. இது சுமார் 200 லட்சம் ரூபாயாகும். இப்படி பூர்த்தியாகாமல் இருக்கும் எல்லா வேலை களுக்கும் வேண்டிய நிதி வசதி அளித்து, மேற் கொண்டும் முன்பே குறிப்பிட்டுக் காட்டியுள்ள அதிக பட்ச அளவான ரூ. 10 ஆயிரத்துக்கும் மேலும் புதிய வேலைகளுக்கும் நிதி வசதி செய்து தருவ தென்பது இயலாததாகும். ஆகவே, மூன்றுவது திட்டத்திற்கான திட்டவாரியானநிதி ஒதுக்கீட்டைமூன்று வது திட்டக்காலத்தில் பயன்படுத்திக் கொள்ளாததும், நடைமுறை ஆண்டில், பூர்த்தி செய்யப்படாத வேலை களுக்கான செலவானது திட்டவாரியான நிதி ஒதுக் கீட்டில் உள்ள மிச்சத் தொகைக்கும் குறைவாகவும் உள்ளதுமான சில பஞ்சாயத்து யூனியன்கள், இந்த மிச்சத் தொகையை நடப்பு ஆண்டில் பெற முடி யாது. இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டு மானுல், மூன்றுவது திட்டத்தின் கீழ் திட்டவாரி யான ஒதுக்கீடான 4 இலட்சம் ரூபாயில், மூன்றுவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவும் 1966–67-ல் பூர்த்தி யாகாமல் இருக்கும் வேலைகளுக்கு ஆகும் செலவும் ஆகிய இரண்டும் சேர்ந்து, இந்தத் தொகைக்கு அதா வது ரூ. 4 இலட்சத்திற்கும் குறைவாக இருந்தால், அப்படி மிச்சமாக உள்ள தொகையை, நடப்பு ஆண் டில் வேலைகளுக்காகச் செலவு செய்ய அனுமதிக்க முடியாது. நிதி ஒதுக்கீடு மிகவும் வரையறுக்கப் பட்டுள்ளதாலும், திட்டவாரியான நிதி ஒதுக்கீடுக்கும் அதிகமாகச் செலவு செய்துள்ள மற்ற பஞ்சாயத்து யூனியன்களில் பூர்த்தியாகாமல் இருக்கும் வேலை களை முடிக்கக் கூடுதலாக நிதி தேவைப்படுவதாலும், இத்தகைய முடிவு செய்ய வேண்டி நேரிட்டது.

இதன் விளைவாக, அதிகமான அளவில் வேலை களை ஏற்றுக்கொண்டுள்ள பஞ்சாயத்து யூனியன்க ளுக்கு, நான்காவது திட்டத்தில் அதிகமான அளவு நிதி ஒதுக்கப்படும் என்ற நிலை ஏற்படாது. நான் காவது திட்டத்திற்கான திட்டவாரியான நிதி ஒதுக் கீடு எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்படும் பொழுது நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டில் ஆகும் செலவின் அளவையும் கணக்கில் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுல், நான் காவது திட்டத்தின் ஐந்தாண்டுக் காலத்திற்குச் செய்யப் படும் மொத்த ஒதுக்கீடானது, எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரே அளவானதாக (Uniform) இருக்கும். தேவைப்பட்டால், நான்காவது திட்டத் திற்கான திட்டவாரியான நிதி ஒதுக்கீட்டை நிர்ண யிக்கும் பொழுது, மூன்றுவது திட்டத்தின் செலவை யும் நான்காவது திட்ட ஒதுக்கீட்டின் அளவையும் கூட கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

ஆகவே, இது பற்றிய நடப்பாண்டிற்கான உத்தரவு கள், நடப்பாண்டுக்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக் கீடுக்கு மாத்திரம் தான் பொருந்தும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அனைவரும் இந்த அடிப்படை யான கொள்கையை உணர்ந்து கொண்டால், எந்த விதமான தவருன வியாக்கியானத்துக்கோ, அவசிய மில்லாத அச்சத்துக்கோ, இடமிருக்காது என்பதில் ஐயமில்லை.

## திருநாடு தரணியிலே உலாசிறக்க......

[ திரு எம். கே. கோமேதகவேலு ]

ஊருலகின் உயர்வு கூட்டுறவில் உண்டு
உன் உயர்வும் என் உயர்வும் அதிலே உண்டு
பாரில் நாம் வெற்றி நடைபோட, இந்தப்
பாதையிலே எத்துறையும் இயங்கவேண்டும்!
வேறுணர்வு கிளைக்காமல் வேண்டாத சுயநலம்
விளையாமல் காத்திட்டால் சிங்காரித்த
தேரைப்போல் திருநாடு தரணியிலே உலாசிறக்க
தீனரெலாம் புது வாழ்வால் பொலிந்து வாழ்வர்.

### அடுத்த கேள்வி :

*தலைவரோ, துணைத்தலைவரோ வராத சமயங்களில் பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களுக்கு வந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அக்கூட்டத் திற்கு தலைமை வகிக்கலாம். அந்தக் கூட்டத்தில் அவர் தலைமை வகிக்கின்ற நோக்கத்தில், தலைவருக்கு உரிய எல்லா அதிகாரங்களும் உண்டு என்று 1958-ம் வருடத் திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கூறப்பட் டிருக்கிறது. அப்படியென்றால், கூட்டம் ஆரம்பமாகி நடந்துகொண்டிருக்கும்போது, தலைவரோ, துணைத் தலைவரோ அக்கூட்டத்திற்கு வந்துவிட்டால், கூட்ட ஆரம்பத்தில் தலைமைவகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பி னர் தாமே தொடர்ந்து தலைமைவகிக்க உரிமை கொண் டாட முடியுமா?*

[இக்கேள்விக்கு பதில், அடுத்த இதழில் அளிக்கப்படும்.

# மக்கள் தலைமை

கோடிகேஸ்வரம் என்ற கிராமம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் ராஜமுந்திரியிலிருந்து கோரு கொண்டா செல்லும் வழியிலிருக் கிறது. அண்மைக் காலம் வரை சாலை வசதி, வாகன போக்குவரத்தே இல்லாதவாறு, துண்டிக்கப்பட்டிருந்த இக்கிராமத்திற்கு, இப்போது பஸ் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோடிகேஸ்வரம் கிராமத்தில் இருந்தே பஸ் புறப்படுகிறது.

பஸ் செல்லும் சாலையின் பெரும் பகுதிக்குக் கப்பி போடப்பட்டு விட்டது; கேசவரம், ராகவபுரம், பொல்லேடு பாலம், ஸ்ரீரங்கபட்டணம் கிராமங் களும், பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்துக்களும் ஒன்று சேர்ந்து இந்தச் சாலையை அமைத்து பஸ் போக்குவரத்திற்கு வசதி செய் துள்ளன.

இது ஒரு மலைப்பாங்கான பகுதி; இங்குள்ள மலைகளின் பெயர்கள் வேடிக்கையானவை: கிராம மலை, தேயிலைமலை, பிசாசுகள் மலை, ஊசி மலை எனப் பலவாறாக இம்மலைகள் அழைக்கப்படுகின்றன. இம்மலைகளில் அடர்ந்த காடுகள் இருப்பதால், அவை மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 வருமானம் கிடைக்கிறது.

## தாராள எண்ணம்

திரு சூரியநாராயண, திருமதி சத்யா தேவி சூரியநாராயண ஆகிய இருவரும் 5 ஏக்கர் நிலம், ரூ. 10,000 நன்கொடையளித்துள்ளனர். இவற் றைக்கொண்டு ஓர் உயர்நிலைப்பள்ளி கட்டப்பட்டு வருகிறது. இது தவிர, இவர்கள் மேலும் 5 ஏக்கர் நிலம், ரூ. 5,000 நன்கொடையளித்துள்ள னர். அவற்றால் ஒரு கால் நடை மருத்துவமனையும் கட்டப்பட்டு வரு கிறது. இங்குள்ள ஒரு கட்டிடத்தில் அரசினர் ஹாஸ்டல் இருக்கிறது. அக் கட்டிடம் இவர்களின் அன்பளிப்பே.

இவர்களுக்கு பிள்ளைகள் இல்லை; "ஊரிலுள்ள எல்லாப் பள்ளிக் குழந்தைகளும் எங்கள் பிள்ளைகளே" என்று அன்பொழுகக் கூறுகின்றனர்.

இங்கு ஓர் ஆதார சுகாதார நிலை யம் இருக்கிறது; இது 1959-ம் ஆண்டு நிறுவப்பட்டது. திருமதி எ. செல்லம்மாள் என்பவர், இந் நிலையத்திற்காக இரண்டு ஏக்கர்கள் நிலமளித்தார். கிராமவாசிகள் ரூ. 10,000 நன்கொடையளித்தனர். நிலையத்தை அடுத்து, ஒரு 'ஷெட்' இருக்கிறது. அதில் நோயாளிகளின் குடும்பம் தங்க வசதி செய்யப்பட்டுள் ளது. நிலைய வைத்திய அதிகாரி டாக்டர் ஆஞ்சனேயலு இதற்கான செலவை ஏற்றுக்கொண்டுள்ளார்.

கிராமத்தில் மூன்று ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை அரசாங்கமே நிர்வகிக்கிறது; மற்ற இரண்டிற்கு அரசாங்கம் உதவித் தொகையளித்து வருகிறது. ஆனால் ஆரம்பக் காலத்தில் இந்த மூன்று ஹாஸ்டல்களையுமே கிராம வாசிகள் நிர்வகித்து வந்தனர்.

## ஒற்றுமை நிலவும் கிராமம்

ஹரிஜனங்களுக்கும் மற்றவர் களுக்கும் நல்ல ஒற்றுமை நிலவி வருகிறது. ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதியில் ஆரம்பப்பள்ளிக் கட்டிடத் தைக் கட்டுவதற்காக ஆன செலவில் மூன்றில் ஒரு பங்கை கிராமவாசிகளே ஏற்றுக்கொண்டனர்.

ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதி யிலும், இதர பகுதிகளும் நான்கு கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துத் தலைவரான திரு எ. சூரியநாராயணவும், அவரது சகோதரரான திரு வெங்கட்ராவும் எட்டு ஏக்கர் நிலம் நன்கொடையாக அளித்துள்ளனர்; இந்த நிலத்தில் ஹரிஜனங்களுக்காக வீடுகள் கட்டப் பட்டு வருகின்றன.

குழாய்கள் மூலம் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 50,000 மதிப்புள்ள ஒரு திட்டத் திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு, தங்களின் நன்கொடையைத் தர கிராமவாசிகள் முன் வந்துள்ள னர்.

விவசாய உற்பத்திக்காக, 10 வடி முனைக் குழாய்கள் இருக்கின்றன. ஏரிப் பாசனத்தின் மூலம் நெல் சாகு படி செய்யப்படுகிறது. சோளம், துவரம் பருப்பு, கொள்ளு, இஞ்சி ஆகியவை அமோகமாக விளைகின்றன. மாங்கனி களுக்கும், பூண்டுகளுக்கும் இங்கு பஞ்சமில்லை.

## சிறந்த பஞ்சாயத்து

கேசவரத்திலிருந்து ரபாகா என்ற கிராமம் வரை, இடையிலுள்ள ஐந்து மைல் தூரத்திற்கும் சாலை அமைக்கப் பட்டுள்ளது. இதற்காக இரு கிராமத் தைச் சார்ந்தவர்களும் ஒன்றுபட்டு, செலவில் நான்கில் ஒரு பங்கை ஏற்றுக் கொண்டனர். கேசவரம், பொல்லேடு பாலம் சாலையும் இவ்வாறே கிராம வாசிகளின் ஒத்துழைப்பால் போடப் பட்டதேயாகும்.

கோருகொண்டாவில், ஒரு குளத் திற்கு அருகே ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இதற்காகும் செலவு ரூ. 50,000. இதில் எட்டில் ஒரு பங்கை, கேசவரம் மக்கள் அளிப்ப தற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்தப் பஞ்சாயத்து யூனியனி லேயே, கேசவரம் பஞ்சாயத்து தான் சிறந்த பஞ்சாயத்து என்று தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது. இதில் ஆச்சரி யம் ஏதும் இருக்க முடியுமா?

# வெம்பயம் - முப்பெரும் வெற்றியின் சின்னம்

**கேரள மாநிலத்திலேயே சிறந்த கிராமம், வேம்பயம் கிராமம்: அதே கிராமம் மாநிலத்தின் சிறந்த கிராமசேவக்கையும், சிறந்த கிராமசேவிகாவையும் நாட்டிற்குத் தந்துள்ளது.**

முப்பெரும் வெற்றியின் சின்னம் அந்தக் கிராமம்; ஆம்......அதுதான் வேம்பயம் கிராமம். அக்கிராமத்தைப் பற்றி நீங்கள் நிச்சயமாக கேள்விப்பட்டிருக்க முடியாது. அது கேரளா மாநிலத்தில் இருக்கிறது. இன்னும் தெளிவாக சொல்லப்போனுல் அது நெடுமாங்காடு சமுதாய வளர்ச்சி வட்டாரத்தில் (திருவனந்தபுரம் மாவட்டம்) உள்ள ஒரு கிராமமாகும்.

1965-66-ம் ஆண்டு, மாநில அளவில் நடந்த போட்டியில், வேம்பயம் கிராமம் தான் சிறந்த கிராமம் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அதே ஆண்டு, சிறந்த கிராமசேவக், சிறந்த கிராமசேவிகாவிற்கு நடந்த போட்டியிலும், வேம்பயத்தில் பணியாற்றிவரும் திரு அப்புகுட்டன் பிள்ளையும், திருமதி பி. கிருஷ்ணம்மாவுமே சிறந்தவர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### நன்றி மறவா மக்கள்

கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே பசுமையான காட்சிதான். நெல், மரவள்ளிக் கிழங்கு, மிளகு, ரப்பர் போன்ற பயிர்கள் செழிப்பாக வளர்ந்து, அழகிய தோற்றத்தை யளிக்கின்றன. புன்னகை ததும்பும்விவசாயிகளின் முகங்களிலே திருப்தி ரேகை இழையோடுகிறது. அதேநேரத்திலேயே அவர்களுக்கெல்லாம் வழிகாட்டிகளாக இருந்து, வேண்டிய உதவிகள் செய்து, அவர்களின் வாழ்க்கையை மேம்படச் செய்தவர்களை அவர்கள் மறக்காமல், என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிருர்கள். இவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் திரு அப்புக்குட்டன் பிள்ளை, கிராமசேவக், திருமதி பி. கிருஷ்ணம்மா கிராமசேவிகா, திரு. கோபால கிருஷ்ண நாயர், வட்டார அபிவிருத்தி அதிகாரி, திரு கே. ஜி. குஞ்சு கிருஷ்ண பிள்ளை, பஞ்சாயத்து தலைவர் ஆகியோராவர்.

அமைதியான முறையிலே செயலாற்றி, கிராமத்தின் செழிப்புக்கு அடித்தளமாக அமைந்தவர்களில் கிராமசேவக்கும், கிராமசேவிகாவும் போற்றுதற்குரியவர்கள்.

### சிறந்த கிராமசேவக்

1955-56-ம் ஆண்டு நடந்த கிராம சேவக் பரிசுப் போட்டியில் திரு அப்புகுட்டன் பிள்ளையே சிறந்த கிராமசேவக் எனத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் ஒரு சாதாரண விவசாயியின் குடும்பத்தைச் சார்ந்தவராதலால் அவர்களின் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் நன்கு உணர்ந்தவர். 1954-ம் ஆண்டு அவர் கிராம சேவக் ஆனுர். மிகவும் இனிய சுபாவம் உள்ள இவருக்கு, வேம்பயம் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரையும் நன்ருக தெரியும். அது மட்டுமா? கிராமத்திலுள்ள ஒவ்வொரு அங்குல நிலம் பற்றியும் இவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிருர். கிராமத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்க்கையும் பற்றி இவர் தெளிவு பெற்றிருக்கிருர். மேற்கொண்ட காரியத்தை திறம்பட செயலாற்றி முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் மிகுந்திருக்கிறது. பொறுப்புணர்ச்சி மிக்க இவரை காணும்போதெல்லாம், அவருடன் உழைக்கும் சக பணியாளர் கூட, தங்களின் ஒத்துழைப்பை தளராது அளிக்கின்றனர்.

### இவரின் சாதனைகள்

தளராது உழைத்து, நவீன கருவிகள், பொருக்கு விதைகள், கிருமி நாசினிகளின் நன்மைகளை பல முறை நயம்பட எடுத்துரைத்து, விவசாயிகளிடையே, அவற்றையெல்லாம் பெருமளவில் புகுத்தியுள்ளனர். இங்குள்ள விவசாயிகள் மூன்றுபோகம் நெல் சாகுபடி செய்கிருர்கள் என்ருல், அதற்கு பின்னணியாக அமைந்தவர் திரு அப்புக்குட்டன் பிள்ளைதான். சுமார் 800 ஏக்கர்களில் நெல் பயிரிடப்படுகிறது. சுமார் 6351 ஏக்கர்களில் மரவள்ளிக் கிழங்கு, மிளகு, ரப்பர், வாழை பயிராகிறது. உணவுத் துறையில் இக்கிராமம் சுயதேவையை சீக்கிரமே பூர்த்திச் செய்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு பிள்ளை கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் வாயிலாக கால்நடைகளுக்கு விசேஷ கவனம் செலுத்த கிராமவாசிகளை பழக்கினுர். மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்வதால் அதிக லாபம் கிடைக்கிறது. எனவே தரமான விதைகளைக் கொண்டு, மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவதற்கு கிராமவாசிகளை ஊக்குவித்தார். இவருடைய நேரடிப் பார்வையில், சுமார் 2,600 ஏக்கர்களில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியாகிறது. கிராமத் தொண்டர் படையையும் சீரமைத்து, சமுதாயத்திற்கு பல நன்மையான காரியங்களை செய்யத்

தூண்டினர்; தொண்டர் படையினரை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலும் ஈடுபட்டு வெற்றியடையச் செய்தார்.

### சிறந்த கிராமசேவிகா

திருமதி பி. கிருஷ்ணம்மாவின் சேவை இன்னொரு விதத்தில் சாலச் சிறந்தவை. கடந்த இரு ஆண்டுகளும் இவரே சிறந்த கிராம சேவிகா என தெரிந்தெடுக்கப்பட்டார். வேம்பயம் கிராமப் பெண்களிலேயே புத்துணர்ச்சியை ஊட்டி, அவர்களை ஆக்க வழிகளிலே செயலாற்ற அவர்களை திருப்பிய சாதனை திருமதி கிருஷ்ணம்மாவையே சாரும். கேரளாவில் மாதர் சங்கங்கள் எல்லாம் மஹிள சமாஜம் என்று அழைக்கப்படுகின்றன. மஹிள சமாஜங்கள் பலவற்றை இவர் துவக்கி, அதில் எல்லா பெண்களையுமே உறுப்பினர்களாக்கியுள்ளார். பெண்கள் எல்லோரும் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு, பணம் சம்பாதிக்கின்றனர். சாதாரண உடையணிந்து, இன்சொல் பேசி, எல்லோரிடமும் சகஜமாக பழகும் இவரை, பெண்களெல்லாம், தங்கள் வாழ்வுக்கோர் வழிகாட்டியாக இவரை மதிக்கின்றனர்.

### அவரது பணிகள்

தங்களுடைய பொருப்புக்களையும், நாட்டிற்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் மகளிர் நன்கு உணர, தாமே பொறுப்பேற்று, திறம்பட அதைச் செய்து முடித்தவர் திருமதி கிருஷ்ணம்மா. ஆண்களின் பொறுப்பில் பெருமளவை பெண்களே ஏற்றுக் கொண்டு, வளர்ச்சி வேலைகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

மஹிள சமாஜம், பால்வாடியை நடத்தி வருகிறது. இளம் பெண்களுக்கு தையல் பணி, நடனம் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. சமையல், கைத்தொழில் ஆகியவற்றில் பெண்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பு குடும்பக் கட்டுப்பாடு பற்றி அறிவுரையளிக்கப்படுகிறது. வயோதிகத் தாய்மார்கள் கூட ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டு செயலாற்றி வருகின்றனர். ஊறுகாய், ஜாம், பழச்சாறு, தலையணை உறைகள் போன்ற பல்வேறு பொருள்களை, மஹிள சமாஜம் விற்பனை செய்கிறது. சமாஜத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கு துவக்கியிருக்கின்றனர். தேசியப் பாதுகாப்பு நிதிக்கும் கணிசமான தொகையை மஹிள சமாஜங்கள் அளித்துள்ளன.

### புகழுரை

வேம்பயம் கிராமத்திற்கு இம்மாதிரியான கிராமசேவக், கிராமசேவிகா கிடைத்தது, அந்த கிராமவாசிகளின் நன்மைக்கே. திரு அப்புக்குட்டன் நாயர், திருமதி கிருஷ்ணம்மா ஆகிய இருவரும், இக்கிராமத்திற்கே, புத்துணர்ச்சி, புதுவாழ்க்கை, புது வேகத்தையூட்டி, நாட்டிலுள்ள சிறந்த கிராமங்களின் வரிசையிலே, வேம்பயத்தையும் கொண்டு சென்று நிறுத்தியது, என்றுமே மறக்க இயலாத ஒரு நிகழ்ச்சியாகும்.

### கிராம மனித சக்தித் திட்டம்:

## உத்தரப் பிரதேசத்தின் முன்னேற்றம்

உத்தரப் பிரதேசத்திலுள்ள மாவட்டங்களில் 23 பின் தங்கிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் 169 வட்டாரங்களில் கிராம மனித சக்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இணைப்புச் சாலைகள் அமைத்தல், வெள்ளத்தடுப்பு வேலைகளை மேற்கொள்ளுதல், சாக்கடை நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவை இத்திட்டத்தில் அடங்குபவன; சமுதாயத்திற்கு நன்மையளிக்கும் வகையில் இத்திட்டம் இங்கு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

விவசாயம் நடைபெறாத காலங்களில், விவசாயத் தொழிலாளர்களெல்லாம் திரட்டப்பட்டு, அவர்களுக்கு வேலையளிக்கப்படுகிறது. இதனால் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு, சமுதாயத்திற்கு உருவான, நிலையான வசதிகளை தருகிறது இத்திட்டம். சமுதாயத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசன ஆதாரங்களை புதுப்பித்தல், ஆழப்படுத்துதல், கரைகளை வலுப்படுத்துதல், சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகளும் செயல்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில், இத்திட்டத்திற்கென $12\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; அதில் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் இது வரை நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

### மக்கள் ஆதரவு

மக்களிடையே இத்திட்டத்திற்கு பெரும் ஆதரவு இருப்பதுடன், அவர்களை மகிழ்ச்சியுடன் முன் வந்து, எல்லாக் காரியங்களையும் திறம்பட செய்து முடிக்கின்றனர்.

கிராம மனித சக்தித் திட்டப் பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கென அமெரிக்க அரசாங்கம் 9,000 டன் கோதுமையை அளித்து உதவியுள்ளது. இதில் 3,500 டன் கோதுமை, இதுவரை தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குள்ள ஊதியத்தில் 50 சதவீதம் கோதுமையாகவும், 50 சதவீதம் பணமாகவும் தரப்படுகிறது.

அமெரிக்க அரசாங்கம் நன்கொடையாக அளித்துள்ள கோதுமையை முதன் முதலாகப் பயன்படுத்திக் கொண்ட மாநிலம் உத்தரப்பிரதேசம் தான். இதுவன்றி கிராம மனித சக்தித் திட்டம் பெருமளவில் தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருவதும் இம்மாநிலத்தில்தான்.

இது ஒரு நடமாடும் பஞ்சாயத்தின் கதை-இராஜபுத்திர மலைவாழ் மக்களுடனேயே சென்றுகொண்டிருக்கும் ஒரு பஞ்சாயத்தின் சாதனைகளை கூறுவதுதான், இக் கதை.

# நடமாடும் பஞ்சாயத்து

பாராபங்கல் பஞ்சாயத்தைப்பற்றிதான் இங்கே கூறப்படுகிறது ; பாராபங்கல் 8,000 அடி உயரத்தில், தௌலாதார் மலைப் பகுதிகளிலே இருக்கிறது. இது பீர் கிராமத்திலிருந்து 35 மைல் தூரத்திலேயே இருந்தாலும், இங்கு போய்ச் சேர மூன்று நாட்கள் ஆகும். தம்சார், என்ற கணவாய் வழியாக, 17,500 அடி கடந்து செல்லவேண்டியிருக்கிறது.

பீர் கிராமத்திலிருந்தே பாராபங்கலுக்கு சாலை செல்கிறது. இதை பாராபங்கல் பஞ்சாயத்தே அமைத்திருக்கிறது. முதல் நாள் இறுதியில் 15 மைல் கடந்து ‘பிளாஸ்சாக’ என்ற இடத்தையடைகிறோம். இரண்டாவது நாள் இங்கிருந்து 6-வது மைலிலுள்ள ‘பன்ஹல்டு’ என்ற இடத்தில் தங்க வேண்டும். பயணத்தில் இறுதி நாளாகிய மூன்ருவது நாள், அதிகாலையிலேயே புறப்பட்டு தம்சார் கணவாயை, சூரியன் உதயமாவதற்குள் கடந்துவிட வேண்டும். ஏனென்ருல் சூரியன் உதயமானபின் அதன் ஒளி கணவாயில் பட்டு, அதனுல் வழி தெரியாது போய்விடக்கூடும். பாராபங்கல், இக் கணவாயிலிருந்து 9 மைல் தூரத்திலிருக்கிறது.

அவ்வளவு இன்னல்களையும் கடந்து பாராபங்கலை அடைந்தால், அங்கு இன்முகம் கொண்டு வரவேற்கும் இராஜபுத்திரர்களை கண்டவுடனேயே களைப்பெல்லாம் உடனே பறந்துவிடும். ஒரு புதுமையான உலகத்தில் செல்வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இணையிலா தத்துவங்களெல்லாம், இங்கு வெகுவாக பரவி இருப்பதைக் காண பரவசமடைகிறோம்.

## மாறிவரும் மக்கள்

அண்மைக்காலம்வரை, பாராபங்கல் மக்கள்அபினும்,கஞ்சாவுமேசாப்பிட்டு, அதன் மயக்கத்தில் மூழ்கி, தங்களையும், உலகையும் மறந்த நிலையிலிருந்தனர். பொறுப்பற்ற, ஒன்றுமே விளங்காத, மந்தமாக வாழ்க்கையை நடத்தி வந்தனர், இம்மக்கள். ஆனுல் நாட்டின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரை சமுதாய வளர்ச்சிப் பணி செய்திகள் பரவிக்கொண்டிருக்கையிலேயே, அச் செய்தி இமயமலை அடிவாரத்திலுள்ள இந்த கிராமத்திற்கும் செல்ல தவறவில்லை. மக்கள் கண்களை விரித்தனர், உலகைப் பார்த்தனர் ; தங்கள் நிலையைக் குறித்து எண்ணினர். அதன் பிறகு, பாராபங்கல் ஒரு புதிய அத்தியாயத்தையே தொடங்கியது என்ருல் மிகையாகாது.

வெளியூர்களுக்குச் சென்று அங்கெல்லாம் பஞ்சாயத்து ஆட்சி நடைபெறும் விதத்தை அறிந்திருந்த சிலரைக் கொண்டு ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டது.

## நடமாடும் பஞ்சாயத்து

பாராபங்கலின் மக்கள் தொகை 300 மட்டுமே. செம்மறியாடு வளர்த்தல் ஒன்றே அவர்களின் முக்கியத் தொழில். சிலருக்கு ஒரு லட்சம் செம்மறி ஆடுகள் வரை இருக்கின்றன. மழைக்காலங்களில், பாராபங்கல் மக்கள், சோடா பங்கல் என்ற வேருெரு இடத்திற்கு சென்று விடுகின்றனர்: நவம்பர் மாதத்தில் சோடா பங்கலுக்கு வருவதற்கு முன்னே, பாராபங்கலில் விதைத்து விடுகின்றனர். இவ்விதை 5 மாதங்கள் வரை பனிக்குள்ளேயே இருக்கிறது, ஏப்ரல் மாதத்தில் பனி உருகும்போது, விதை முளைக்கிறது: அத் தருணத்தில் மக்களும் பாராபங்கலுக்கு திரும்பி விடுகின்றனர். ஜூலையில் அறுவடையாகிறது.

செம்மறியாடுகள் வளர்ப்பதே அவர்களின் முக்கியத் தொழில் அல்லவா? மழைக்காலத்தில் சமவெளிக்கு வரும்பொழுது 90 சதவீத உரோமங்களை விற்றுவிடுகின்றனர்.

பஞ்சாயத்திற்கென சொந்தமாக ஒரு கட்டிடம் இருக்கிறது. ஓர் ஆரம்ப பள்ளிக் கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது. மக்கள் அபினும், கஞ்சாவும் சாப்பிடுவதை மறக்கடிக்க பஞ்சாயத்து சுற்றுப் பயணங்களுக்கும், நடனங்களுக்கும், விளையாட்டுகளுக்கும் ஏற்பாடு செய்து, மக்களை அவற்றில் ஈடுபடுத்துகிறது,

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் மந்திரக் கோல் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ள கிராமங்களுக்கு எப்படி விழிப்புணர்ச்சியூட்டப்படுகிறது என்பதற்கு பாராபங்கல் ஒரு சான்ருகும்.

# டெலிவிஷனில் கிராம வளர்ச்சிப் பணிகள்

## ஸ்வீடன் நாட்டுக் குழு தமிழ்நாட்டுக்கு வருகை

(நமது நிருபர்)

விஞ்ஞானக் கண்டுபிடிப்புச் சாதனைகளில், வானொலியைப் பின் தொடர்ந்து, நமக்குக் கிடைக்கப் பெற்ற ஓர் அருஞ்சாதனம், டெலிவிஷன்.

இசை, பேச்சு, நாடக நிகழ்ச்சிகளை, வானொலியில் கேட்டு ரசிக்க முடிகிற தென்றால், அவை நம் கண்முன் நடப்பதுபோல், கண்டும், கேட்டும் களிக்க வாய்ப்பளிப்பது, டெலிவிஷன். ஏறக்குறைய வானொலிப் பெட்டி போன்றே அமைந்த டெலிவிஷன் பெட்டியில், வெண்திரை ஒன்றும் இருக்கும். அதில், தூரத்தே நடைபெறும் நிகழ்ச்சிகளை, திரைப்படம் பார்ப்பதுபோல, கண்டு, கேட்டு ரசிக்கலாம்.

வானொலி நிகழ்ச்சிகளில் இரண்டு வகை உள்ளதை நாம் அறிவோம். அதாவது, வானொலி நிலையத்தில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அவை நடைபெறும் அதே நேரத்தில், அவற்றை ஒலிபரப்புவது ஒரு வகை. இன்னொரு வகை, நிலையத்திற்கு வெளியே நடைபெறும் நிகழ்ச்சிகளை—முக்கிய மாநாடுகள், கருத்தரங்குகள், இசை–கலை விழாக்கள் போன்றவை — ஒலிப்பதிவு செய்து, பின்னர் வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்புவது. இந்த இரு வகைகள் டெலிவிஷனிலும் உண்டு.

இந்த முறையில் தமிழ் நாட்டுக் கிராம வளர்ச்சிப் பணிகள் பற்றிய நேர்முகக் காட்சி, விளக்கம், அயல்நாட்டு டெலிவிஷனில் இடம் பெறவிருக்கிறது.

ஸ்வீடன் நாட்டின் வானொலி-டெலிவிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த நால்வர் குழு ஒன்று, அண்மையில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தது. அகில இந்திய வானொலியின் 'பண்ணை–இல்லச் செய்திகள்' ஒலிபரப்புத்துறை கூட்டு நெறியாளரான திரு பி. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (Joint Director, Farm and Home Broad-casts, Directorate-General of All-India Radio) செய்துதந்த ஏற்பாட்டின்படி, தமிழ்நாட்டுக்கு வந்த அக் குழுவினர், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களுக்குச் சென்றனர். பஞ்சாயத்து ஆட்சி முறை-கூட்டுறவு இயக்கம், பள்ளிகள் முன்னேற்றம், விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல காட்சிகளை அவர்கள் ஒளி–ஒலிப்பதிவு செய்துகொண்டனர். சிறுசிறு நிலம் உடைய விவசாயிகள், சொந்த நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் போன்ற பலரைப் பேட்டி கண்டு, கிராம வளர்ச்சிப் பணிகளால் ஏற்பட்ட பலன்களைக் கூறும் அவர்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் பதிவுசெய்தனர். கிராமவளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். வேங்கடசாமி, குழுவினரது பணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து தந்து உதவி புரிந்தார்.

இந்த ஸ்வீடன்நாட்டுக் குழுவில் நான்குபேர் இருந்தனர். ஒலிப்பொறியாளர் திரு அகி ஹான்சன் (Mr. Ake Hansson, Sound Engineer), புகைப்படக்காரர் திரு பெங்ட் லிண்ட்ஸ்டார்ம் (Mr. Bengt Lindstorm, Camera-man), ஸ்வீடிஷ் வானொலி நிறுவனத்தில் 'பண்ணை ஒலிபரப்புகள்' பிரிவுக்குப் பொறுப்பு வகிக்கும் திரு ஓ. பெர்க்லண்ட் (Mr. O. Berglund, incharge of FARM Programmes), குடும்பக் கட்டுப்பாடு, சமூகநலம் உள்பட 'இல்லச் செய்தி ஒலிப்பரப்பு' நிகழ்ச்சிகளின் பிரதம தயாரிப்பாளர் திருமதி ஐ. சாமுவலாசன் (Mrs. I. Samuelosson, Chief Producer for Home, Programmes inclu-ding Family Planning and Social Welfare) ஆகிய இந்த நால்வரும், சென்னைக்கு வந்திருந்தபோது, வாகினி திரைப்படத் தயாரிப்பு நிலையத்தைப் (Vahini Studios) பார்வையிட்டனர். திரு கொண்டா ரெட்டியும், திரு புண்ணியகோட்டியும், குழுவினருக்கு நிலையத்தின் பல பகுதிகளையும் சுற்றிக் காண்பித்தனர்.

**கலாசாரத் தொடர்பு வளர :**

ஸ்வீடன் நாட்டுக்கும், நம்நாட்டுக்குமிடையே நெருங்கிய நட்புறவு இருந்து வருவது, இங்கு குறிப்பிடத் தக்கது. வருடத்தில் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே சூரியனைக் காணக்கூடிய நிலையில், வடத்துருவப்பகுதியில் அமைந்த ஸ்வீடன் நாட்டில் சுமார் எழுபது லட்சம் மக்கள் வாழ்கின்றனர். காகிதம் செய்யப்பயன்படும் மரக்கூழ் தயாரிப்பது, அந்நாட்டின் முக்கிய தொழில்களில் ஒன்று. எனவே அங்கு காகித உற்பத்தி, பெரும் அளவில் நடைபெறுகிறது. இவ்வசதியை பெற்றுள்ள ஸ்வீடன், நம் நாட்டுப் பள்ளிப்பிள்ளைகளுக்கான பாடப் புத்தகங்கள் தயாரிக்க, ஒரு குறிப்பிடத்தக்க அளவு காகிதத்தை இலவசமாக தந்து உதவியது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஸ்வீடனின் இன்னொரு உதவியும் குறிப்பிடத் தக்கது. செங்கற்பட்டு மாவட்டத்தைச்சேர்ந்த வயலூர் கிராமத்தில் கூட்டுறவு இயக்கம் மேலும் செம்மையுற, ஸ்விடன் சிறப்பான உதவி செய்து வருகிறது. வயலூர் காட்சிகளைக்காட்டும் வண்ணப்படங்கள் அச்சடிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் வாழ்த்துத் தாள்கள் ஸ்விடனில் விற்கப்பட்டு, அதன் மூலம் நிதிதிரட்டப்படுவதோடு, நம் மக்களுக்கும் ஸ்வீடிஷ் மக்களுக்கும் கலாச்சாரத் தொடர்பு வளர வழி செய்யப்படுகிறது.


நம்நாட்டில் இப்போது டெல்லியில் ஆரம்பமாகியுள்ள டெலிவிஷன் வசதியை, நான்காவது திட்டக்காலத்தில் சென்னை உள்பட, வேறு சில நகரங்களும் பெற விருக்கின்றன. அடுத்து, தமிழ்நாடு முழுவதும் இவ்வசதி பரவும் நாள் தொலைதூரத்தில் இராது எனக் கூறலாம்.

இப்போதுள்ள டெலிவிஷன் சாதன அமைப்பின்படி, டெலிவிஷன் நிலையம் உள்ள இடத்திலிருந்து சுமார் 40 மைல் சுற்றளவில் இருக்கும் இடங்கள்தான் பயன் பெறமுடியும்—அதாவது அவ்வளவு தூரம் வரைதான் டெலிவிஷன் ஒளி–ஒலிபரப்புகள் எட்ட இயலும். ஆனால், சமீபகாலமாக விண்வெளியில் விடப்படும் செயற்கைக் கோளங்கள், ஒளி–ஒலிபரப்புகளைக் கிரகித்து மீண்டும் பூமிக்கு அனுப்பும் தன்மை பெற்றிருப்பதால், அந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளும் முயற்சி உருவாகி வருகிறது.

இந்த ஏற்பாடு முழு அளவில் செயல்படத்தொடங்கிவிட்டால், உலகில் பல பகுதிகளிலும் உள்ள டெலிவிஷன் நிலையங்களின் நிகழ்ச்சிகளில் எதையும், விருப்பம்போல், டெலிவிஷன் பெட்டியுள்ள எவரும் கண்டு கேட்டுக் களிக்கும் அரிய வாய்ப்பு உண்டாகிவிடும்.

அத்தகைய நிலை ஏற்படும்போது, தமிழ்நாட்டில் டெலிவிஷன் வசதி பரவலாக அமைந்துவிடும் என எதிர்பார்க்கலாம்.

**கவிதை:**



(புலவர் ச. மருதமுத்து.)

சிறுதுளிகள் பல சேர்ந்தால் வெள்ள மாகும்
சிற்றெறும்புக் கூட்டமிதை அறிந்த தேபோல்
பொறுமையுடன் துகள்துகளாய் உணவைத் தேடிப்
பெருமழையின் போதுண்ணச் சேர்த்து வைக்கும் ;
'சுறுசுறு' ப்புத் தேனீக்கள் மலர்கள் தோறும்
சுவையுள்ள நற்றேனை எடுத்துச் சேர்க்கும்
வருங்கால நல்வாழ்வை வளமாய் ஆக்க
வகையுடனே சேமிப்பீர்! செழித்து வாழ்வீர்!

உண்டியலில் போட்டபணம் எந்த நாளும்
ஒருகாசு வட்டியதும் தாரா தென்றும்
கண்டிப்பாய்ப் பெட்டியிலே வைத்த 'நோட்டு'க்
கறையானுக் காவதுண்டு கள்வர்க் கும்ஆம்!
அண்டையிலே உள்ளவர்க்குக் கடனாய்த் தந்தால்
அவர்திருப்பிக் கொடுத்தால்தான் நம்ம தாகும்!
பண்டைநாள் புதையலதும் மண்ணுட் போகும்
பண்புடனே சேமிப்பீர்! சிறக்க வாழ்வீர்!

இன்றிருக்கும் மறுநாளில் நம்மை விட்டு
எதிர்பாரா தெவரிடமோ எங்கோ காசு
சென்றுவிடும் ஆகையினால் "செல்வம்" என்றார்!
செல்லாத காசதுவே எஞ்சி நிற்கும்.
நன்றுழைத்து ஊதியம் பெறுவார் தாமும்
நல்லதிரு நாளென்றால் விருந்து வந்தால்
அன்றுபடும் பாட்டினை நீர் அறிவீ ரன்றோ?
ஆகையினால் சேமிப்பீர்! சேர்ந்து வாழ்வீர்!

சீர்பெற்ற நல்வீடு கட்டி வாழச்
சிறப்புடனே மாடுமனை வாங்க என்றும்
நீர்பெற்ற நன்மக்கள் நன்கு கற்க
நலமுடனே அன்னவர்க்கு மணமே செய்ய ;
ஓர்கணக்குத் தொடங்கிடுவீர் இன்றே ; நன்கு
உயர்ந்திடலாம் திட்டமொடு வாழ்ந்தால் இந்தப்
பார்பெற்ற நற்பயனைத் தோன்றி யுள்ள
பயன்மிக்க சேமிப்பில் சேர்வீர்! வாழ்வீர்!

## கண்டறியாக் கலை நிகழ்ச்சி!

உலகப் பேரிலக்கியங்களில் நமது இராமாயணமும் ஒன்று. உலகப் பெரும் மொழிகள் அனைத்திலும் இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதே, இதற்குச் சிறந்த சான்றுகும். கவிப் பேரரசன் கம்பனின் இராமாயணம், தமிழ்ப் பெருமக்களின் உயிரோடு, உணர்வோடு கலந்த இலக்கியம் என்பதை அனைவரும் அறிவர்.

நமது இலக்கியத்தைப்பற்றி பெருமை கொள்வதற்கு நாம் உரியவர்கள்தான் என்றாலும், அது வேறு ஒரு நாட்டின் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்து நமது கண்முன்னே எழில் குலுங்கும் கலையாகக் களி நடனம் புரியும்போது, நமது மகிழ்ச்சி எல்லையற்றதாகி விடுகிறது.

இத்தகைய மகிழ்ச்சியை, தமிழ் மக்களுக்கு அளிக்கும் ஒரு கலை நிகழ்ச்சி, சென்னை நகரிலே, சென்ற நவம்பர் 7, 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்தோனேசியா நாட்டைச் சேர்ந்த கலைக் குழுவினர், இராமாயண நாட்டிய நாடகத்தை "மியூசிக் அகடமி" மண்டபத்தில் நடத்தி, தங்களுடைய பண்பாட்டை விளக்கினார்கள்.

இந்தோனேசியாவில் வேனிற் காலத்து முழு நிலவில் இராமாயண நாட்டிய நாடகத் திருவிழா நடத்தப்படுகிறது. தினந்தோறும் சுமார் இரண்டுமணி நேரம் நடக்கும் இந்த நாட்டிய நாடகம், தொடர்ந்து ஆறு பிரிவாக ஆறு நாட்கள் நடத்தப்படுவதாகும்.

இதன் கதை, நமது இராமாயணத்தை ஒட்டியதாக இருந்தாலும், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான ஜாவா மொழி இராமாயணத்தின் அடிப்படையில் இந்த நாட்டிய நாடகம் அமைக்கப் பட்டுள்ளது.

சீதையை இராவணன் அபகரித்துச் செல்லும் காட்சியில் இருந்து ஆரம்பிக்கும் இந்த நாட்டிய நாடகம், இராவணனின் வீழ்ச்சிக்குப் பிறகு விபீடணனின் முடிசூட்டு விழாவோடு முடிவடைகிறது. அயோத்தியை ஜாகர்த்தா என்று அழைப்பதும் வாலியை "பாலி" என்று அழைப்பதையும் தவிர, வேறு எந்தப் பெரிய மாறுதலும் இதில் இல்லை. இதில் கதாபாத்திரங்களுக்கு வசனம் இல்லை. அனைத்தையும் அபிநயம் மூலமாகவே நடிக்கிறார்கள். வாத்தியக்குழுவினரின் இசையுடன், கோஷ்டி கானமும் சேர்ந்து, நாட்டிய நடனத்திற்கு இனிமை தருகின்றன. வாத்திய இசை பெரும்பாலும் நமது ஜலதரங்கத்தைப் போன்ற 'கிண்கிணி' நாதம்தான். இசைக் குழுவினர் அனைவரும் மேடையிலேயே அமர்ந்து வாசிப்பது ஒரு புதுமையாகும். ஆடை ஆபரணங்கள் கண்ணுக்குக் கவர்ச்சி தருவதாக உள்ளன.

இராவணனின் அரசனுக்குரிய கம்பீரம், ராமனின் அமைதி, சீதையின் நாணம், வாலி, சுக்கிரீவன் ஆகியோர் வீரம், அனுமனின் பண்புகள் ஆகியவற்றை, சிறப்பாக கலைஞர்கள் காண்பித்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

வாலி—சுக்ரீவன், இராவணன்—சடாயு, ஆகியோருடைய போர்க் காட்சிகள் சிறப்பானவை; கலைஞர்கள் மற்போர் காட்சியை அபிநயத்திலே காண்பிப்பது மிகவும் கலை நுணுக்கம் வாய்ந்ததாகும். நமது இராமாயணத்தில் மாரீசன் ஓர் ஆண் பாத்திரம். ஆனால், இந்த இராமாயண நாடகத்தில் மாரீசன் பாத்திரம் ஒரு பெண்ணை சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நடனத்திற்கு நாடகத்தில் அதிக வாய்ப்பு அளிப்பதற்காக அப்படிச் செய்திருக்கலாம். அத்துடன் மானை ஒரு பெண்ணுகக் காட்டுவது, சாலப் பொருத்தமானதல்லவா! மாரீச மானை ஒரு பெண் நடனமாடினாள். மான், தனது முகத்தால் உடம்பைச் சொறிந்து கொள்ளும் காட்சி அற்புதம்! இறுதி



G.N.—5A

யில் சீதையின் புனிதத் தன்மையை சோதிக்க தீயை அணுகுவதும் தீக் கடவுள் சீதையை அணுகாமல் புனிதம் பற்றி சாட்சி சொல்வதும் அழகு மிகுந்த காட்சிகள்.

இந்தோனேசியாவில் இருந்து வந்திருந்த இக் கலைக் குழுவிற்கு ஜோக் ஜகர்தாவின் கவர்னரான இளவரசர் எட்டாவது ''பாக்கு ஆலம்'' தலைமை வகித்தார். அவருடைய குமாரிகள் மூவரும் இந்த நாட்டிய நாடகத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். தேவஜானி, ருக்மினி, விதநாரினி என்ற இம்மூவரும் சீதை, திரிசடை, மாரீசமான் ஆகிய வேடம் தரித்து வந்தார்கள்.

இந்தோனேசிய மருத்துவக்கல்லூரி மாணவரான ''சுலக்சோனோ'' என்பவர் ராமனாக நடித்தார். பொருளாதாரக் கல்லூரி மாணவர் ''சர்ஜாந்தோ'' என்பவர் இராவணனாக நடித்தார். அனுமானாக நடித்த இளைஞனின் பெயர் மர்சூதியாகும்.

நாற்பது பேர் கொண்ட இந்தக் குழுவில் பெரும்பான்மையோர் இஸ்லாமிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த நாட்டிய நடனம், கலையை மையமாகக் கொண்டு நடத்தப்படுகிறதே தவிர, எவ்வித மதச் சுவடும் இதில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் மூன்று நாட்கள் இந்தக் கலை நிகழ்ச்சி நடந்தது. முதல்நாள் நிகழ்ச்சிக்கு, தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு எம்.பக்தவத்ஸலம் தலைமை வகித்தார். கலைக் குழுவின் தலைவர் ''பாக்கு ஆலம்'' அவர்களுக்கு முதலமைச்சர் பொன்னாடை போர்த்திப் பேசுகையில், ''ஆசியாவின் பண்பாடுகள் அனைத்தையும் இராமாயணம் பிரதிபலிக்கிறதென்றும், இக் கலைக் குழுவிற்கு ஒரு ராஜ்யத்தின் கவர்னரே தலைமை வகிப்பது கலைக்குப் பெருமை அளிப்பதென்றும்'' கூறினார். நிகழ்ச்சியின் இறுதியில், கலைஞர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக் கலைஞர்களால் சால்வை போர்த்தப்பட்டு, கௌரவிக்கப் பட்டார்கள். மூன்றும் நாள் நிகழ்ச்சிக்கு தமிழக கவர்னர் திரு உஜ்ஜல் சிங் தலைமை வகித்தார்.

விழாவின் இறுதியில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு சே. எஸ். வெங்கடராமன் நன்றி கூறினார்.

சென்னை பாலர் அரங்கில் இக் கலைக் குழுவினருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைஞர்கள் இராமாயண நாட்டியம் நடத்தினார்கள். விழாவில் தமிழ்நாடு சங்கீத நாடகச் செயலாளர் திரு எஸ். டி. சுந்தரம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

—'சுஜா'

---

## காந்தி ஜெயந்தி, தீபாவளியின்போது கதர் விற்பனை ரூ. 135 லட்சம்; சென்ற ஆண்டைவிட 59 சதவிகிதம் அதிகம்

இவ்வாண்டு காந்தி ஜெயந்தி, தீபாவளி பண்டிகையின் போது, தமிழ்நாடு கதர், கிராமத்தொழில்கள் போர்டின் கதர் துறையினரால் ரூ. 135 லட்சம் அளவுக்குக் கதர் விற்பனையாகி இருக்கிறது. இது, மாவட்ட விற்பனை நிலையங்களில் இருந்து இதுவரை கிடைத்த தகவல்களின்படி உள்ளதாகும். 1966 அக்டோபர் 2 முதல் 16 வரையும் அக்டோபர் 28 முதல் நவம்பர் 11 வரையும் ஆக மொத்தம் 30 நாட்களுக்கு, கதர் விற்பனைக்கு விசேஷ கழிவு (special rebate) தரப்பட்டது.

சென்ற ஆண்டு விற்பனையான ரூ. 85.27 லட்சத்துடன் ஒப்பிடும்போது, இவ்வாண்டு விற்பனை ரூ. 49.73 லட்சம் அதிகம். அதாவது சென்ற ஆண்டை விட சுமார் 59 சதவிகிதம் அதிகம். புயலால் சில மாவட்டங்களில் ஏற்பட்ட சங்கடம் இல்லாமல் இருந்திருந்தால், கதர் விற்பனை இன்னும் சில லட்சம் ரூபாய் கூடியிருக்கும்.

கதர் விற்பனை, இவ்வாறு பாராட்டத்தக்க அளவில் இருந்ததென்றால், அதற்குக் காரணம், மாநிலம் முழுவதிலும், கதர்த் துறை அலுவலர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், ஆணையாளர்கள் மற்றும் வட்டார அளவில் உள்ள இதர ஊழியர்கள் ஆகியோரும் கூட்டாக எடுத்த முயற்சிகளே எனலாம்.

மாவட்டவாரியாக, கதர் விற்பனை விவரம் வருமாறு :

| | | விற்பனையான தொகை (ரூபாய் லட்சங்களில்.) |
|---|---|---|
| 1 | ஈரோடு | 10.00 |
| 2 | கோயம்புத்தூர் | 6.50 |
| 3 | திருப்பூர் | 7.00 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 5.50 |
| 5 | கரூர் | 6.70 |
| 6 | சேலம் | 5.50 |
| 7 | தர்மபுரி | 4.20 |
| 8 | விழுப்புரம் | 5.00 |
| 9 | கடலூர் | 7.03 |
| 10 | வேலூர் | 4.69 |
| 11 | திருவண்ணாமலை | 2.83 |
| 12 | திருவாரூர் | 3.80 |
| 13 | தஞ்சாவூர் | 3.50 |
| 14 | மதுரை | 8.00 |
| 15 | திண்டுக்கல் | 9.50 |
| 16 | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 5.00 |
| 17 | பரமக்குடி | 7.00 |
| 18 | திருநெல்வேலி | 6.25 |
| 19 | கோவில்பட்டி | 5.50 |
| 20 | நாகர்கோவில் | 9.00 |
| 21 | காஞ்சிபுரம் | 6.50 |
| 22 | சென்னை நகரம் | 6.00 |
| | மொத்தம் | 135.00 |















**படம் 1.**—யூனிசெஃப் (UNICEF) நிறுவனத்தின் நிர்வாக டைரக்டர் திரு லபாய்ஸ் (Mr. Labouisse) 21-11-66-ல் சென்னைக்கு விஜயம் செய்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில், பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டனர்.

**படம் 2.**—தஞ்சாவூர் மாவட்டம், அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியனில், நாகுடியில், பிரதம சுகாதார நிலையத்தை, 16-10-66-ல், முதலமைச்சர் திறந்து வைத்தார்.

**படங்கள் 3-4.**—ஸ்விடன் நாட்டு ஒலிபரப்பு நிலையக் குழுவினர், நவம்பர் மாதக் கடைசியில், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த கிராமங்களில் கிராம வளர்ச்சி வேலைகளை நேரில் கண்டு, இயற்கைச் சூழ்நிலையில், ஒலிப்பதிவும்—ஒளிப்பதிவும் (Television Coverage of Swedish Broadcasting Corporation) செய்தனர். (இதுபற்றிய செய்தி விளக்கத்தை, இவ்விதழில் காணலாம்.)

**படம் 5.**—12-11-66-ல் கோயமுத்தூர் வைத்தியக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வமயம், சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாஜலம் வைத்தியக் கல்லூரி மாணவர் விடுதியின் அடிக்கல்லை நாட்டினார்.







படம் 1—பிரதேச ராணுவப் படை தினம், 19-11-66-ல் சென்னையில் கொண்டாடப்பட்டது. தொழில் அமைச்சர் திரு ஆர் வெங்கடராமன் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

படம் 2.—சென்னையில், அகில இந்திய கூட்டுறவு வாரத்தை, தமிழ்நாடு கவர்னர் திரு உஜ்ஜல் சிங் 5-11-66-ல் துவக்கி வைத்தார். அவ்வமயம், "Madras Journal of Co-operation" விசேஷ மலரின் பிரதி ஒன்றை, மாநிலக் கவர்னரிடம், கூட்டுறவு அமைச்சர் திரு என். எஸ். எஸ். மன்றாடியார் அளித்தார்.

படம் 3.—சிறு சேமிப்பு நிறுவனத்தின் முதல் பிரச்சார வண்டியை, 21-11-66-ல், சென்னை கோட்டையில் முதலமைச்சர் பார்வையிட்டார்.

படம் 4.—16-11-66-ல் நடைபெற்ற சென்னை பத்திரிகையாளர் சம்மேளனத்தின் 11-வது வருடாந்திர மகாநாட்டை, இந்தியப் பிரஸ் கவுன்சில் தலைவர் திரு ஜே. ஆர். முத்ஹோல்கர் துவக்கிவைத்தார்.









படம் 1.—முது பெரும் சமூக சேவகி
டாக்டர் முத்துலட்சுமி ரெ
அவர்களின் 80-வது பிறந்த
விழாவை, திருமதி சரோ
வரதப்பன், அம்முசுவாமிநா
முதலியோர் சென்னையி
2-12-66-ல் சிறப்பாகக் கெ
டாடினர்.

படம் 2.—பத்திரிகை புகைப் படக்கார
சங்கத்தை, செய்தித் துறை அ
சர் திரு பூவராகன், 27-11-6
சென்னையில் துவக்கி வைத்
முதலமைச்சர். துவக்கவிழாவி
தலைமை வகித்தார்.

படம் 3.—சத்துணவுத் திட்டம் (Ap
Nutrition Programme) பற்றிய
நாள் கருத்தரங்கினை, 30-1
அன்று, புது டெல்லியில்
அரசாங்க உணவு விவசாய அ
சர் திரு சி. சுப்பிரமணியம் து
வைத்தார்

படம் 4.—நவம்பர் மூன்றுவது வார
சென்னையில் இந்தோனே
நாட்டுக் கலைஞர்கள் குழு 'இ
யண நாட்டிய நாடகத்'தை ந
ஞர்கள். அந்த நாடகத்திலிரு
ஒரு சுவையான காட்சி,

படம் 5.— இராமாயண நாட்டிய நாடகத்
பார்க்கக் குழுமியிருந்த
பெருமக்கள்.





## நெஞ்சை உருக்கும் காட்சிகள்

நவம்பர் முதல் வாரத்தில், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் வீசிய பயங்கரப் புயலினாலும், பெரு மழையினாலும் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புக்கு, சேத மேற்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் பகுதிகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் பகுதிகள், பலத்த சேதத்திற்கு ஆளாயின. நிவாரண வேலைகள், துரிதமாக நடைபெற்று வருகின்றன.

***படம் 1*** —சென்னையில் புயலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை, முதலமைச்சர் பார்வையிட்டு, நிவாரணவேலைகள் உடனடியாக நடைபெற, உத்தரவுகள் பிறப்பித்தார்.

***படங்கள் 2-லிருந்து 6 வரை.*** —புயலும் பெரு மழையும் விளைவித்த சேதக் காட்சிகளில் சில.

















# உணவு உற்பத்தி பெருக
# வானொலியின் புதிய பணி

''வானொலி ஓர் அதிசயப்பொருள்; அதில் நான் ''சக்தியை''—இறைவனின் அற்புத ஆற்றலைக்—காண்கிறேன்!'' என்றார், அண்ணல் காந்தியடிகள். வானொலியால் விளையக் கூடிய பயன்கள் பலப்பல, என்பதைத் தான் அவர் அவ்வாறு கூறினார். மக்களிடையே ஒரு தொடர்பு—கருவி என்ற முறையில், வானொலி, சக்தி மிக்கதொரு சாதனமாக, உலகெங்கும் விளங்கி வருகிறது. வெறும் கேளிக்கை—பொழுது போக்குக்காக மட்டுமின்றி, அறிவைப் பரப்புவதற்கு வானொலி, மேலும் மேலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உணவு உற்பத்தி சம்பந்தமாக அதி தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில், இந்திய நாட்டில் வானொலி ஒலி பரப்புக்கு, ஒரு புதிய பணி தரப் பட்டிருக்கிறது. ''பண்ணை, இல்லச் செய்திகள்'' (Farm and Home Broadcasts) என்ற புதிய ஒலிபரப்புத் திட்டத்தை, மத்திய உணவு விவசாய அமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்கள், 1966-ம் ஆண்டு ஜூன் திங்களில் துவக்கி வைத்தார். நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 வானொலி நிலையங்களில் இது ஆரம்பிக்கப்பட்டது. அவற்றில் திருச்சி நிலையமும் ஒன்று. தஞ்சையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சிறப்பு நிகழ்ச்சியில், உள்துறை -விவசாய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள், இந்தப் புதிய திட்டத்தை தமிழ் நாட்டில் ஆரம்பித்து வைத்தார். அந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் விவசாயப் பெரு மக்களும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தப் புதிய ஒலிபரப்புத் திட்டம் செம்மையாகச் செயல்பட, ஒரு மாவட்ட விவசாய வளர்ச்சி அதிகாரி, ஒரு கிராம சேவக் ஆகியோர் திருச்சி நிலையத்தில் பணி புரிய, அரசாங்க அனுமதி வழங்கப்பட்டது. கிராம மக்களுக்கான ஒலிபரப்புகள், விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், தக்க நிகழ்ச்சிகள் இடம் பெறும் படியாக, இப்போது பெரிதும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு, (உணவு உற்பத்திப் பெருக்கப்பணி சம்பந்தமான) அவர்களது அனுபவங்கள், யோசனைகளை கேட்டறிந்து, அந்தப் பேட்டி விவரங்களை ஒலிபரப்புவது, இன்று அநேகமாக நாள்தோறும் நடைபெறுகிறது. கிராம வளர்ச்சி பற்றிய எல்லா அலுவல்கள் சம்பந்தமாகவும் நடைமுறை குறிப்புகளும், தொழில் நுட்ப ரீதியான தகவல்களும் தினசரி வானொலி மூலம் தரப்படுகின்றன—குறிப்பாக இரவு 7-30 முதல் 8-00 மணி வரை இந்தத் தகவல்கள் ஒலிபரப்பப் படுகின்றன. இந்தப் ''பண்ணைச் செய்திகளில்'' பஞ்சாயத்து வளர்ச்சிப் பற்றிய செய்திகள் அதிகமாக இடம் பெறுகின்றன. கிராம வானொலி மன்றங்கள் அனுப்பும் கேள்விகளுக்கு, வாரந்தோறும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பதில் சொல்லப்படுகின்றன.

### அமைப்பு முறை திருத்தியமைக்கப்பட்டது

கிராம வானொலி மன்றங்களுக்கான அமைப்பு, அண்மையில் சீரான முறையில் திருத்தியமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் சமீப ஆணைகளின்படி, கிராம வளர்ச்சி நெறியாளர், கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளராக (Chief Organiser of Radio Rural Forums) இருக்கிறார். பஞ்சாயத்து அலுவல்கள் சம்பந்தமான, கலெக்டர்களின் தனி உதவியாளர்கள் [Personal Assistants, Panchyat Development to the Collectors] கிராம வானொலி மன்றங்களின் பிராந்திய அமைப்பாளர்களாக இருக்கும்படி பொறுப்பு தரப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டின் பலனாக, மாநிலத்திலுள்ள 23 அபிவிருத்தி மாவட்டங்களிலும் இருக்கும் கிராம வானொலி மன்றங்களை மேற்பார்வை செய்வதும், அவை எவ்வாறு இயங்குகின்றன எனப் பரிசீலனை செய்வதும், அந்தந்த அபிவிருத்தி மாவட்டங்களில் பஞ்சாயத்து அலுவல்களுக்குப் பொறுப்பாக உள்ள இந்த அதிகாரிகள் மூலமாக தீவிரமாக நடைபெறும்.

## தமிழகத்திற்குப் பாராட்டு

இந்த கிராம வானொலி மன்றத் திட்டம், தமிழ் நாட்டில் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் நாள், அப்போதைய முதலமைச்சர் திரு கு. காமராஜ் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது நினைவிருக்கும். இத்திட்டத்திற்கு, இந்த மாநிலத்தில் மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்தது. அகில இந்திய வானொலியின் டைரக்டர்-ஜெனரலும், வெளி மாநிலங்களிலிருந்து வரும் முக்கிய பிரமுகர்கள் பலரும், தமிழ் நாட்டில் கிராம வானொலி மன்றங்கள் முறையைப் பாராட்டி இருக்கிறார்கள். இவ்வகையில் அகில இந்திய வானொலியின் திருச்சி, சென்னை நிலையங்களின் டைரக்டர்களுக்கும், மாநில அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்குமிடையே மிகுந்த ஒத்துழைப்பும் ஒருங்கிணைந்த செயல்பாடும் இருந்து வருகின்றன. தமிழ் நாட்டில் கிராம வானொலி மன்றங்கள் பற்றிய பாராட்டுக் குறிப்பு, ஐக்கிய ஸ்தாபன அறிக்கையொன்றில் இடம் பெற்றிருக்கிறது.

சீன ஆக்கிரமிப்பின் போது, கிராம வானொலி மன்ற அலுவல்கள் விசேஷ முக்கியத்துவம் பெற்றன ; ஒரு ரெவின்யூ கோட்டத்திற்கு ஒருவர் வீதம், கிராம வானொலி மன்ற அமைப்பாளர்களுக்குப் பயிற்சி முகாம் ஒன்று 1963-ல் நடத்தப்பட்டது. அதை முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். ரெவின்யூ கோட்ட அளவில் கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு ஒன்று, கோவையில் ஆகஸ்டு 1964-ல் தல ஆட்சித்துறை அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உத்தியோகச் சார்புள்ளவர்களும் சார்பற்றவர்களுமான களப் பணியாளர்களின் அனுபவங்கள் விவாதிக்கப்பட்டு, திட்டத்தை, மேலும் வெற்றி பெறச் செய்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டன.

இன்று தமிழ் நாட்டில் 680 கிராம வானொலி மன்றங்கள் இருக்கின்றன. மாவட்ட வாரியாக விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 | வடார்க்காடு | 52 |
| 2 | தென்னார்க்காடு | 35 |
| 3 | சேலம், தர்மபுரி | 113 |
| 4 | கோயம்புத்தூர் | 53 |
| 5 | தஞ்சாவூர் | 85 |
| 6 | திருச்சிராப்பள்ளி | 117 |
| 7 | நீலகிரி | 7 |
| 8 | மதுரை | 23 |
| 9 | கன்னியாகுமரி | 7 |
| 10 | செங்கல்பட்டு | 30 |
| 11 | இராமநாதபுரம் | 68 |
| 12 | திருநெல்வேலி | 90 |

எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் சமுதாய வானொலிப் பெட்டிகள் பொருத்தியுள்ள தனிச் சிறப்பான பெருமையை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், சில குக்கிராமங்கள் உட்பட, 14,568 சமுதாய வானொலிப் பெட்டிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது.

| மாவட்டத்தின் பெயர். | பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை. | குக்கிராமங்களின் எண்ணிக்கை. | வானொலிப் பெட்டிகளின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செங்கல்பட்டு | 1,216 | 30 | 1,246 |
| வடார்க்காடு | 1,541 | 169 | 1,710 |
| தென்னார்க்காடு | 1,682 | 169 | 1,851 |
| தஞ்சாவூர் | 1,568 | 109 | 1,677 |
| மதுரை | 858 | 211 | 1,069 |
| இராமநாதபுரம் | 1,287 | 145 | 1,432 |
| திருநெல்வேலி | 848 | 275 | 1,123 |
| கன்னியாகுமரி | 46 | 82 | 128 |
| திருச்சிராப்பள்ளி | 1,235 | 213 | 1,448 |
| சேலம், தர்மபுரி | 1,353 | 208 | 1,561 |
| கோயம்புத்தூர் | 847 | 380 | 1,227 |
| நீலகிரி | 46 | 50 | 96 |
| மொத்தம் .. | 12,527 | 2,041 | 14,568 |

வானொலிப் பராமரிப்புக்கான நிர்வாக அமைப்பும்(Radio Maintenance Organisation) இந்த மாநிலத்தில், கடந்த சுமார் முப்பதாண்டுகளாக, நன்கு நிலை பெற்று வந்திருக்கிறது. மதுவிலக்கு, பழைய சென்னை மாகாணத்தில், முதன் முதலாக 1937-ல் கொண்டு வரப்பட்டபோது, குடிப்பழக்கம் கொண்டிருந்தவர்களுக்குத் திருந்திய நல்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளையொட்டி, நற்பண்புகளை வளர்க்கும் கேளிக்கை—பொழுது போக்கு நிகழ்ச்சிகளை வழங்கும் நோக்கத்தோடு, மாநில வானொலி ஒலி பரப்புத்துறை (State Broadcasting Department) ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஒலி பரப்புத்துறை படிப்படியாக விரிவடைந்து, அண்மையில் “பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்புக்கான நிர்வாக அமைப்பு” (Panchayat Radio Maintenance Organisation) என்ற புதிய பெயரில் திருத்தியமைக்கப்பட்டு, இப்போது கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தில் ஒரு பகுதியாக இடம் பெற்றிருக்கிறது. இந்த அமைப்பு, எல்லாப் பஞ்சாயத்துக்களிடம் உள்ள சமுதாய வானொலிப் பெட்டிகளின் பராமரிப்புப் பணிக்குப் பொறுப்புடையதாகும்.

## இல்லச் செய்திகள்

கிராம மாதர்களுக்கான விசேட நிகழ்ச்சிகளும், திருச்சி வானொலி நிலையத்தில் இருந்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், மாலை 6–45 முதல் 7–15 வரை, அரை மணி நேரம் ஒலிபரப்பாகின்றன. சில மாதர் சங்கங்கள், தாங்களாக முன் வந்து எடுத்த முயற்சிகளின் பலனாகவும் மாதர் நலத்துறை நெறியாளர் காட்டிய அக்கறை காரணமாகவும், தமிழ்நாட்டில் இப்போது சுமார் 92 மாதர் வானொலி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. திருச்சி வானொலி நிலையத்தில் காலாண்டுக்கு ஒரு முறை கூடும் கிராம ஆலோசனைக் குழுவின் விவாதத்திற்குப் பிறகு, மாதர்களுக்கான விசேஷ ஒலி பரப்புகளில் கிராமப்புற மாதர்கள், குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் முன்பைவிட அதிகமாக இடம் பெறுகின்றன.

## செயலில் கவன ஈர்ப்பு

கிராம வானொலி மன்ற ஒலிபரப்புகளின் சிறப்பு அம்சம் என்னவெனில், கிராம மக்கள் தங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவோ, கூட்டாகவோ பயன் அளிக்கக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்த அவர்களுக்கு உற்சாகத் தூண்டுதல் ஏற்படுகிறது. இந்த விசேஷ ஒலிபரப்புகள் வாயிலாக, பல்வேறு மாவட்டங்களில் வாழும் பல்வேறு கிராம மக்கள் தங்களுக்குள் விவாதிக்க, வசதி கிடைக்கிறது. நடைமுறை வேலைகள் மூலம் அவரவர்களுக்குக் கிடைக்கும் அனுபவங்களை ஒருவர்க்கொருவர் பரிமாறிக்கொள்ளுதல் ஊக்குவிக்கப் படுகிறது.

உதாரணமாக, தெரிந்தெடுக்கப்பட்ட சில மன்றங்கள் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு, அவை பற்றி மன்ற உறுப்பினர்கள் விவாதம் நடத்தியதன் பயனாக, சில முக்கிய வேலைத் திட்டங்களை நிறைவேற்றியிருப்பது பற்றி தெரிவித்துள்ளன.

அதிக மாசூல் தரும் பயிர் வகைகளான ஏடிடி (ADT)—27, சிஓ (CO)—29 ஆகியவற்றைப் பல விவசாயிகள் சாகுபடி செய்தனர். இதில் சுவையான செய்தி என்னவெனில், ஏடிடி—27 நெல் ரகத்திற்கு, ‘ரேடியோ நெல்’ என்றே, கிராம மக்களிடையே பெயர் வழங்குகிறது.

வானொலி நிகழ்ச்சிகளில் கேட்ட யோசனைகள், அறிவுரைகளின் பலனாக, கால்நடைகளும், கோழிகளும் நோய்களினின்றும் காப்பாற்றப்பட்டுள்ளன.

கிராம மக்களால், பாசனக்கால்வாய் ஒன்று வெட்டப் பட்டது.

கிராம வானொலி மன்ற உறுப்பினர்கள், ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்டபின், தங்களுக்குள் விவாதம் நடத்துவதால், அதைத் தொடர்ந்து செயல் திட்டங்கள் உருவாகி நிறைவேற்றப்படுகின்றன என்பதற்கு, மேற்சொன்னவை ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும்.

## பரிசு பரிமாற்றம்

இதே போன்ற வானொலி மன்றங்கள் இயங்கி வரும் நாடுகளில் கனடாவும் ஒன்று. அங்கு ‘பண்ணை மன்றங்கள்’ (Farm Forums) என்ற பெயரில் உள்ள அவை, நமது கிராம வானொலி மன்றங்களுடன் பரிசுகளை பரிமாற்றிக்கொள்ள முன் வந்துள்ளன. இரு நாடுகளின் மக்களுக்கிடையே இருந்து வரும் நட்பையும், தோழமை உணர்வையும் மேலும் உறுதிபடுத்தும் நோக்கத்தைக் கொண்டது இத்திட்டம்.

கனடா ஒலிபரப்பு நிறுவனத்தில் (Canadian Broadcasting Corporation) பண்ணை மீன் வளத்துறையின் முதல்வரான (Head of the Farm Fisheries Department) திரு ராபர்ட் எச். நோயல்ஸ், சமுதாய வளர்ச்சி பற்றிய தேசீயக் கல்வி நிலையத்தில் (National Institute of Community Development) அண்மையில் நடைபெற்ற அகில இந்திய கருத்தரங்கின்போது, அங்கு வந்திருந்தார். அதுபோது, தமிழ்நாடு கிராம வளர்ச்சி நெறியாளரின் பிரதிநிதி ஒருவர், திரு ராபர்ட்ஸுடன் உரையாடி, பண்ணை மீன் வள அபிவிருத்திப் பணிகளுக்கு, வானொலியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக, அவருடன் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டார்.

கனடா மன்றங்களுடன் பரிசுகள் பரிமாறிக் கொள்ள, தங்கள் பங்கைச் செலுத்தியுள்ள கீழ்க்கண்ட ஏழு கிராம வானொலி மன்றங்கள், மேற்படி பரிசுத் திட்டத்தில் கலந்து கொள்ள, (ஒவ்வொரு மன்றமும் ஒரு டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டி பெற) தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :

1 கீழ்க்கொவளவேடு, வந்தவாசி பஞ்சாயத்துயூனியன், வடார்க்காடு மாவட்டம்.

2 குள்ளம்பாளையம்,கோபிசெட்டிப்பாளையம் பஞ்சாயத்து யூனியன், கோயம்புத்தூர் மாவட்டம்.

3 வாங்கல், கரூர் பஞ்சாயத்து யூனியன், திருச்சிராப் பள்ளி மாவட்டம்.

4 சிலாத்தூர், அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியன், தஞ்சாவூர் மாவட்டம்.

5 பூலாம்பட்டி, இடப்பாடி பஞ்சாயத்து யூனியன், சேலம் மாவட்டம்.

6 போடிநாய்க்கன்பட்டி, வாடிப்பட்டி பஞ்சாயத்து யூனியன், மதுரை மாவட்டம்.

7 வளர்புரம், ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன், செங்கல்பட்டு மாவட்டம்.

## பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்



திரு பி. வி. எஸ். சோமசுந்தரம், தலைவர், ரெட்டியார் சத்திரம் பஞ்சாயத்து யூனியன், மதுரை மாவட்டம்.

வயது 38. பிறப்பிடம் ரெட்டியார் சத்திரம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பன்றிமலை. யூனியன் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்கு மதுரை மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்; பட்டிவீரன்பட்டி காப்பி கூட்டுறவுச் சங்கத்தின் உதவித் தலைவர்.

சிறந்த விவசாயி. இவருடைய முயற்சியால் பன்றிமலை, மற்றும் அதைச் சார்ந்த மலைக் கிராமங்களுக்கு குடி தண்ணீர்த் தொட்டி, கிணறுகள், ரோடு வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

(இவருடைய படம், முன்பே பிரசுரிக்க இயலாமல் விட்டுப்போய்விட்டதினால், இப்பொழுது பிரசுரித்துள்ளோம்.)

---

### நான்காவது திட்டம்–சிறப்பியல்புகள்:

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் சற்றும் குறையாமல் நீடித்து நிற்கும்படியாக பார்த்துக்கொள்ளப்படும். நெய்வேலி இல்லாமல், சென்னை மின்சார உற்பத்தித்திறன், 3-வது திட்ட இறுதியில் 1,075 மெகாவாட்டுகளாக இருந்தது. நான்காவது திட்ட இறுதியில் இது 680 மெகாவாட்டுகள் அதிகமாகும். பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், பேஸின் பிரிட்ஜ் மின்சார நிலைய விஸ்தரிப்பு, எண்ணூரில் புதிய 340 மெகாவாட் மின்நிலையம் ஆகியவைகளெல்லாம் 4-வது திட்டக் காலத்தில் முடிவடைந்துவிடும். திட்டக்கமிஷன் அங்கீகாரத்துடன், 100 மெகாவாட் சக்தித் திறனுடைய புது அனல் மின்விசை நிலையத்திற்கும் 100 மெகாவாட் சக்தித்திறனுடைய பாண்டியாறு—புன்னப்புழா நீர் விசைத் திட்டத்திற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் விசை நிலையத்தில் சக்தியைப் பெருக்குவதற்கும், கல்பாக்கம் அணு மின் விசை நிலையத்திற்கும் மத்திய அரசாங்கம் 27 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால், அணு மின் விசை நிலையத்தின் பலன்கள் ஐந்தாவது திட்டக்காலத்தில் தான் கிடைக்கும்.

### தொழில் துறையில் சிறப்பு அம்சங்கள்

மூன்றாவது திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக ரூபாய் 24 கோடி முதலீடு செய்யப்பட்டது. 4-வது திட்டத்தில், இது 44 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். தொழில் நிதி முதலீடு கார்ப்பொரேஷன், சென்னை தொழில் கூட்டுறவு பாங்கி போன்ற தனியார்த் துறைக்கு நிதி உதவி தரும் நிறுவனங்களுக்கு நிறைய பண வசதி கிடைக்க, திட்டம் வகை செய்துள்ளது. தவிர, சில கேந்திரத் துறைகளில், அரசாங்கமே அண்மையில் நேரிடையாகவும் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளது. இராஜபாளையம் சிமிட்டித் தொழிற்சாலை, அரக்கோணம் வார்ப்படத் தொழிற்சாலை, புதிய இயந்திரக் கருவி மற்றும் இயந்திரக் கருவி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, கூட்டுறவு நூற்பு ஆலைகள் விஸ்தரிப்பு, இப்பொழுதுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விஸ்தரித்தல், கிராமப்புறங்களில் தொழில் பேட்டைகள் அமைப்பதின் மூலம் சிறு தொழில்களை பரவலாக அபிவிருத்தி செய்தல், தொழில்பேட்டைகள் அமைத்தலில் மாநிலத்தில் முன்பே குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், பெருந்தொழில்கள் சிறு தொழில்களுக்கிடையே தொழில் பேட்டைகள் மூலம் நெருங்கிய ஒருங்கிணைப்பு ஏற்பாடு செய்தல், ஆகியவை, தொழில் துறையில், தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

### சமூக நலப் பணிகளுக்கும் முக்கியத்துவம்

கல்வி, வைத்தியம், சுகாதாரம், குடிநீர், குடியிருப்பு வசதி, பின்தங்கிய வகுப்பினர் நலன் ஆகிய பல சமூக நலப் பணிகளுக்கு முன்னைவிட அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இலவச, கட்டாயக் கல்வி தர வேண்டுமென்ற தேசிய நெறி முறைக்குறிக்கோளினை 4-வது திட்டக்காலத்திற்குள், இந்த மாநிலம் பூராவும் எய்துவிட முடியும். ஏழை மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு இன்னும் தடங்கலாக உள்ள சில சிரமங்களையும் குறைபாடுகளையும் நீக்குவதற்காக வேண்டி, இலவசக் கல்வியுடன் ஆரம்பப் பள்ளிகளில் இலவசமாகப் புத்தகங்களும், சீருடைகளும் வழங்கப்பெறும். நகரங்கள்—கிராமங்களுக்கிடையே, வளர்ச்சித்துறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்காக வேண்டி, அடிப்படை வசதிகளாகிய இணைப்புச் சாலைகள், குடிநீர் வழங்கல், ஆரம்பப்பள்ளிகளுக்கு பள்ளிக் கட்டிடம் கட்டுதல் ஆகியவற்றுக்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின் வசதி அளிப்பதில் ஏற்கனவே இந்த மாநிலத்தில் எதிர்கால வளர்ச்சிக் கண்ணோட்டத்துடன் ஒரு நடைமுறை வேலைத் திட்டமானது அமுல் செய்யப்பட்டு வருகிறது. இதனால், நான்காவது திட்டக்கால முடிவில், எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுவிடும். குன்றுப்பிரதேசங்கள், பின் தங்கிய பகுதிகள் அபிவிருத்திக்காக வேண்டி, சிறிய, ஆனால், தனியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அசைக்க முடியாத நம்பிக்கை

சுருக்கமாகச் சொன்னால், மாநிலத்தில் நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முறையிலிருந்து, இந்த மாநிலத்தில் எல்லாத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றத்தைக் காண முடியும் என்பது தெரிகிறது. கடந்த திட்டங்களையெல்லாம், இந்த மாநிலமானது நிறைவேற்றி வைத்துள்ள முறையையும் சாதனையையும் பார்த்தால், மாநிலத்தின் நான்காவது திட்டமானது ஓரளவு பெரிதாக இருந்தாலும், திட்ட இலக்குகளையும், நிதி இலக்குகளையும், சற்றும் குறைபாடு இல்லாத முறையில் அடைந்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் உறுதியும் ஏற்படாமல் போகாது.

# பாலம்பூர் கிராமத் தொழில்கள் திட்டம்.

கங்கரா பள்ளத்தாக்கு புல்வெளிப் பிரதேசத்திலே புகையைக் கக்கும் கருப்பு நிற புகை போக்கிகள் இல்லை; சங்குகள் அலறும் நீண்ட சப்தம் இல்லை. தொழிற் கூடங்களின் உள்ளும் புறமும் தொழிலாளர்கள் ஈக்கள் போன்று மொய்த்துக்கொண்டிருக்கவில்லை. பள்ளத்தாக்கின் அமைதியைக் கெடுக்க பல தொழில் இயந்திரங்கள் அங்கு இரைச்சலிடவில்லை. 'தௌலாதார்' என்ற 14,000 அடி உயரமான மலைச் சிகரத்தின் கீழேயுள்ள கங்கராவில், வாழ்க்கை மெதுவாக, அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது. இங்குள்ள அழகிய தோப்புகளுக்குள்ளே புதையுண்டவாறு அமைந்துள்ள சுத்தமான இல்லங்கள், பவித்திரமான கிராமவாசிகளைக் காணும்போது மனத்திற்கு நிம்மதி ஏற்படுகிறது. பசுமையான வயல்களைச் சுற்றிச் செல்லும்போது, நாட்டுப் பாடல்கள் இசைத்து, அந்த இசைக்கேற்ப ஆண்களும், பெண்களும் நடனம் புரிவது போன்று, ஓடி ஆடி வேலை செய்வது பார்ப்போர் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும்.

இம் மாதிரியான ஓர் இடத்திலே, சூழ்நிலையிலேதான் "பாலாம்பூர் கிராமத் தொழில்கள் திட்டம்" செயல்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தில், பஞ்ச்ருக்வி, பைஜ்நாத், கங்க்ரா, தெஹ்ரா கோபிபூர் என்ற நான்கு வட்டாரங்கள் அடங்குகின்றன. மொத்தம் 147 கிராமங்களையும், அதிலுள்ள சுமார் 2 லட்சம் மக்களையும் கொண்டுள்ள பகுதியிலே இத் திட்டம் அமுலாகி வருகிறது. இக் கிராமங்களில் கோதுமை, நெல், சோளம், பார்லி, தேயிலை போன்றவை பெரும்பான்மையாகவும், முசுக்கட்டை, கம்பளி, மூங்கில் போன்றவை அடுத்தபடியாகவும், பயிரிடப்படுகின்றன. தோல் பதனிடுதல் போன்ற தொழில்களும் இங்குண்டு.

## மந்தமான பொருளாதார நிலை

பொதுவாக மலைப்பிரதேசங்களிலேயே, பொருளாதார நிலை சற்று பின்தங்கியே இருக்குமல்லவா? அதற்கு விதி விலக்கானதல்ல, இந்தப் பகுதியும். விவசாயத்தை நம்பி வாழ்வோர் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. 80 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்; ஆனால் உணவு உற்பத்தியோ மிகவும் குறைவு. ஒரு விவசாயியின் வருமானம் ரூ. 263 தான். இப்பிரதேசத்தின் மொத்த வருவாயில் 50 சதவீதம் மட்டுமே விவசாயத்தின் மூலம் கிடைக்கிறது.

பாலாம்பூர் திட்டப் பகுதியில், தொழிற்சாலைகள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு பெரும் பெரும் தொழிற்கூடங்கள் இல்லைதான். ஆனாலும் சிறு சிறு தொழிற் பிரிவுகள் திட்டப் பகுதி பூராவிலும் ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக, பற்பல தொழிற் பிரிவுகள், திட்டத்தின் உதவியினால் தோன்றியுள்ளன. தேயிலைத் தூள் தயாரித்தல், கம்பளி நூல் தயாரித்தல், கம்பளி நூல் நூற்றல், பின்னுதல் போன்ற சிறு தொழில்களுக்கான தொழிற் பிரிவுகளும், கோழிப் பண்ணை பிரிவும், மரவேலை, காலணிகள் தயாரிப்பு, நெல் அரைக்கும் பிரிவு போன்ற பிரிவுகளும் இங்கு தோன்றியுள்ளன. முன்பெல்லாம் தொழிலாளிகளாக இருந்தவர்கள், இப்போது அரசாங்கத்தின் உதவியினால், மேற்கூறிய தொழில்களில் ஈடுபட்டு, தொழிற் பிரிவுகளை துவங்கியுள்ளனர். தொழிற் பயிற்சி, பண உதவி ஆகியவற்றை பெற்று, தொழிலில் இறங்கியதால், இன்று அவர்கள் அவற்றின் உரிமையாளர்களாக இருக்கின்றனர்.

## பற்பல தொழில் பிரிவுகள்

இந்தத் திட்டப் பிரதேசத்தில் ஒரு முக்கியமான அம்சத்தையும் நாம் கவனிக்கிறோம். இம் மாதிரியான தொழிற் பிரிவுகள் பலவற்றை காணும்போது, அவற்றின் உரிமையாளர்களையும் நாம் பார்க்கத் தவறுவதில்லை. அவர்களெல்லாம் தொழிலின் மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொண்டிருப்பதுடன், மற்றவர்களுக்கும் வேலை அளித்து, அவர்களுக்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களில் சிலரை நாம் இங்கே காண்போம்:

## மட்பாண்டத் தொழிலாளி

ஜாவலாமுகி என்ற கிராமத்தைச் சார்ந்த திரு பர்ராம் என்பவர் ஒரு

மண்பாண்டம் செய்யும் தொழிலாளி. அவருக்கு ரூ. 200 உதவித் தொகை அளிக்கப்பட்டது. அதைக் கொண்டு அவர் 'பட்டி' என்ற நவீன சூளே, ஒன்றை நிர்மாணித்தார். இதற்கு அதிக விறகு தேவையில்லை; எதுவும் வீணுகப் போவதும் கிடையாது. மழைக் காலங்களில் கூட 'பட்டி'யில் இவர் மட்பாண்டங்களை தயாரிக்க முடியும். இதன் உதவியினுல் இவர் தொழிலில் நல்ல வளர்ச்சியடைந்து 25-50 சதவீதம் அவரது இலாபம் உயர்ந்துள்ளது. அவருடைய பூந்தொட்டிகளுக்கு ஏகப்பட்ட கிராக்கியிருக்கிறது. ஒரு பெரிய பலகையில், தன்னுடைய பெயரை பொறித்து, தன் வீட்டிற்கு முன் அவர் அழகாக தொங்கவிட்டிருக்கிருர்.

**தச்சுப் பட்டறை உரிமையாளர்**

அதே ஜாவலாமுகியில் ஒரு தச்சுப்பட்டறை பிரிவும் இருக்கிறது. திரு எஸ். கியான்சிங் என்பவர் ரூ. 300 உதவித்தொகை பெற்று, நவீன கருவிகளை வாங்கி, இதை நிறுவியுள்ளார். ஏற்கெனவே இவர் தினக்கூலி தொழிலாளியாக இருந்தவர். இவருக்குத் தகுந்த பயிற்சியும், உதவியும் அளிக்கப்பட்டதில், மரச்சாமான்களில் பெரும்பாலானவற்றை இவர் தன் பிரிவில் தயாரிக்கிருர். இவருக்கு நிறைய "ஆர்டரும்" கிடைக்கிறது; இப்போது அவருடைய மாத வருவாய் ரூ. 300 ஆகும். இவரிடத்தில் மூன்றுபேர் வேலை செய்து வருகின்றனர்.

**ரூ. 30 சம்பாதித்தவர் ரூ. 300 சம்பாதிக்கிருர்**

தெஹ்ரா கோபிபூரைச் சேர்ந்த திரு மங்கட்ராம், 1963-ம் ஆண்டு, மாதம் ஒன்றுக்கு ரூ. 30-தான் சம்பாதித்து வந்தார்; விவசாயக் கருவிகளை பழுது பார்த்தலே அவரது அன்றைய தொழில். ஆனுல் இன்று அவர், ஓர் உலோகங்கள் பற்றவைக்கும் பிரிவையும், சாணைக்கல் இயந்திரத்தையும் அமைத்திருக்கிருர். சாணைக்கல் இயந்திரத்தின் மூலமாக மட்டுமே இவருக்கு நாளொன்றிற்கு ரூ. 10 நிகர லாபம் கிடைக்கிறது.

இவருக்கு ரூ. 1,000 உதவித் தொகை அளிக்கப்பட்டது; மேலும் இவர் ஜலந்தருக்கும் பாலாம்பூருக்கும் அனுப்பப்பட்டு ஆங்காங்கே பயிற்சியளிக்கப்பட்டார். திட்ட அதிகாரிகள் அளித்த உதவி, ஊக்கத்தாலும், தன்னுடைய வெற்றியினுலும் உந்தப்பட்ட திரு மங்கட்ராம், சிறிய விவசாயக்கருவிகள் பழுது பார்க்கும் பிரிவு ஒன்றையும் சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளார்.

**கோழிப்பண்ணையால் மாதம் ரூ. 200 லாபம்**

திட்ட அதிகாரிகள், திரு பகட்ராம் என்பவரை அணுகி, அவருக்கு ஆர்வமூட்டி, ஒரு கோழிப்பண்ணையை துவக்க ஆவன செய்தனர். கோழிப்பண்ணைக்கு தேவையான பயிற்சியும் அவருக்கு அளிக்க வகை செய்யப்பட்டு, பயிற்சிக்குப் பின் ரூ. 1,000 கடனும் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஏற்பட்ட சிற்சில கஷ்டங்களை வெற்றிகரமாக கடந்துவிட்ட இவருக்கு, இப்போது கோழிப்பண்ணையின் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 200 லாபம் கிடைத்து வருகிறது.

இப்படியே ஒவ்வொருவரையும் பற்றி விவரித்துக்கொண்டே போனுல், பட்டியல் நீண்டுக்கொண்டே போகும். எனவே இங்கே அவர்களை சற்று நிறுத்திவிட்டு, திட்டப் பகுதியைப் பற்றியும் திட்டத்தின் ஆக்கம் பற்றியும் சிறிது காண்போம்.

**இன்னல்கள் அகன்றன**

பாலாம்பூர் திட்டப் பகுதி வாழ் மக்களை தொழில்துறையில் ஈடுபடுத்த அதிக சிரமம் ஏற்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் அளிக்கும் பயிற்சியையும், உதவித்தொகையையும் கொண்டு எவ்வளவோ ஆர்வமூட்டினுலும், சில அடிப்படை இன்னல்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனுல் அவற்றையெல்லாம் மாநில அரசாங்கம் நல்லமுறையில் தீர்த்து வைத்துள்ளது; திட்ட அதிகாரிகளும், பல்வேறு திட்டங்களை செம்மையான முறையில், மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி வருகின்றனர். இதன் காரணமாக சிலர் தாங்களே திட்டங்களை தீட்டி, ஆலோசனைக்கும் உதவிக்குமாக அதிகாரிகளிடம் வருகின்றனர். இன்னும் சிலர், தங்களுக்கு தகுந்த திட்டங்களை அளிக்குமாறு அதிகாரிகளையே கேட்டுக்கொள்கின்றனர். எவ்வாறு இருப்பினும், புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் எல்லோருமே ஆர்வம் காட்டுகின்றனர்.

ஒரு நகரத்திலே 1,900 பேர்களுக்கு வேலையளிக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கி, செயல்படுத்துவது ஒரு சிரமமான காரியமேவல்ல; ஆனுல் ஒரு கிராமப்புறத்திலே, இவ்வாறு பற்பல தொழிற் பிரிவுகளை நிறுவி, அவற்றின் மூலம் இவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பும், தொழில் உரிமையும் அளித்திருப்பது ஒரு பெரிய சாதனை என்றே திட்டவட்டமாக கூறமுடியும்.

**திட்டத்தின் சாதனை**

50-க்கு மேற்பட்ட புதிய தொழிற் பிரிவுகள், தொழில் கூட்டுறவு சங்கங்கள், பலவிதமான பொது வசதி பட்டறைகள், ஆகியவை தவிர்த்து, 180 பேர்களுக்கும் தொழிலில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

ஒரு நவீன தேயிலை கூட்டுறவு தொழிற்சாலை, பைஜ்நாத் வட்டாரத்தில் ஏற்கனவேயே துவக்கப்பட்டுவிட்டது. இதனுல் அவ்வட்டார மக்களுக்கு கூடுதலான வேலைவாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

**வேளாண்மையும், தொழில் வளமும்**

வரும் ஆண்டுகளில் செய்யவேண்டிய வேலைகளும், ஆற்றவேண்டிய பணிகளும் தெளிவாக தெரிகிறது. அங்குள்ள தொழில்களெல்லாம் விவசாயம், காட்டுவளம் போன்றவற்றையும், தேயிலை, தோல் ஆகியவற்றையும் தழுவியே இருக்கின்றன. எனவே தொழில் பயிற்சிக்கு அளிக்கப்பட்டுள்ள அதே முக்கியத்துவம், முதன்மை, வேளாண்மைக்கும் அளிக்கப்பட வேண்டும். இது தவிர, பயிற்சி பெற்றுள்ளவர்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு, இப்போதுள்ள தொழிற் பிரிவுகளை செம்மையாக பணியாற்றச் செய்து, அவற்றின் உதவியினுல், இப்பிராந்தியத்தையே தொழில் மயமாக்க, வேண்டியவற்றை துரிதமாக செய்யவேண்டும்.

# உடலுக்கு உரம்

உடல் உறுதியுடன் வளரவும், தேய்ந்துப் போன உடலின் திசுக்கள் செம்மையாக்கப்படவும் நமக்கு சத்துள்ள, சம உணவு இன்றியமையாததாகிறது. சாதாரண நோய்களிலிருந்து தொத்து நோய்கள் வரை எல்லாவிதத் தொல்லைகளிலிருந்தும் நம் உடம்பைக் காப்பாற்றி, ஆரோக்கியமுடன் வாழ சீரான உணவு தேவை. உணவே நமக்கு வேண்டிய சக்தியை அளிக்கிறது.

நம்முடைய உடலுக்கு புரதம், கொழுப்பு, மாவு, தாதுச்சத்துக்களும், வைட்டமின்களும், நீரும் தேவைப்படுகின்றன. மனித உடல் செம்மையாக இயங்குவதற்கு மேற்கண்ட எல்லாச் சத்துக்களும் இன்றியமையாதவையே.

## நிலமும் உடலும்

ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திற்குப் போதுமான நீர்ப்பாசனம் செய்யாமல் அந்நிலத்தில் ரசாயன உரத்தை மட்டுமே போட முடியாது. மேலும் நிலம் கூடுதலான பலனை அளிக்க வேண்டுமானால், பசுந்தாள் உரமும் அதற்குத் தேவை; இவை அவருடைய நிலத்திற்கு மிகவும் அவசியமானவை மட்டுமின்றி அவையெல்லாம் போதுமான அளவிலும் இருத்தல் வேண்டும். அது போன்றே உடலுக்கும் மேற்கண்ட சத்துக்களெல்லாம் முறையான அளவில் தேவைப்படுகின்றன. சுருங்கக்கூறின், விவசாயி தன்னுடைய நிலத்திற்கு எவ்வளவு அக்கறை காட்டி உரமிடுகிறாரோ, அதைவிட பன்மடங்கு அக்கறையை அவர், தன் உடலுக்குக் காட்ட வேண்டும்; அவர் ஆரோக்கியமாக வாழாவிட்டால், நிலத்தை மட்டும் அவரால் செழிப்பாக வைத்திருக்க முடியுமா ?

ஒருவர் கொழுப்பு அல்லது மாவுச் சத்துள்ள உணவுப் பொருள்களையே அதிகமாக உண்ணலாகாது. இதனால் உடம்பு விகாரமான முறையில் வளர்ச்சியடையக்கூடும். அதே மாதிரி தேவையான அளவிற்கு பிற உணவு வகைகளை உண்ண இயலாத ஒருவர் வைட்டமின் அல்லது புரதச் சத்துள்ள உணவை மட்டுமே அதிகமாக உட்கொள்ளலாகாது. இதை நிலத்துடன் ஒப்பிடும் போது, எவ்வாறு போதுமான அளவில் நீர்ப்பாசனம் செய்யாமல், ரசாயன உரம் மட்டுமே இட்டால், அதனால் நிலத்திற்கு நன்மையைவிட தீங்கே அதிகம் ஏற்படுகிறதோ, அதே நிலைதான் நமது உடலுக்கு ஏற்படக்கூடும்.

## புரதச் சத்துக்கள்

திசுக்களைக் காப்பாற்றி, உடல் வளர்ச்சி பெறுவதற்கு, புரதச்சத்துக்கள் மிகவும் அவசியமாகிறது. இதை மாமிச உணவிலிருந்தும், காய்கறி உணவிலிருந்தும் பெற முடியும். பால், பாலடைக்கட்டி, முட்டை, மாமிசம், சிறு தானிய வகை, பீன்ஸ், பட்டாணி, பச்சைக்காய்கறிகள், அரிசி, சோளம், சோயாபீன்ஸ் போன்றவற்றில் புரதச் சத்துக்கள் இருக்கின்றன.

பால், முட்டை, மாமிசம், மீன் ஆகியவற்றில் பிற அம்சங்களும் அடங்கியுள்ளன; அவை நம்மை நோய்களிலிருந்து காப்பாற்றும். எவ்வாறு நிலத்திற்கு தழை உரமும், ரசாயன உரமும் தேவையோ, அதே மாதிரி மிருகங்கள், காய்கறிகளில் இருந்து அளவாகக் கிடைக்கும் புரதச் சத்துக்கள் நம்முடைய ஆரோக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாததவை.

## குழந்தைகளின் உணவு

எவ்வகை உணவைக்காட்டிலும், உடல் துரிதமாக வளர்வதற்கு ஏற்ற உணவே குழந்தைகளுக்கு முதன்மையாகத் தேவைப்படுகிறது இதே மாதிரி உணவு வகைதான், கர்ப்பிணிகளுக்கும், தாய்மார்களுக்கும் தேவைப்படுகின்றன. நோய்வாய்ப்பட்ட ஒருவர், அதிலிருந்து குணமடைந்து வரும்போது, அவருக்கும் கூட இந்த உணவுதான் தேவை.

கொழுப்புச் சத்து நிறைந்து உடல் பருமனாக உள்ளவர்களை நாம் விரும்புவதில்லை. ஆனால் கொழுப்புச் சத்து உடலுக்கு இன்றியமையாதது. உடலில் உஷ்ணத்தை உண்டாக்கி, கடின வேலைகளைச் செய்வதற்கு நம்முடைய உடலைத் தயார் செய்வது கொழுப்புச் சத்துதான். போதுமான அளவில், இதை உட்கொண்டால் அது நல்ல சத்துள்ள உணவாக அமைகிறது. சான்றாக மாமிச உணவே நமக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களையும் அளித்து விடுவதில்லை; ஆனால் கொழுப்புணவுடன், சற்று குறைந்த அளவு மாமிச உணவையும் சேர்த்துக்கொண்டோமானால், அது சத்துணவாக மாறி விடுகிறது. கொழுப்புணவினால் உடல் வளர்வது

ஒருபுறமிருக்க, நோய்த் தடுப்பிற்கும் அது அடிகோலுகிறது.

### உடல் உஷ்ணம்

அதிகமாக உண்பதே உடலுக்குக் கெடுதலாக இருக்கும்போது, அதிக அளவில் கொழுப்புணவை மட்டுமே உண்பது நன்மை தரக்கூடுமா? கொழுப்புச் சத்து உடலில் அதிகமாக சேர்ந்து விட்டால், அதனுல் அஜீரணம் ஏற்படுவதுடன், பசியையும் அடக்கி விடும். நெய், மாமிசம், பால், பால் உணவுகள், சோயாபீன்ஸ் போன்ற வற்றில் கொழுப்புச் சத்துக்கள் அதிக மாக இருக்கின்றன.

குளிர் காலங்களில், குளிரை எதிர்த்தும் கோடை காலங்களில் உஷ்ணத்தை சமாளிப்பதற்கும், உட லில் உஷ்ணம் வேண்டும். சிறு தானியங்கள், வேர்களில் இருந்து கிடைக்கும் காய்கறிகள், பழங்கள், கரும்பு, பீட்ரூட் ஆகியவற்றை உண்ப தன் வாயிலாக, உடலின் உஷ்ணத் தைத் தேவையான அளவில் வைத் திருக்க முடியும்.

### நீரின் அவசியம்

உணவு பற்றிய பேச்சு எழும்போ தெல்லாம், நீரை மறந்துவிடலாகாது. நீரே உயிர். உடலின் எடையில் 64 சதவீதம் தண்ணீரே; செம்மையான முறையில் ரத்த ஓட்டம் ஏற்படுவதற் கும், தேவையற்ற பொருட்கள் வெளி யாவதற்கும் நீர் இன்றியமையாதது. எல்லா உணவுப் பொருட்களிலுமே நீர் உள்ளது.

தாதுச் சத்துக்கள் உடலுக்குப் பற் பல வகையில் உதவி செய்கிறது. ஆனுல் இதன் நன்மையை நாம் முழுவதுமாக உணர்வதில்லை. தாதுச் சத்தைக் குறைவாக மதிப்பிட்டு, அறியாமையின் காரணமாக அதைப் புறக்கணித்து விடுகிறேம். இது அநேகமாக எல்லா உணவுகளிலுமே இருந்தாலும் குறிப்பாக உணவின் வெளிப்புறங்களில்தான் அவை நிறைந்திருக்கின்றன. தானியங்கள், விதைகளின் தவிடு, பழங்கள், காய் கறிகளின் தோல் ஆகியவற்றில் இவை மலிந்திருக்கின்றன. காய்கறிகளின் தோலை உறித்து, அவற்றை எறிந்து விடுவதால் இச்சத்து நமக்குக் கிடைப்ப தில்லை. சோற்றைச் சமைக்கும் போது, சமைத்த நீரைப் புறக் கணித்து விடுகிறேம்; அந்நீரில் மதிப்பிட முடியாத தாதுச் சத்துக் கள் இருக்கின்றன.

### இவற்றை பெற வழி....

'வைட்டமின்'களைப் பற்றி நாம் அதி கம் கேள்விப்படுகிறேம். உடலில் வைட்டமின் சத்துக்கள் இல்லாவிட் டால் அதனுல் தொண்டைப் புண், மாலைக்கண், பெரிபெரி, ரிக்கெட்டுகள் போன்ற பல வியாதிகள் ஏற்படக்கூடும்.

நம்முடைய உடலுக்குத் தேவையா னவை என்னென்ன என்பது இப் போது தெளிவாகி விட்டதல்லவா? நமக்குத் தேவையானவை எல்லா வற்றையும், நம்முடைய கிராமங்களி லேயே நாம் விளைவித்துக்கொள்ள முடியும். நெல், கோதுமை, சோளம் போன்றவற்றை விவசாயி பயிரிடுகிருர். சிறு தானியங்களையும் அவர் பயிரிடத் தவறுவதில்லை. சில சமயங்களில் பாலும் உணவுடன் சேர்த்துக்கொள் ளப்படுகிறது. வீட்டிற்குப் பின்புற முள்ள நிலத்தில் காய்கறிகளை கிராம வாசி பயிரிடலாம்; ஆனுல் அதை பெரும்பாலும் அவர் செய்வது கிடை யாது. பள்ளிக்கூடங்களிலும், கிரா மத்திற்குப் பொதுவான நிலங்களி லும், பழமரங்களை வளர்ப்பதால் சமுதாயத்திற்கே பெருமளவில் நன்மை கிடைக்கும்.

காய்கறிகளைப் பயிரிடுவது ஒரு கஷ்ட மான காரியமல்ல; ஒருவிதமான காய்கறி ஒரு இடத்திற்கு ஏற்றபடி அமையவில்லையென்றுல், மற்ற காய் கறிகளை பயிரிடுவதற்கு முயற்சி செய்யலாம்.

பப்பாளி, வாழை, கொய்யா போன்ற பழமரங்களை பயிரிடலாம். இதற்கு அதிக இடமோ, விசேஷப் பயிற்சியோ தேவையில்லை.

### பால் உணவு

பசுக்களையும் எருமைகளையும் நன்கு கவனித்துப் போற்றி, சுத்தமான பாலைப்பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழலாம்.

காய்கறி உணவை மட்டுமே சாப்பிடு பவர்கள், முட்டை, மீன் அல்லது மாமிசத்தை அதிகமாகச் சாப்பிட வேண்டும். கோழிப் பண்ணையைப் பராமரிப்பது கஷ்டமானதல்ல; இதற் காக அதிக முதலீடும் தேவையில்லை.

### மீன் உணவு

கிராமங்களிலுள்ள நீர் நிலைகளில் மீன்களை வளர்க்கலாம்; மீன் உணவு புரதச் சத்து நிறைந்த ஓர் அரிய உணவு மட்டுமின்றி, அது எளிதில் ஜீரணமாகக் கூடியது. மீன் வளப் புக்காக புதிய ஏரிகளை உடனே அமைக்க வேண்டியதில்லை. நம் நாட்டில் ஏராளமான நீர்நிலைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் புதுப்பித்து மீனளத்தை பெருக்க லாம்; கடற்கரையோர கிராம வாசி கள் கடலில் மீன் பிடிப்பதில் நாட் டம் கொள்ளலாம்.

### சத்துணவுத் திட்டம்

எனவேதான் சத்துணவுத் திட்டம் நாடெங்கிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் குழந்தைகள், கருவுற்றி ருப்போர், தாய்மார்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது.

"சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மக்க ளுக்கு உணர்த்துவதும், இவ்வுணவு வகைகளை பெருவாரியான முறையில் உற்பத்தி செய்ய ஆவன செய்தலும், சமுதாயத்தில் குறிப்பாக இவ்வுணவு வகைகள் தேவைப்படுகின்ற மக்க ளுக்கு அவை கிடைக்குமாறு செய்த லுமே சத்துணவுத் திட்டத்தின் முக் கிய குறிக்கோளாகும்."

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 13 முதல் 16, மற்றும் 29 முதல் 32 வரை (8 பக்கங்கள்).
**Articles reproduced from "Panchayati Raj" on pages 13 to 16 and 29 to 32 (8 pages).**

# விவசாய வளர்ச்சி-

## புதிய கண்ணேட்டம்

உணவுப் பிரச்னை, நாட்டின் தலையாயப் பிரச்னையாக இன்றுள்ள நிலையில், நம் நாட்டின் விவசாயம் சம்பந்தமான சில அடிப்படை உண் மைகளை தெரிந்துகொள்ளுதல் மிகவும் அவசியம்.

நான்காவது திட்டக் கால ஆரம்ப ஆண்டாகிய நடப்பாண்டில், பொது வாக, வேளாண்மையைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக, உணவு தானியங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும், பாரத அரசாங்கம், இப் பிரச்னையை ஒரு புதிய கண்ணேட்டத்துடன் அணுக ஆரம்பித்துள்ளது. விவசாய உற்பத்தியை மிகப் பெரிய அளவில் பெருக்கும் வகையில், விவசாயத் துறையில் நவீன, விஞ்ஞான ரீதியான நடைமுறைகளையும் யுக்திகளையும் கையாள்வதென, பாரத அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு முதல், இப்புதிய நடைமுறை கையாளப்படும். இதனுல், நான் காவது திட்டக்காலத்தில் (1966-71) உணவுப் பற்றுக்குறை தீர்க்கப்பட்டு விடலாம் என்று, அரசாங்கம் உறுதியாக நம்புகிறது.

உணவு உற்பத்தி எவ்வளவு பெரிய பிரச்னை என்பதை தெளிவாக உணர்ந்துகொள்ள, சில வரலாற்று உண்மைகளை நாம் நினைவில் கொண்டு வரவேண்டும். 1947-ல் நாடு பிரிக்கப்பட்டது. தானியக் களஞ்சியங்களாக, வளம் கொழிக்கும் பூமியாகத் திகழ்ந்த பஞ்சாப், வங்காளம், அசாம் மாநிலங்களின் பகுதிகள், பாகிஸ்தான் பகுதிகளாயின அது மட்டுமல்ல; பாகிஸ்தானிலிருந்து சுமார் 1 கோடி பேர் இந்தியாவுக்கு அகதிகளாக வேறு வந்து சேர்ந்தனர். இதனுல் நாட்டின் உணவுப் பிரச்னை மிகவும் சிக்கலாயிற்று.

திட்டக் காலங்களில் இத்துறையில் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள் நல்ல பலன்கள் அளித்துள்ளன. இந்த 15 ஆண்டுக் காலங்களில், (அதாவது 1950-லிருந்து 1965 வரை) உணவு உற்பத்தி 70 சதவிகிதத்திற்கு உயர்ந்தது. 1951-52-ல் 52·2 மிலியன் டன்களாக இருந்த உணவு உற்பத்தி, 1964-65-ல் 89 மிலியன் டன்களாக உயர்ந்தது இது பிரம் மாண்டமான வளர்ச்சியே. ஆனால், இந்த 15 ஆண்டுகளில் மக்கள் தொகை முன்பிருந்ததைவிட, 13 கோடி அதிகமாக உயர்ந்துவிட்டது. அத்துடன், திட்டங்களினுல் மக்களின் வருமானமும் பெருகவே, மக்களின் உணவுப் பழக்கங்களும் மாறிவிட்டன. சோளம், கம்பு, ராகி, சாப்பிடும் வழக்கம் போய் அரிசி, கோதுமை உணவு வகைகளை பெருவாரியான மக்கள் நாடத் தொடங்கினர். ஆகவே எவ்வளவுதான் உணவு உற்பத்திப் பெருகி னுலும், வளர்ந்துவரும் தேவையைச் சமாளிக்க முடியாமல் போய்விட்டது. 1964-65-ல் நம் நாட்டின் உணவுப் பற்றுக்குறை 10 சதவிகிதமாகும்.

இந்தக் குறைபாடுகளைப் போக்க, மேற்சொன்ன புதிய முறை கையாளப்படும். இதன்படி, சாகுபடி செய்யும் பிரதேசத்தில் பத்தில் ஒன்று என்ற அளவில் அதாவது மொத்தம் உள்ள 330 மிலியன் ஏக்கரில் 32·5 மிலியன் ஏக்கர் சாகுபடி நிலங்கள் உணவு தானியங்களின் கீழ் கொண்டுவரப்படும். அதனுல், அடுத்த 5 ஆண்டுக் காலங்களில், 25 மிலியன் டன் கூடுதலாக உணவு உற்பத்தியைப் பெற முடியும். இந்த இலக்கை அடைவதற்கு கீழ்க்கண்ட நடைமுறைகள் கையாளப்படும்.

**1. தீவிர விவசாயத்திட்டம் (Intensive farming)**—கடந்த 15 ஆண்டு களாக, தீவிர சாகுபடித் திட்டம் கையாளப்படாத பிரதேசங்களில், இம் முறை கையாளப்படும். உணவுப் பிரச்னையைச் சமாளிக்க, தீவிர சாகு படித் திட்டம் தான் சரியான முறை யாகும். எனெனில், ஒரு ஹெக்டே ருக்கு உணவு தானிய உற்பத்தி அள வில், மிகக் குறைந்த அளவில் பயன் காணும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றுகும்.

**2. விவசாயிக்குப் போதிய வசதிகள்:**

இந்த புதிய நோக்கத்தை செயல் படுத்துவதில், எந்தவிதமான தடையு மில்லாமல் பார்த்துக்கொள்ளப்படும். தண்ணீர், உரங்கள், பூச்சி மருந்து கள் ஆகியவற்றை உபயோகிப்பதிலும்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் அதிக மாசூல் தரும் விதைகளை உபயோகிப்பதிலும், இதுநாள் வரை கிடைத்து வருகின்ற மாசூலைவிட அதிக விளைச்சல் காணும்படியான வகையில், தர்க்க ரீதியானதும், நடைமுறைக்கு சாத்தியமானதும், விஞ்ஞான ரீதியில் ஆனதுமான ஒரு நடைமுறை கையாளப்படும். இயற்கையின் நிச்சயமற்ற தன்மையை எதிர்பார்க்காமல், நிச்சயமான நீர்ப்பாசன வசதியினைப் பெற்றுள்ள சிறந்த பயிர்ப்பாசனம் செய்யக் கூடிய நிலங்களில் முழுக் கவனம் செலுத்தப்படும்.

இந்தப் புதிய முறை முன்பே அமுல் செய்யப்பட அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த மதிப்பீட்டை மாற்றும் வகையில் அசாதாரணமான நிலை எதுவும் இல்லாமலிருந்தால், நடப்பாண்டில், 97 மிலியன் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்வதென்பது இலக்கு. இந்த ஆண்டில், இந்த புதிய முறையின் கீழ், 5,940,000 ஏக்கர் நிலங்கள் கொண்டு வரப்படுகின்றன. நாட்டில் உள்ள அரிசிப் பற்றுக்குறையினால், இந்தப் பிரதேசத்தில் பெரும்பான்மையானவற்றில் அதாவது சுமார் 2,617,000 ஏக்கர்களில் நெல் பயிரிடப்படும்.

### 3. பொறுக்கு விதைகள் :

தரமான விதைகளையும், புதாக விதைகளையும் கைக்கொண்டு, விளைச்சலை மூன்றிலிருந்து ஐந்து மடங்கு அதிகமாக்கலாம். அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய உணவு தானிய ரகங்களை நம்முடைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேலும், இத்துறையில் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நமக்குத் தேவையான அதிக விளைச்சல் தரும் கோதுமை விதை 14,465 டன்களில் பாதி அளவு இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது; பாதி அளவு இறக்குமதி செய்யப்படுகிறது. அதிக விளைச்சல் தரும் நெல் விதை ரகங்கள் போதிய அளவு கிடைக்கின்றன. பெரிய விதைப்பண்ணைகள் பல நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 4. உர விநியோகம் :

இரசாயன உரங்களின் தேவை பெருகிக்கொண்டே வருகிறது. நாட்டின் இன்றைய தேவை சுமார் ஒரு மிலியன் டன் நைட்ரஜன் உரமாகும். இதில் மூன்றில் ஒரு பங்கு உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படும்; மீதி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் உள்நாட்டு உற்பத்தியை கணிசமான அளவுக்குப் பெருக்க எல்லா முயற்சிகளும் கையாளப்படுகின்றன. 1970-71-ல் 2 மிலியன் டன் இரசாயன உரம் உற்பத்தி செய்துவிட வேண்டும் என்பது நமது இலக்காகும்.

### 5. பூச்சிகளிலிருந்து பயிர்களுக்குப் பாதுகாப்பு :

நடப்பாண்டில் 63 மிலியன் ஏக்கர் நிலங்களில் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் அமுலாக்கப்படும். ஆகாயத்திலிருந்து விமானம் மூலமாக பயிர்களுக்கு மருந்து தெளிப்பதற்காக மேலும் விமானங்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### 6. விவசாயியுடன் நெருங்கிய தொடர்பு:

விவசாயியுடன் நெருங்கிய தொடர்பு கொள்கின்ற முறையில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்துதல், புதிய முறையின் நோக்கமாகும். வானொலி மூலம் விவசாயம் பற்றிய தகவல்களை அளித்தல், புதிய தோற்றத்தைப் பெறும். நாட்டில் பண்ணை ஒலிபரப்பு மிகவும் பரவலான முறையில் கொண்டுவரப்படும். 1966-67-ல் 10 பண்ணை-இல்ல ஒலிபரப்புப் பகுதிகள் (Farm and House Broadcasting units) தொடங்கப்படும்.

மேலும் விவசாயத்திற்குத் தேவையான-விவசாயத்திற்கு சார்புள்ள கிராமத் தொழில்களைப் பெருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புதிய விவசாயக் கருவிகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும். நிலங்களில் விளைந்ததை மார்க்கெட்டுகளுக்கு சிரமமின்றி கொண்டு செல்லும் வகையில் ரோடுகள் சீர்ப்படுத்தப்படும்.

### 7. பல கோணங்களிலிருந்து பிரச்னையை அணுகுதல்:

இவற்றையெல்லாம் உள்ளடக்கிப் புதிய முறையானது, உணவுப் பிரச்னையைச் சமாளிக்க பல கோணங்களிலிருந்து அணுகும் ஒரு முறையாகும். விவசாயி நிலத்தில் அதிக உணவு உற்பத்தி செய்துவிட்டால் மட்டும் போதாது. விளைந்த தானியங்களை நல்ல முறையில் ஸ்டோர் செய்தலும் காப்பாற்றுதலும் மிக மிக முக்கியமானது. தீவிர விவசாய அபிவிருத்தித் திட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் நவீன முறையில் சில அரிசி மில்களை ஆரம்பிப்பது என்ற வேலைத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 8. உணவுப் பழக்கங்களை மாற்றுதல் :

உணவுப் பிரச்னையானது நம் நாட்டில் உணவு தானியங்களின் பற்றாக் குறையுடனேயே தொடர்புபடுத்திக் காட்டப்படுகிறது. இந்தியாவில் தற்சமயம் கிடைக்கும் உணவு தானியங்களின் அளவு உலகத்தின் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சீரான முறையில்தான் இருக்கிறது. என்றாலும், நம்நாட்டு மக்கள் உணவுக்காக உணவு தானியங்களைத் தவிர மற்ற உணவு வகைகளைக் கையாள்வது மிக மிகக் குறைவான அளவேயாகும். ஆகவே, உணவுப் பிரச்னைக்கு நிரந்தரமான நீண்டகால பரிகாரம் காணுவதென்றால், உணவுத் தானியங்களின் உற்பத்தியை மட்டும் பெருக்கினால் போதாது; துணை உணவு (Subsidiary foods) வகைகளை, குறிப்பாக, காய்கறிகள், மாமிச உணவு வகைகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்; மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டும்.

தானியங்கள் அல்லாத மற்ற உணவு வகைகளையும் மக்கள் கைக்கொள்கின்ற வகையில், மக்களின் உணவுப் பழக்கங்கள் (Food habits) மாற்றப்பட வேண்டும் என்பது புதிய முறையின் நோக்கங்களில் ஒன்றாகும். மக்களின் உணவுப் பழக்கங்களை மாற்றுகின்ற இந்த இயக்கத்தை, சமூக நிறுவனங்களும் மேற்கொண்டு, அதைப் பரப்ப பாடுபடவேண்டும்.

[ஆதாரம் : மத்திய அரசாங்க செய்தி ஒலிபரப்புத் துறை வெளியிட்டுள்ள செய்தி விளக்கக் குறிப்புகள் (Talking points) எண் 71]

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

—— o ——

## கிராமத் தொண்டர் படைத் திட்ட நிறைவேற்றம் நிறுத்தப்படுகிறது.

## Village Volunteer Force—Discontinuance of Scheme—Instructions issued.

1962-ம் ஆண்டு நிகழ்ந்த சீன ஆக்கிரமிப்பு காரணமாக எழுந்த தேசிய நெருக்கடி நிலையையொட்டி, கிராமத்தொண்டர் படை நிறுவப்பட்டது; சமீபத்தில் ஏற்பட்ட இந்தியா—பாகிஸ்தான் தகராறை யொட்டி, இதற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டது. கிராம மக்களின் உற்சாகத்தை ஒருமுகப்படுத்தியும், வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தியும் நெருக்கடி நிலையில் எழுந்த விசேஷ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இத்திட்டம் பெருமளவில் செயலாற்றியது. இப்போதுள்ள மாறுபட்ட சூழ்நிலையில், உற்பத்தி வேலைத்திட்டங்களின் பேரிலேயே கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 293-ன் மூலம் நிறுவப்பட்ட கிராமத்தொண்டர் படைத்திட்டம், இனி நிறைவேற்றப்படுவது உடனே நிறுத்தப்படவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. எதிர்காலத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படின், அந்தச் சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட அந்தப் பகுதிகளுக்கு, கிராமத் தொண்டர் படையை புதுப்பித்துக்கொள்ளலாம்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண். 101184-ன் சுருக்கம்.)

---

## பணித்துறை—பஞ்சாயத்து வளர்ச்சி பணியாளர்கள்—விடுப்பு வழங்கல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Establishment—Panchayat Development Personnel—Sanction of leave—Instructions Issued.

நடைபெற விருக்கும் தேர்தல்களையொட்டி, இந்த சுற்றறிக்கைக்குப் பிறகு 1967-ம்ஆண்டு மார்ச் மாதம் 15 தேதிவரை எந்த பணியாளர் வகையினரும் ஈட்டிய விடுப்புக் (Earned leave) கோரியோ அல்லது இடமாற்றங்கள் கோரியோ செய்யும் எந்த விண்ணப்பங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், கோட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் மற்றும் இதர பணியாளர்களையும் கொண்ட பஞ்சாயத்து வளர்ச்சி பணியாளர் துறை உறுப்பினர்கள் எல்லோருக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. வைத்திய அடிப்படையில் விடுப்பு கோரப்பட்டால், விடுப்பு மனுவுடன் ஒரு வைத்திய சான்றிதழும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறைந்த கால அளவிற்கு தேவைப்படும் தற்செயல் விடுப்பை (Casual leave) கூட, தகுதி வாய்ந்த அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட பின்பே, அனுபவித்துக்கொள்ள வேண்டும். அனுமதி கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்து, எந்த சூழ்நிலையிலும் விடுப்புகளை முன்னதாகவே எடுத்துக்கொள்ளக்கூடாது.

தங்களின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள அலுவலர்களின் விடுப்புகளுக்கு அனுமதியளிக்கையில், இந்த உத்தரவுகளின் உள் நோக்கம் தவறுதிருக்குமாறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் பார்த்துகொள்ள வேண்டும். தகுதி வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து முன் அனுமதியைப் பெறுத நிலையில், விடுப்பை எடுத்துக் கொள்ளாதிருந்து, மற்றவர்களுக்கெல்லாம் ஒரு உதாரணமாக பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் விளங்கவேண்டும்.

இவ்வுத்தரவுகளுக்கு புறம்பாக, அல்லது பொறுப்புகளை தட்டிக் கழிக்கக்கூடிய வகையில் ஏதும் முயற்சிகள் செய்யப்பட்டால், கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளபடும்.

[கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 16—11—66 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 178952.]

---

## தமிழ்நாடு பூதான யக்ஞ போர்டு—தலைவர்கள், உறுப்பினர்கள் நியமனம்.

## Madras State Bhoodan Yagna Board—Appointment of Chairman and members under the Madras Bhoodan Yagna Act, 1958—Notified.

தமிழ்நாடு பூதான யக்ஞ போர்டின் தலைவர், மற்றும் சில உறுப்பினர்களின் பதவிக்காலம் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி உடன் முடிவடைகிறது. எனவே 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி உடன் பதவிக்காலம் முடிவடையும் தலைவர், உறுப்பினர்கள், மீண்டும் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல், மேலும் நான்காண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழின் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதியிட்ட தனி வெளியீட்டில் கீழ்க் கண்ட அறிவிப்பு பிரசுரிக்கப்படும்.

### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பூதான யக்ஞ சட்டத்தின் பிரிவு 4, உட்-பிரிவு (1)-ன் கீழும், திரு ஆசார்யா விநோபா பாவே அவர்களை கலந்தாலோசித்தும், தமிழ்நாடு கவர்னர் அவர்கள், திரு கே. அருணாசலம் அவர்களை தமிழ்நாடு பூதான யக்ஞ போர்டின் தலைவராகவும், கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகவும், 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் நியமிக்கிறார்கள்.

(1) திரு கே. காமராஜ்
(2) திரு எம். பக்தவத்ஸலம்
(3) திரு கே. எம். நடராஜன்
(4) திரு டபிள்யூ. பி. ஏ. ஆர். சந்திரசேகரன்
(5) திரு பி. எஸ். சின்னதுரை
(6) திரு ஆர். ஆர். கெய்த்தான்
(7) திரு எம். பி. சிவஞானம்
(8) திரு எஸ். ஆர். சுப்பிரமணியம்
(9) திரு கோ. வேங்கடாசலபதி
(10) திருமதி அம்ருதா ராமசுப்பிரமணியம்.

உள்துறை அமைச்சர் திரு பி. கக்கன், கிராம வளர்ச்சி நெறியாளர், திரு கா. திரவியம் ஆகியவர்கள் இந்த போர்டின் மற்ற இரு உறுப்பினர்கள்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 30—11—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2742, மற்றும் 3—12—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2777—ன் சுருக்கம்.)

---

## முதியோர் கல்வி மாநில ஆலோசனைக் குழு—திருத்தி அமைக்கப்படுகிறது.

## Education—Adult Education—State Adult Education Advisory Committee—Reconstitution Ordered.

முதியோர் கல்வி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட, முதியோர் கல்வி மாநில ஆலோசனைக் குழுவை அரசாங்கம் மீண்டும் அமைக்கிறது.

(i) முதலமைச்சர் —தலைவர்
(ii) அரசாங்கத்தின் செயலாளர், கல்வி, பொது சுகாதாரத் துறை, சென்னை.
(iii) இடைநிலைக் கல்வி நெறியாளர்
(iv) கிராம வளர்ச்சி நெறியாளர்
(v) மகளிர் நல நெறியாளர்
(vi) திரு எம். ராஜா அய்யர். எம்.எல்.சி.
(vii) திருமதி சி. குழந்தையம்மாள் எம்.எல்.ஏ,
(viii) திரு கே.எஸ்.ஜி. ஹாஜா ஷெரீப் எம்.எல்.ஏ.
(ix) திரு கே.எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி
(x) திருமதி சரோஜினி வரதப்பன்
(xi) திரு டி.எஸ். மாத்தியாஸ், தலைமையாசிரியர், சென்னை கிருஸ்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை.
(xii) திரு எஸ். வி. துரைசாமி முதலியார், முதியோர் கல்வி விசேஷ அதிகாரி (ஓய்வுபெற்றவர்)

—உறுப்பினர்கள்

(xiii) இடை நிலைக் கல்வி துணை நெறியாளர் (திட்டம்)

—செயலாளர்
(பதவியின் காரணமாக)

(2) இக் குழுவின் பதவிக்காலம் ஓராண்டாக இருக்கும்

• • •

(கல்வி, பொதுச்சுகாதாரத் துறையின் 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25—ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1927—ன் சுருக்கம்)

செங்கற்பட்டிலுள்ள அபிவிருத்தி மாவட்டங்களின் அலுவல் வரம்பு— மாற்றியமைக்கப்படுகிறது

**Act—Madras District Development Councils Act, 1958 (Madras Act XVIII of 1958)—Jurisdiction of Development Districts in Chingleput—Revised—Notification—Issued.**

* * * *

2. செங்கற்பட்டு மாவட்டமானது, கீழ்க்கண்டவாறு இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களாக அமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது:-

| வருவாய் மாவட்டம் | அபிவிருத்தி மாவட்டத்தின் பெயர் | வருவாய்க் கோட்டம் | தாலூகா |
|---|---|---|---|
| செங்கற்பட்டு | வடக்கு செங்கற்பட்டு | சைதாப்பேட்டை | சைதாப்பேட்டை<br>பொன்னேரி |
| | | திருவள்ளூர் | திருவள்ளூர்<br>திருத்தணி |
| | தெற்கு செங்கற்பட்டு | காஞ்சீபுரம் | காஞ்சீபுரம்<br>ஸ்ரீபெரும்புதூர் |
| | | செங்கற்பட்டு | செங்கற்பட்டு<br>மதுராந்தகம் |

* * * *

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2671ன் சுருக்கம்.)

---

பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் அமைச்சர்களிடம் அறிக்கைகளை சமர்ப்பித்தல், கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளுதல்—விளக்கங்கள்

**Office procedure—Submission of reports to and Correspondence with Honourable Ministers by Panchayat Union Commissioners—Instructions—Issued.**

பஞ்சாயத்து யூனியன் மன்ற அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்னையொன்றைக் குறித்து, வட்டார அபிவிருத்தி அதிகாரியும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருமான ஒருவர், மேன்மைதங்கிய முதலமைச்சருக்கு நேரடியாகக் கடிதம் எழுதிய சம்பவம் ஒன்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுத் துறையின் 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை எண் 3064-ல் பிறப்பிக்கப் பட்டுள்ள உத்தரவுகள் படி, அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறாத அதிகாரி எவரும், சம்பந் தப்பட்ட துறைத் தலைவர், மற்றும் அரசாங்க செயலகத் துறை வாயிலாக அல்லாது, மற்றபடி நேரடியாக மேன்மை தங்கிய அமைச்சர்களுடன் கடிதப் போக்கு வரத்து செய்யக்கூடாது.

மேற்கண்ட உத்தரவுகள் இனி தவறாது பின்பற்றப்பட வேண்டுமென்று, எல்லா வட்டார அபிவிருத்தி அதிகாரிகள்—பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும் உத்தரவிடப்படுகிறது. இவ்வுத்தரவுகளில் எதையேனும்கூட மதிக்காது நடந்துகொள்பவர்களின் மீது, ஒழுங்குமுறை நடவடிக்கை மேற்கொள்ள நேரும் என்றும் அவர் களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

(கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 7—9—1966 தேதியிட்ட எண் 129871/66-65.)

---

### பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு கட்டிடங்கள்—உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Buildings—Construction of panchayat union office builidings during 1966-67—Orders—Issued.

1966-67-ம் ஆண்டில், ரூ 14·36 லட்சம் செலவில், 22 பஞ்சாயத்து யூனியன்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கு, கிராம நல தல நிர்வாகத்துறையின் 28-9-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2276-ன் பத்தி மூன்றில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவில் ஒன்பது பஞ்சாயத்து யூனியன்கள் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது.

(2) கீழ்க்கண்ட 6 பஞ்சாயத்து யூனியன்களுக்கும், அலுவலக கட்டிடங்கள் கட்டும் வேலை, 1966–67-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, கிராம நல தல நிர்வாகத் துறையின் 28-9-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2276-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளைத் தொடர்ந்து, இப்போது அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

| அபிவிருத்தி மாவட்டத்தின் பெயர் | பஞ்சாயத்து யூனியன்களின் பெயர் |
|---|---|
| வடக்கு கடலூர் | 1. திருவெண்ணெய் நல்லூர் |
| தெற்கு கடலூர் | 2. சங்கராபுரம் |
| | 3. கடலூர் |
| தெற்கு சேலம் | 4. இலச்சிப்பாளையம் |
| வடக்கு திருநெல்வெலி | 5. விளாத்திக்குளம் |
| தெற்கு திருநெல்வேலி | 6. செங்கோட்டை |

அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக எஞ்சியுள்ள 7 பஞ்சாயத்து யூனியன்களும் தெரிந்தெடுக்கப்பட்டு அது பற்றி உத்தரவுகள் தனியாக பிறப்பிக்கப்படும்.

* * * *

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 15.11.1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2623ன் சுருக்கம்)

---

### சிறுசேமிப்புத் திட்டம்—ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலுமுள்ள வட்டாரத்திற்கு கேடயங்கள் வழங்குதல்

## Small Savings Scheme—Award of shield to the block in each Development District—Expenditure—Sanctioned.

நூக்கமரத்தி (Rose Wood) னால் செய்யப்பட்டு, வெள்ளி இழைக்கப்பட்ட கேடயங்களில் பனிரெண்டு கேடயங்களை வாங்கி, அவற்றை, சிறு சேமிப்பில் சிறந்த பணியாற்றியுள்ள வட்டாரங் களுக்கு (பனிரெண்டு கிராமப்புற மாவட்டங்களிலும்) வழங்குவதற் கென, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2657-ல், அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. கேடயங்கள் வாங்கப்பட்டு, அவை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வினியோகிக்கப்பட்டன. மாவட்டங்களில் சிறந்த வட்டாரங்களை தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை அம்சங்கள் கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 500-ல் நிர்ணயிக்கப்பட் டுள்ளன.

(2) சிறு சேமிப்பில், வசூலிப்பு தொகையைப் பெருக்குவதற்கு, ஒவ் வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு கேடயம் என்றிருப்பதற்கு பதில், ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒரு கேடயம் வீதம், கேடயங்கள் வழங்க வேண்டுமென்று சிறு சேமிப்பு நெறியாளர் இப்போது கோரிக்கை செய்துள்ளார். அதன்படி கீழ்க்கண்ட மாவட்டங்கள் ஒவ்வொன் றிற்கும், மேலும் ஒரு கேடயத்திற்கு அனுமதி வழங்க வேண்டியுள்ளது.

1. தென் ஆர்க்காடு
2. வட ஆர்க்காடு
3. சேலம்
4. கோயம்புத்தூர்
5. மதுரை
6. திருச்சிராப்பள்ளி
7. தஞ்சாவூர்
8. இராமநாதபுரம்
9. திருநெல்வேலி

(3) புதிதாக அமைக்கப்பட்டுள்ள தர்மபுரி மாவட்டத்திற்கும், ஒரு வெள்ளி சுழற் கேடயம் அளிக்க வேண்டியுள்ளது. எனவே, கேடயம் ஒன்றிற்கு ரூ. 200-க்கு மேற்படாத வாறு, இன்னும் 10 வெள்ளிச்

கேடயங்களை வாங்க அனுமதியளிக்கு மாறு, சிறு சேமிப்பு நெறியாளர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(4) சிறு சேமிப்பு நெறியாளரின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2657 மற்றும் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 500 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை திருத்தும் வகையில், மேற்கண்ட ஆணைகளில் கூறியுள்ளபடி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் சிறு சேமிப்பில் சிறந்த வட்டாரத்திற்கு கேடயம் வழங்கவேண்டும் என்பதற்கு பதிலாக, ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலுமுள்ள சிறந்த வட்டாரத்திற்கு, வெள்ளி சுழற் கேடயம் வழங்கப்பட வேண்டுமென்று, அரசாங்கம் ஆணைபிறப்பிக்கிறது.

* * *

(6) இந்த ஆணையின் அடிப்படையில், பரிசுகளை வழங்குவதற்கு மேலும் 10 வெள்ளிக் கேடயங்கள் தேவைப்படுகின்றன. எனவே ரூ. 2,000 மொத்த செலவில் கூடுதலாக 10 வெள்ளிக் கேடயங்கள் வாங்க, அரசாங்கம் அனுமதியளிக்கிறது. இத்தொகையும் 1967—68-ம் ஆண்டில் செலவழிக்கப்பட வேண்டும்.

* * *

(நிதித் துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1193-ன் சுருக்கம்.)

---

## வைத்திய உதவி—எலும்பு முறிவு வைத்தியக் கருவிகள் வாங்கிய தொகையை திருப்பியளித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Medical Attendance— State Government servants and employees of local bodies drawing salaries not exceeding Rs. 300 per mensem—Reimbursement of cost of Orthopaedic appliances—Extension of Concessions to members of families of entitled personnel—Orders Issued.

எலும்பு முறிவு நோயாளிகளை முழுவதுமாக குணப்படுத்துவதற்கு, கால் ஊனமடைந்தவர்களுக்குள்ள காலணிகள் (Surgical Boots) முதுகு தாங்கி அட்டைகள் (Spinal Brace) முழங்கால் மூட்டு உறை (Knee Calipher) போன்ற எலும்பு முறிவு வைத்தியக் கருவிகள் (Orthopaedic appliances) மற்றும் அவை போன்ற இதர கருவிகள் அவசியமானவையாதலால், அவற்றை வாங்க, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள், மற்றும் மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கு மேற்படாத சம்பளம் பெறும் தல நிர்வாக அலுவலர்கள் ஆகியோர், செலவிட்ட தொகையை திருப்பியளிக்க வேண்டுமென்று, அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது—30-5-1962 தேதியிட்ட அரசாங்க எண் (சுகாதாரம்) 1334, பிறகு 29-8-1963 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை (சுகாதாரம்), எண் 120795-ல் திருத்தப்பட்டுள்ளபடி. அரசாங்கப்பணியாளர் ஒருவர், அவருடைய குடும்பத்தைச் சார்ந்த எவருக்கேனும் எலும்பு முறிவு வைத்திய கருவி வாங்கியிருப்பின், அந்தக்கருவியின் விலையைத் திரும்பப்பெற அவருக்குத் தகுதியுண்டா என்று, அரசாங்கத்தின் தலைமை மின்சார ஆய்வாளர் (Chief Electrical Inspector to Government) அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

2. அரசாங்கப் பணியாளர்கள், அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு எலும்பு முறிவு வைத்திய கருவிகள் வாங்கியிருப்பின், அவற்றின் செலவுத் தொகையை திரும்பிப்பெற மேற்கண்ட ஆணைகள் அனுமதியளிக்கவில்லை. எனவே, அரசாங்கம் இப்பிரச்னையை வைத்தியத் துறை நெறியாளருடன், பரிசீலனை செய்தது. அதன் பேரில் தமிழ்நாடு வைத்திய உதவி விதிகளின் (Madras Medical Attendance Rules) கீழ், இலவசமாக வைத்திய உதவி பெற தகுதியுள்ள அரசாங்கப்பணியாளர்கள், மற்றும் மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கு மேல் ஊதியம் பெறாத தல நிர்வாகப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் குடும்பத்தினருக்கு, எலும்பு முறிவு வைத்தியக் கருவிகள் வாங்கினால், அவற்றிற்கான செலவை—மேற்கண்ட உத்தரவுகளில் ஏற்கனவேயே பிறப்பிக்கப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு—திரும்பப் பெற அவர்கள் தகுதியுடையவராவர்கள் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது. இவ்வுத்தரவு, இவ்வாணை வெளியான தேதி முதல்—அதாவது 11-5-1966—அமுலுக்கு வரும்.

[கல்வி பொதுச் சுகாதாரத்துறையின் 11-5 1966 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை (சுகாதாரம்) எண் 90112.]

---

## தமிழ்நாடு கிராமசேவக்குகள் பணியாளர் துறை—விசேஷ விதிகளுக்கு திருத்தங்கள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Public Services—Subordinate Services—Madras Gramasevaks Service—Amendments to Special Rules—Issued.

தமிழ்நாடு கிராம சேவக்குகள் பணியாளர் துறை விசேஷ விதிகளில் தாழ்த்தப்பட்ட ஜாதியினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு என்று பதவிகள் ஒதுக்கப்பட வகையில்லை. எனவே அந்த விசேஷ விதிகளில் அதற்கென ஒரு ஏற்பாடு இருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. அதற்கேற்ப, தமிழ்நாடு கிராம சேவக்குகள் பணியாளர் துறை விதிகளில், பதவிகளை ஒதுக்குவதற்கு வகை செய்யப்படவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. கிராம சேவக்குகள் பதவிக்கு நேரடியாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும், அவரவரின் தகுதி காண் பருவம் (Probation) முடிவடைவதற்குள், துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென்று மேற்குறிப்பிட்டுள்ள விசேஷ விதிகள் கூறுகின்றன. நேரடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு கிராமசேவக், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே, துறைத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்திறகாக, அவருடைய தகுதி காண் பருவத்தை தள்ளிப்போட வேண்டியதில்லை என்றும், துறைத் தேர்வுகளுக்கு ஒப்பான தேர்வுகளில் தேர்ச்சியடைந்திராவிட்டாலும், அவர் முதல் நான்கு முறையில் தேர்ச்சியடைந்திராவிட்டாலும், அதில் அவர் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்றும், இல்லாவிடில், அவர் தேர்ச்சி பெறும்வரை, அவருடைய வருடாந்திர ஊதிய உயர்வானது (Increment) வளரும் விளைவில்லாதவாறு (without Cumulative effect) தள்ளிப்போடப்படும் என்றும், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 101-ல் உள்ள பத்தி 11 கூறுகிறது. (இவ்வாணையின் தமிழாக்கம் சுருக்கமாக "கிராம நலம்" பிப்ரவரி 1965 இதழ் பாகம் II, பக்கம் IV-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.) தகுதி காண் பருவம் குறித்து உத்தரவுகள் பிறப்பிப்பதற்கென, துறைச்சோதனைக்கு ஒப்பான தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள், துறைச் சோதனையில் தேர்ச்சி பெறுவதினின்றும் இப்போதுள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க, தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி அடித்தள பணியாளர் துறை விதிகளில் (Madras Panchayat Development Subordinate Service Rules) வகை செய்யப்படுகிறது. இது மாதிரியான ஏற்பாடுகளையும் தமிழ்நாடு கிராம சேவக்குகள பணியாளர் துறையின் விசேஷ விதிகளில் செய்யுமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, தமிழ்நாடு கிராம சேவககுகள பணியாளர் துறை விதிகளில் அவ்வேற்பாடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கிறது.

கீழ்க்கண்ட அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### அறிவிப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309-வது ஷரத்தின் ஏற்பாடுகளில் உள்ள அதிகாரஙகளைப் பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், தமிழ்நாடு கிராமசேவக்குகள் பணியாளர் துறையின் விசேஷ விதிகளுக்கு, கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்கள்.

இத்திருத்தங்கள் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதியன்றே அமுலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விசேஷ விதிகளில்—

(1) விதி 8-க்குப் பதிலாக, கீழ்க்கண்டவை இட்டு நிரப்பப்படும். அதாவது —

"8. தேர்வுகள் :—கீழ்க்கண்ட அட்டவணையில் முதல்பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள, இரண்டாம் தர கிராம சேவக்குகள், முதல்தர, இரண்டாம் தர கிராமசேவக்குகள் கிராம சேவிகாக்களுக்குள்ள துறைச் சோதனைகளில்—இரண்டாம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள காலத்திற்குள்-தேர்ச்சி பெற்றுவிடவேண்டும்.

அட்டவணை

| பதவியின் பெயர் | காலம் |
|---|---|
| 1. இரண்டாம் தர கிராம சேவக்குகள் [16–1–1965 அன்று அல்லது அதற்கு முன்பாக நியமிக்கப்பட்டவர்கள்—2 (b) வகை.] | 1–6–1967-க்கு முன்பு. |
| 2. இரண்டாம் தர கிராம சேவக்குகள் [16–1–1965-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்கள்— 2(b) வகை.] | வேலையில் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, இரண்டு ஆண்டுகளுக்குள். |

சமுதாய வளர்ச்சி (இரு பிரிவுகள்), [Community Development (Two Parts)], கிராமசேவக்குகளுக்கு ஒரு வழிகாட்டி, (A Guide book for Gramasevaks) மற்றும் கிராம நிலை ஊழியர்களின் நியதி (Manual of Village Level Workers) ஆகியவை அடங்கிய பழைய பாடத்திட்டத்தைக் கொண்ட துறைச் சோதனைகளில் ஒருவர் தேர்ச்சி பெற்றிருந்தால், அவர், கிராமசேவக்குகளுக்கு ஒரு வழிகாட்டி, கிராம நிலை ஊழியர்களின் நியதி மற்றும் சமுதாய வளர்ச்சி நியதி, புத்தகம் I (Community Development Manual, Volume I) ஆகியவை அடங்கிய திருத்தப்பட்ட பாடத்திட்டத்தைக் கொண்ட துறைச் சோதனையில் தேர்ச்சியடைந்தவராக கருதப்படும்.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள துறைச் சோதனைகளில் தேர்ச்சி

யடையாத ஒருவர், அவற்றில் தேர்ச்சி பெறும் வரை, வளரும் விளைவில்லாத வாறு அவருடைய வருடாந்திர ஊதிய உயர்வு தள்ளிப் போடப்படும்.

2. விதி 13 என்பது 14 ஆக மாற்றப் பட்டு, அந்த விதி 14-க்கு முன்பு, கீழ்க்கண்ட விதி, சேர்க்கப்படும்; அதாவது:—

"13. பதவிகளை ஒதுக்குதல்:—பதவிகளை ஒதுக்குவதற்குள்ள சம்பந்தப் பட்ட விதியானது (பொது விதி 22), நேரடித் தேர்வின் மூலம், முதல் தர நகரப் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகள், இரண்டாம் தர கிராம சேவக்குகளை தேர்ந்தெடுப்பதற்கும் பொருந்தும்."

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2173-ன் சுருக்கம்.)

---

## 1965-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்—தகுதி பெற்ற அதிகாரிகள்—அறிவிக்கப்படுகிறது

## Madras Public Buildings (Licensing) Act, 1965—The Nilgiris district—Competent Authority—Notified.

1965-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தின் கீழ், தகுதிபெற்ற அதிகாரிகளாகச் (Competent authority) செயல்புரிய, வருவாய்த் துறையைச் சார்ந்த சில அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்து, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை எண் 195-ல் [இவ்வாணையின் தமிழாக்கத்தை "கிராம நலம்" 1966-ம் ஆண்டு ஜூன் மாத இதழ் பாகம் II பக்கம் (viii)-ல் காண்க] உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்தில், வருவாய்க் கோட்ட அதிகாரி இல்லாததால், நீலகிரி மாவட்டத்தில் "தகுதி பெற்ற அதிகாரி"யின் காரியங்களை செய்வதற்காக, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளரை (பொது) [Personal Assistant to Collector (General)] தகுதி பெற்ற அதிகாரியாக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. எனவே, இப் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

1965-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தி(தமிழ்நாடுச் சட்டம் 13/1965)லுள்ள பிரிவு 2-ன் உட்பிரிவு (2)-ல் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பிரிவு II, பாகம் I, பக்கங்கள் 198—199-ல் வெளியிடப்பட்டுள்ள, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட 5430/1966 அறிவிப்பு II-I-க்கு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்கள்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன அறிவிப்பிலுள்ள அட்டவணையில்—

(1) "2. வருவாய்க் கோட்ட அதிகாரி" என்ற இனத்திற்கும் அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் பிறகு கீழ்க்கண்ட இனமும், குறிப்பும் சேர்க்கப்பட வேண்டும்; அதாவது:—

| | |
|---|---|
| "2.–அ. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (பொது). | நீலகிரி மாவட்டத்தில் உள்ள மத்திய அரசாங்கம், அல்லது மாநில அரசாங்கம், அல்லது நகராட்சி, அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றம், அல்லது நகரமைப்புக் குழு, அல்லது இராணுவ முகாம் அதிகாரப் பகுதிக்குச் சொந்தமான அல்லது கைவசமுள்ள எல்லாக் கட்டிடங்கள்." |

(2) "3. தாசில்தார்" என்ற இனத்திற்கும், அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் பிறகு, கீழ்க்கண்ட இனமும் குறிப்பும் சேர்க்கப்பட வேண்டும்; அதாவது:—

| | |
|---|---|
| "4. நீலகிரி மாவட்டத்திலுள்ள தாசில்தார். | அவருடைய தாலுகாவிலுள்ள கட்டிடங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (பொது) தகுதி பெற்ற அதிகாரியாக இல்லாத மற்ற எல்லாக் கட்டிடங்கள். |

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 17—5—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1244.)

## பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள சுண்ணாம்புக் காளவாய்களை தனியாருக்குக் குத்தகைவிட அரசாங்க அனுமதி.

**Community Development Programme—Village Industries—Rural Arts, Crafts and Industries Lime Kiln Units—Leasing out to private individuals by Panchayat Unions—Orders passed.**

பெரும்பாலான வட்டாரங்களிலுள்ள சுண்ணாம்பு காளவாய்கள் உபயோகத்தில் இல்லையென்பதையும், அப்படியே உபயோகத்திலுள்ள சுண்ணாம்பு காளவாய்களால், நஷ்டமே ஏற்படுகிறது என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் கொண்டுவந்துள்ளார். எனவே பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள சுண்ணாம்பு காளவாய்களையெல்லாம், ஓராண்டு காலத்திற்காவது அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்காவது. தனியாரிடம் குத்தகைக்கு விட்டுவிட்டு, அதனால் அரசாங்கத்திற்கு இனியும் ஏற்படவிருக்கும் நஷ்டத்தை தவிர்க்கலாம் என்று மேலும் அவர் சிபாரிசு செய்துள்ளார். பிற மாவட்டங்களிலுள்ள சுண்ணாம்பு காளவாய்கள்கூட, இரண்டொரு முறை பயன்படுத்தப்பட்டபின், அவற்றால் நஷ்டமே விளைந்துள்ளது என்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுவாக சுண்ணாம்புக் காளவாய்களெல்லாம் லாபகரமாக இயங்கவில்லை என்றும், இப்போதுள்ள சுண்ணாம்புக் காளவாய்கள், அவற்றின் அளவிற்கு ஏற்றபடி லாபகரமாக இல்லையென்றும் முறையிடப்பட்டுள்ளது.

(2) எனவே இச்சுண்ணாம்புக் காளவாய்களையெல்லாம் ஓராண்டு காலத்திற்காவது அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்காவது தனியாரிடம் குத்தகைக்கு விட்டுவிடலாமா, அல்லது அவற்றை தொழில் கூட்டுறவுகளுக்கு மாற்றிவிடலாமா என்பதுபற்றி தொழில், வணிகத்துறை நெறியாளருடனும், மாநில கதர், கிராமத் தொழில் போர்டு, செயலாளருடனும் அரசாங்கம் விரிவான முறையில் பரிசீலனை செய்தது. இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் வசமுள்ள சுண்ணாம்பு காளவாய்களை, தொழில் கூட்டுறவுகளுக்கு மாற்றிவிடுவதை தொழில்துறை விரும்பவில்லை என்று, தொழில், வணிகத்துறை நெறியாளர் கூறியுள்ளார். இப்போதுள்ள சுண்ணாம்புக் காளவாய்களையெல்லாம், குத்தகை ஒப்பந்தத்தின் (Lease deed) பேரில், ஒவ்வொரு ஆண்டிற்காவது அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையாவது, தனியாரிடம் குத்தகைக்கு விட்டுவிடலாம் என்று, மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு செயலாளர் சிபாரிசு செய்துள்ளார். பஞ்சாயத்து யூனியன்கள், புதிதாக சுண்ணாம்பு காளவாய்கள் ஆரம்பிப்பதையும், ஊக்குவிக்கத் தேவையில்லை என்று, அவர் மேலும் சிபாரிசுகள் செய்துள்ளார்.

(2) மேற்கண்ட கருத்துக்களை அரசாங்கம் கவனமாக பரிசீலனை செய்தபின், பின்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பிக்கிறது: மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டார் குறிப்பிடும் விதிமுறைகளையொட்டி, இதற்கென ஒரு தீர்மானத்தை பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி, பஞ்சாயத்து யூனியன்கள் தனியாருடன் குத்தகை ஒப்பந்தம் செய்துகொண்டு, அவ்வாறான குத்தகை ஒப்பந்தத்தின்பேரில், தனியாரிடம் சுண்ணாம்புக் காளவாய்களை குத்தகைக்கு விடவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களெல்லாம அரசாங்கத்தின் "ஏஜென்சி"களாக இருந்து அந்த அடிப்படையிலே செயலாற்றி, மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டின் அனுமதியின்பேரில், சுண்ணாம்பு காளவாய்களெல்லாம் ஓராண்டிற்கு மட்டுமே தனியாரிடம் குத்தகைக்கு விடப்பட வேண்டுமென்று, அரசாங்கம் மேலும் ஆணை பிறப்பிக்கிறது.

(3) பஞ்சாயத்து யூனியன்கள் புதிதாக சுண்ணாம்பு காளவாய்கள் ஆரம்பிப்பதை ஊக்குவிக்கத் தேவையில்லை என்ற மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு, செயலாளரின் சிபாரிசையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறும் புதிதாக எந்த சுண்ணாம்புக் காளவாயும் துவக்கப்படாதிருப்பதை கவனித்துக்கொள்ளும்படியும் மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு செயலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(4) இந்த ஆணையில் அடங்கியுள்ளவற்றை, எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், மற்றும் கிராம விஸ்தரிப்பு பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(கிராம நல [illegible] நிர்வாகத் துறையின் 20–10–1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2452-ன் சுருக்கம்.)**

———:xx:———

## விவசாயக் காரியங்களுக்கு மின்சாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகிறது.

## Electricity—Restriction and Control—Removal of grouping restriction on agricultural loads—Ordered.

விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காக, விவசாய "பம்பு" செட்டுகளுக்கு மின்சாரம் அளிப்பதில் இப்போதுள்ள கட்டுப்பாடுகள் முழுவதும், (மின்சார உடயோக நெரிசல் உள்ள மாலை நேரங்களில் தவிர—அதாவது மாலை 6 மணி முதல் 10 மணி வரை) மாநிலம் பூராவுமாக உடனே நீக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(பொதுப் பணித் துறையின் 27—10—1966-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2584-ன் சுருக்கம்)

—(o)—

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் போர்டு—புதிய உறுப்பினர் நியமனம்.

## Madras State Khadi and Village Industries Board—Resignation of official member—Accepted—Appointment of new member—Orders—Issued.

முன்னாள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரும், பிறகு தமிழ்நாடு அரசாங்க பணியாளர் தேர்வுக்கழகத்திற்கு (Madras Public Service Commission) உறுப்பினராகவும் நியமிக்கப்பட்ட திரு வி. கே. அப்பண்டராஜன், ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டில், அவர் வகித்து வந்த உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து விட்டார். இதனால் ஏற்பட்ட காலி இடத்திற்கு மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டியில் உள்ள சாந்தி நிகேதன் ஆஸ்ரமத்தைச் சேர்ந்த திரு ஆர். குருசாமி நாடாரை தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டில் ஓர் உறுப்பினராக அரசாங்கம் நியமிக்கிறது.

2. மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டின் கூட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கலந்து கொள்ள வேண்டுமென்ற அவசியம் ஏற்படும் போதெல்லாம், அவரை விசேஷமாக அழைத்துக் கொள்ளுமாறு, மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு செயலாளருக்கு அறிவிக்கப்படுகிறது.

* * *

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2071-ன் சுருக்கம்.)

---

## மாவட்ட அபிவிருத்தி மன்றம்—தொழில், தொழிலாளர் நல நிலைக்குழு—மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகள்—நியமனம்.

## District Development Council—Industries and Labour Standing Committee—District Employment Officer—Appointed.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 18/1958) பிரிவு 8-ன் உட்பிரிவு (4)-ல் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மே மாதம் 28-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1799-ல் குறிப்பிடுள்ள வேலை வாய்ப்பு அதிகாரி (Employment Officer)களை சம்பந்தப்பட்ட மாவட்டவளர்ச்சி மன்றங்களிலுள்ள தொழில்தொழிலாளர் நலம் நிலைக் குழுவிற்கு உறுப்பினர்களாக, 1966-67-ம் ஆண்டிற்கு நியமிக்கிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 639)

## தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு.

தமிழ் நாடு அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்த, தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இப்புதிய பஞ்சப்படியானது, 1966 டிசம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும். அதாவது 1966 டிசம்பர் மாத ஊதியத்துடன் சேர்த்து 1967 ஜனவரி முதல் தேதி வழங்கப்படும்.

| | | ஏற்கெனவே இருந்து வரும் பஞ்சப்படி விகிதம் | புதிய பஞ்சப்படி விகிதம் |
|---|---|---|---|
| 1. | ரூ. 89 வரை | ரூ. 38 | ரூ. 47 |
| 2. | ரூ. 90 லிருந்து ரூ. 149 வரை | ரூ 58 | ரூ. 70 |
| 3. | ரூ. 150லிருந்து ரூ. 209வரை | ரூ. 76 | ரூ. 90 |
| 4. | ரூ. 210லிருந்து ரூ. 399 வரை | ரூ. 93 | ரூ. 110 |
| 5. | ரூ. 400லிருந்து ரூ 1,000-க்குள் | ரூ. 100 | ரூ. 120 |

ரூ. 1,000-ம், அதற்கு மேலும் சம்பளம் பெறுவோருக்கு, பஞ்சப்படி விதத்தில் மாறுதல் கிடையாது. மாநில அரசின் இப்புதிய பஞ்சப்படி விகிதம், மத்திய அரசாங்க ஊழியர்களுடைய பஞ்சப்படிக்குச் சமமாகும். மேலும், ரூ. 90 லிருந்து 109 வரை சம்பளம் பெறுவோருக்குச் சிறிது கூடுதலே ஆகும். இந்தப் புதிய பஞ்சப்படி உயர்வு, அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமல்லாது, ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் அரசாங்க நிதி உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

## கிராமநலம் சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டு சந்தா 1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் முடிவடைகிறது. "கிராமநலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, ஆண்டு சந்தா ரூ. 2 வீதம் சந்தாத் தொகையை "கிராமவளர்ச்சி நெறியாளர், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராமநலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் சந்தாதாரரின் முகவரிக்குமேல் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சந்தா எண்கள்—

27789
29448 முதல் 29471 வரை.
29473 முதல் 29482 வரை
29484 முதல் 29531 வரை
29533
29536 முதல் 29551 வரை
29553 முதல் 29578 வரை
29580 முதல் 29598 வரை
29600
29602 முதல் 29696 வரை
29698 முதல் 29702 வரை
29704 முதல் 29711 வரை
29713 முதல் 29744 வரை
29746 முதல் 29755 வரை
29757 முதல் 29992 வரை
29994 முதல் 29999 வரை
30001 முதல் 30005 வரை
30007 முதல் 30015 வரை
30017 முதல் 30032 வரை
30034 முதல் 30045 வரை
30048 முதல் 30058 வரை
30060 முதல் 30066 வரை
30068 முதல் 30093 வரை
30095

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| காந்தி நூற்றாண்டு விழா | 2 |
| பஞ்சாயத்து உணவு உற்பத்தித் திட்டம் | 4 |
| மரங்களின் பராமரிப்பு—பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள் | 7 |
| நான்காவது திட்டத்தின் சிறப்பியல்புகள் | 9 |
| கேள்வியும்—பதிலும் | 11 |
| கண்டறியாக் கலைநிகழ்ச்சி | 19 |
| உடலுக்கு உரம் | 31 |


## அடுத்த இதழில்...

பிணி தீர்க்கும் அரும்பணி

சத்துணவுத் திட்டம் பற்றிய தேசியக் கருத்தரங்கு

மரங்களின் பராமரிப்பு
(தொடர் கட்டுரை)

சிறு சேமிப்பின் அவசியம் (திரு கே. வெங்கடேசன், ஐ. ஏ. எஸ்., துணைச் செயலாளர், நிதித் துறை)

கிராம மனித சக்தி திட்டம்

குடும்பக்கட்டுப்பாடு பற்றிய சிறப்புக் கட்டுரை


வெளியிடுபவர் :
திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9
Wrapper printed at Hoe & Co. Press, Madras-1.



மலைப் பகுதிகளில் குடி நீர் வசதி...
(நீலகிரி மாவட்டம்)

REGD. NO. M. 7277
© தமிழ் நாடு அரசாங்கம் 1967.



பஞ்சாயத்து உற்பத்தித் திட்டத்தில் (PRODUCTION PROGRAMME)
மீன் வளர்ச்சிக்கு சிறப்பிடம் தரப்பட்டுள்ளது...